TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity



# இலங்கையின் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த பெண் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் தேர்தல் பிரச்சார நிதிசார் சவால்கள் குறித்த ஓர் ஆய்வு

2026



# இலங்கையின்
# சிறுபான்மைச்
# சமூகங்களைச் சேர்ந்த
# பெண் வேட்பாளர்கள்
# எதிர்கொள்ளும்
# தேர்தல் பிரச்சார நிதிசார்
# சவால்கள்
# குறித்த ஓர் ஆய்வு

**2026**

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity

**இலங்கையில் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த பெண் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் தேர்தல் பிரச்சார நிதிசார் சவால்கள் குறித்த ஓர் ஆய்வு - 2026**

ஆய்வு: சமூக விஞ்ஞானிகள் சங்கம்

வடிவமைப்பு: ஹரித தஹநாயக்க

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா

366, நாவல வீதி, நாவல, ராஜகிரிய,

இலங்கை.

Phone: +94 11 4 369 781
Fax: +94 11 2 865 777
Email: tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

Twitter: twitter.com/tisrilanka
LinkedIn: lk.linkedin.com/company/tisrilanka
Facebook: facebook.com/tisrilanka
Instagram: instagram.com/transparency_sri_lanka
YouTube: youtube.com/tisrilankatube

Transparency International Sri Lanka (TISL) is an independent, non-governmental, non-profit and nonpartisan organisation with a vision of Sri Lanka in which government, politics, business, civil society and the everyday lives of citizens are free from corruption. As the fully accredited national chapter in Sri Lanka of the Berlin-based Transparency International (TI), TISL partners and works with TI and its chapters world-wide.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **ஆய்வின் பின்னணி** | 2 |
| மதிப்பீட்டு முறைகளும் ஆய்வின் வரையறைகளும் | 3 |
| ஆவணங்களின் ஆய்வு | 3 |
| அனுபவசார்/களநிலைத் தரவு சேகரிப்பு | 3 |
| தரவுப் பகுப்பாய்வு | 4 |
| ஆய்வின் மட்டுப்பாடுகள் | 4 |
| ஆவண மீளாய்வு | **5** |
| அறிமுகம் | **5** |
| இலங்கையின் தேர்தல் பிரச்சார நிதி குறித்த ஒரு வரலாற்றுப் பார்வை | **5** |
| பெண்கள் எதிர்கொள்ளும் பொருளாதார சமத்துவமின்மையும் நிதிசார் நிலையற்ற தன்மையும் | **7** |
| கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியான தடைகள் | **8** |
| ஆணாதிக்கமும் பாலின சமூக நெறிமுறைகளும் | 8 |
| சமூகப் பழமைவாதமும் பிராந்திய ரீதியான வேறுபாட்டின் பங்கும் | 8 |
| பன்முக காரணிகளின் தொடர்புத்தன்மையும் இரட்டைப் பாகுபாடும் | 8 |
| அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளும் வேட்பாளர் தெரிவுமுறையும் | **9** |
| வெளிப்படைத்தன்மையற்ற உட்கட்சி நிர்வாகமும் முறைசாரா தெரிவு முறைகளும் | 9 |
| பாலினம் மற்றும் பன்முக அடையாள அடிப்படையிலான விலக்கல் | 9 |
| கட்சி நுழைவு தடைகளும் ஆண் மேலாதிக்கம் மிகுந்த தலைமைத்துவ நெறிமுறைகளும் | 9 |
| வியூக நோக்குடைய பெயரளவிலான அடையாளவாதமும் பலவீனமான ஒதுக்கீட்டு அமுலாக்கமும் | 9 |
| சட்ட மற்றும் கொள்கை ரீதியான கட்டமைப்புகளின் வரம்புகள் | **10** |
| ஒதுக்கீடு தொடர்பான சீர்திருத்தங்கள் மற்றும் அடையாளப் பிரதிநிதித்துவம் | 11 |
| ஒப்பீட்டு இலக்கிய ஆய்வு | **11** |
| **ஆய்வு முடிவுகள்** | **13** |
| அரசியல் களத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் | **13** |
| பாலின ரீதியான நடமாட்டத்திறனும் ஒழுக்கம் சார்ந்த கண்காணிப்பும் | 13 |
| பெண்களின் அரசியல் செயற்பாட்டுத் திறனும் பிராந்திய ரீதியான வேறுபாடுகளும் | 14 |
| அடையாள ரீதியான உள்ளடக்கம் மற்றும் பெயரளவு பிரதிநிதித்துவம் | 16 |
| அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல் மற்றும் சரிசமமற்ற இடர்பாடுகள் | 16 |
| பொருளாதார ரீதியான சாதகமற்ற நிலை மற்றும் தேர்தல் பிரச்சார நிதி | 16 |
| பிரச்சார நிதி திரட்டப்படும் வழிகள் | **18** |
| தனிப்பட்ட வளங்கள் | 18 |
| அரசியல் ஆதரவு வலையமைப்புகள் | 19 |
| அரசியல் கட்சி ஆதரவு | 21 |
| தேர்தல் போட்டியில் தேர்தல் பிரச்சார நிதியின் பங்கு | **22** |
| தேர்தல் பிரச்சார நிதியினை ஒழுங்குபடுத்துவதன் முக்கியத்துவம் என்ன? | 24 |
| தேர்தல் பிரச்சார செலவு ஒழுங்குமுறைக்கு இணங்குதல் | **25** |
| செலவினங்களில் காணப்படும் பாலின வேறுபாடுகள் | 25 |
| சட்டம் சார்ந்த அறிவும் விழிப்புணர்வும் | 26 |
| விருந்தோம்பலுக்கும் பிரச்சாரச் செலவுக்கும் இடையிலான ஓர் ஒப்பீடு | 27 |
| **முடிவுரை** | **29** |
| **பரிந்துரைகள்** | **30** |
| வாக்காளர்களுடனான ஈடுபாடு | 30 |
| பெண் அரசியல்வாதிகளுடன் ஈடுபாடு கொள்ளுதல் | 32 |
| அதிகாரசபைகளுடன்/ அதிகாரிகளுடன் ஈடுபாடு கொள்ளுதல் | 33 |
| அரசியல் கட்சிகளுடன் ஈடுபாடு கொள்ளுதல் | 34 |
| **உசாத்துணை** | **35** |

# ஆய்வின் பின்னணி

பெண்களின் அரசியல் உரிமைகளை மேம்படுத்துவதில் இலங்கை ஒரு முன்னோடி நாடாகத் திகழ்கின்றது. 1931 ஆம் ஆண்டிலேயே, ஆசியாவில் முதன்மையான நாடுகளில் ஒன்றாக இலங்கை சர்வஜன வாக்குரிமையை வழங்கியதுடன், 1960 ஆம் ஆண்டில் உலகின் முதலாவது பெண் பிரதமரைத் தெரிவு செய்து உலக வரலாற்றில் தடம் பதித்தது. இத்தகைய அடையாளப் பூர்வமான சாதனைகள் எய்தப்பட்ட போதிலும், கடந்த பல தசாப்தங்களாக அரசியல் செயல்முறைகளில் பெண்களின் உண்மையான பங்கேற்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றது.

உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்காக 25 சதவீத கட்டாய ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியமையானது, 2016 ஆம் ஆண்டில் ஒரு குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றத்தை ஏற்படுத்தியது. 2018 உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் போது அமுல்படுத்தப்பட்ட இச்சீர்திருத்தம், உள்ளூர் அரசியலில் பெண்களின் பங்கேற்பை முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகரித்தது. புள்ளிவிபர அடிப்படையில் நோக்குகையில், ஆயிரக்கணக்கான பெண்களுக்கு அரசியல் அதிகாரக் கதவுகளைத் திறந்துவிடுவதில் இவ் ஒதுக்கீடு வெற்றி கண்டது. இவர்களில் பெரும்பாலானோர் முதன்முறையாகத் தேர்தலில் போட்டியிட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், உள்ளூர் மட்டத்தில் ஏற்பட்டுள்ள இப் பிரதிநிதித்துவ அதிகரிப்பானது, காத்திரமான அரசியல் அதிகாரமளிப்பாக இன்னும் மாற்றமடையவில்லை. குறிப்பாக, விளிம்புநிலைச் சமூகங்களைச் சேர்ந்த பெண் அரசியல்வாதிகள், தமது தேர்தல் பிரச்சாரங்களை வினைத்திறனுடன் முன்னெடுப்பதிலும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் உண்மையான செல்வாக்கைச் செலுத்துவதிலும் பாரிய கட்டமைப்பு ரீதியான மற்றும் நடைமுறைத் தடைகளைத் தொடர்ந்தும் எதிர்கொண்டு வருவதாக அண்மைக்காலச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன (தேர்தல் முறைகளுக்கான சர்வதேச அறக்கட்டளை [IFES], 2022). இத்தடைகளுக்கு மத்தியில், தேர்தல் பிரச்சார நிதிக்கான அணுகல் என்பது மிக முக்கியமான, அதேநேரம் போதியளவு ஆராயப்படாத ஒரு காரணியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மட்டத்திலான தேர்தல் பிரச்சாரங்கள் கூட, தேர்தல் பிரச்சாரத்துக்கு தேவையான அச்சுப்பொருட்களை அச்சிடுதல், பொதுக்கூட்ட ஏற்பாடுகள், போக்குவரத்து மற்றும் ஆதரவு வலையமைப்புகளைத் திரட்டுதல் உள்ளிட்ட பல்வேறு நிதிசார் கோரிக்கைகளை உள்ளடக்கியுள்ளன. ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் கட்சி கட்டமைப்புகள், முறையான நிதி திரட்டும் வாய்ப்புகள் குறைவாக இருத்தல் மற்றும் பெண்களின் நடமாட்ட சுதந்திரம் மற்றும் பொதுவெளி ஈடுபாடுகள் மீதான சமூக, கலாச்சாரக் கட்டுப்பாடுகள் ஆகிய அனைத்தும் பெண் அரசியல்வாதிகள் எதிர்கொள்ளும் நிதி ரீதியான பின்னடைவுகளுக்கு பிரதான காரணிகளாக அமைகின்றன. பலரைப் பொறுத்தவரை, இத்தகைய பிரச்சார வளங்களின் பற்றாக்குறையானது அவர்களின் தேர்தல் போட்டித்திறனை வலுவிழக்கச் செய்வது மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தமாகப் பெண்கள் அரசியல் அரங்கில் கால்பதிப்பதையே முடக்கும் ஒரு தடையாகவும் காணப்படுகின்றது.

இவ் ஆய்வானது, 2023ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 'தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டம்' எனும் மிக முக்கிய சட்டவாக்க வளர்ச்சியிலும் கவனம் செலுத்துகின்றது. இச்சட்டம் தேர்தல் செலவினங்களுக்கான கட்டாய உச்சவரம்புகளை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், அனைத்து வேட்பாளர்களும் தமது பிரச்சாரச் செலவுகளை வெளிப்படுத்தி அறிக்கையிட வேண்டுமென்பதையும் கட்டாயமாக்கியுள்ளது. இச்சீர்திருத்தமானது தேர்தல் களத்தில் ஒரு சமநிலைத்தன்மையையும், மேலதிக வெளிப்படைத்தன்மையையும், பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், வளங்களை அணுகுவதில் சமத்துவமற்ற நிலையிலுள்ள வேட்பாளர்கள் குறிப்பாக விளிம்புநிலைச் சமூகங்களைச் சேர்ந்த பெண் வேட்பாளர்கள் மீது இச்சட்டம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது.

இப் பின்னணியில், உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் களமிறங்கும் விளிம்புநிலை சமூகப் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சார நிதியியல் சார் தடைகளை ஆராய்வதே இவ் ஆய்வின் குறிக்கோளாகும். பாலினப் பாகுபாடு, நிதி வசதிகள் மற்றும் அரசியல் பங்கேற்பு ஆகியவற்றுக்கு இடையிலான பிணைப்பை ஆராய்வதன் ஊடாக, இலங்கையில் பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கு ஏற்றதொரு சூழலை உருவாக்குவதற்கான ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்க இவ் ஆய்வு முயல்கிறது. இருப்பினும், இவ் ஆய்வு முக்கியமாக நிதி ரீதியாகவும், இன ரீதியாகவும் அல்லது கலாச்சார ரீதியாகவும் சவால்களை எதிர்கொள்ளும் விளிம்புநிலை

பெண்களை மட்டுமே மையப்படுத்தியுள்ளது என்பதை கவனத்திற்கொள்வது அவசியமாகும். எனவே, அரசியல் கலாசார ரீதியாக ஏற்கனவே சாதகமான நிலையில் உள்ள அல்லது காலப்போக்கில் வெற்றிகரமான அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்தி கொண்டுள்ள பெண்களுக்கு இவ் ஆய்வின் முடிவுகள் முழுமையாகப் பொருந்தாமல் போகலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதிப்பீட்டு முறைகளும் ஆய்வின் வரையறைகளும்

இவ்வாய்வானது 'பின்-நேர்மறைவாத' **(Post-positivist)** ஆய்வு அணுகுமுறையைப் பின்பற்றுகின்றது. இது ஒரு புறநிலை யதார்த்தத்தின் (**Objective reality)** இருப்பை ஏற்றுக்கொள்வதுடன், சிக்கலான சமூக நிகழ்வுகளைப் புரிந்துகொள்வதில் தனிநபர்களின் அகநிலை அனுபவங்களின் (**Subjective experiences)** மதிப்பையும் அங்கீகரிக்கின்றது. இங்கு குறிப்பாக வாழ்வியல் அனுபவங்களும் சூழல்சார் காரணிகளும் மிக முக்கியப் பங்காற்றுவதால், அரசியல் பங்களிப்பு மற்றும் தேர்தல் பிரச்சார நிதி ஆகியவற்றில் செல்வாக்கு செலுத்தும் பாலின வேறுபாடுகளையும் பரிமாணங்களையும் கண்டறிய இக்கோட்பாட்டு வடிவம்/ஆய்வு முன்னுதாரணம் (**Paradigm)** மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது.

உள்ளூராட்சி மட்டத்தில் பெண் அரசியல்வாதிகள் எதிர்கொள்ளும் தேர்தல் நிதிசார் தடைகளை விரிவாகவும், துல்லியமாகவும் ஆராய்வதற்கு ஏதுவாக, இவ் ஆய்வு வடிவமைப்பு பண்புசார் ஆய்வு முறைகளை உள்ளடக்கியுள்ளது. இவ்வாய்வானது மூன்று பிரதான கட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது:




### ஆவணங்களின் ஆய்வு

இவ் ஆய்வானது, இலங்கையில் பெண்களின் அரசியல் பங்கேற்பு மற்றும் தேர்தல் பிரச்சார நிதி தொடர்பான கல்விசார் இலக்கியங்கள், கொள்கை ஆவணங்கள் மற்றும் சிவில் சமூக அறிக்கைகள் ஆகியவற்றின் விரிவான மீளாய்வுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆய்விற்கான சூழல்சார் கட்டமைப்பை அல்லது பின்னணி சூழலை தீர்மானிப்பதற்கும், கள ஆய்வுக்கட்டத்திற்கு வழிகாட்டக்கூடிய முக்கிய விடயபரப்புகள் மற்றும் கருப்பொருள்களை அடையாளம் காண்பதற்கும் இக்கட்டம் மிக முக்கியமானதாக அமைந்தது.

### அனுபவசார்/களநிலைத் தரவு சேகரிப்பு

விரிவான/ஆழமான நேர்காணல்கள் (In-Depth Interviews):
அரசியல்வாதிகளுடன் (ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கியதாக) இந் நேர்காணல்கள் நடாத்தப்பட்டன. இதன்போது, அவர்களின் தனிப்பட்ட வாழ்வியல் அனுபவங்கள் மற்றும் பதிவுகள், தேர்தல் பிரச்சார அனுபவங்கள், நிதித் திரட்டல் உத்திகள் மற்றும் நிதிசார் ஆதரவைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் எதிர்கொள்ளும் தடைகள் ஆகியவை குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

முக்கிய தகவல்தருநர் நேர்காணல்கள் (Key Informant Interviews): இவை அரசியல் ஆய்வாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மகளிர் உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடாத்தப்பட்டன. அரசியல்வாதிகளிடமிருந்து பெறப்பட்ட தனிநபர் மட்டத்திலான தரவுகளுக்கு மேலதிகமாக, பெண்கள் பிரச்சார நிதியை அணுகுவதில் செல்வாக்கு செலுத்தும் நிறுவன மற்றும் கட்டமைப்பு ரீதியான காரணிகள் குறித்து விரிவான பார்வையை இந் நேர்காணல்கள் வழங்கின.

இவ் ஆய்வின் கீழ் மொத்தமாக 36 நேர்காணல்கள் நடாத்தப்பட்டன:

- உள்ளூராட்சி மட்டத்திலான பெண் அரசியல்வாதிகளுடன் 24 நேர்காணல்கள்,
- உள்ளூராட்சி மட்டத்திலான ஆண் அரசியல்வாதிகளுடன் 7 நேர்காணல்கள் (ஒப்பீட்டு நோக்கத்திற்காக),
- பெண் துறைசார் நிபுணர்கள் மற்றும் முக்கியத் தகவல்தருநர்களுடன் 6 நேர்காணல்கள்,
- ஆண் துறைசார் நிபுணர்கள் மற்றும் முக்கியத் தகவல்தருநர்களுடன் 3 நேர்காணல்கள்.

இவ்வாய்விற்கான நேர்காணல்கள் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டன. இனத்துவப் பன்முகத்தன்மை, அரசியல் சூழல் மற்றும் சமூக-பொருளாதார நிலைமைகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் இம்மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. மேலும், வெவ்வேறு சிறுபான்மை மற்றும் பெரும்பான்மைச் சமூகங்களுக்கு இடையிலான ஓர் ஒப்பீட்டுப் பார்வையை வழங்குவதற்கு இம்மாவட்டங்களின் தெரிவு வழிவகுத்தது.

## தரவுப் பகுப்பாய்வு

அனைத்து நேர்காணல் தரவுகளும் 'கருப்பொருள் பகுப்பாய்வு' மற்றும் 'விவரிப்புப் பகுப்பாய்வு' ஆகிய நுட்பங்களினூடாக விரிவான ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. கருப்பொருள் பகுப்பாய்வானது, தரவுகளில் மீண்டும் மீண்டும் தென்படும் பொதுவான போக்குகளையும் தடைகளையும் துல்லியமாக அடையாளங்காண உதவியது. அதே வேளை, விவரிப்புப் பகுப்பாய்வு முறையானது, நிதி நெருக்கடிகளைக் கையாளுவதற்குப் பெண் அரசியல்வாதிகள் பயன்படுத்திய உத்திகளை ஆழமாகப் புரிந்துகொள்ள வழிகோலியது.

## ஆய்வின் வரையறைகள்

பெண் அரசியல்வாதிகள் தேர்தல் நிதியாக்கத்தின் போது எதிர்கொள்ளும் சவால்களை ஆராய்வதில் இவ்வாய்வு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தாலும், சில வரையறைகளை கவனத்தில் கொள்ள வேண்டும்:

ஆய்வின் பரப்பு மற்றும் அளவு: இவ்வாய்வானது ஐந்து மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட 36 நேர்காணல்களுடன் வரையறுக்கப்பட்டுள்ளது. இது விடயப்பரப்பை ஆழமாக ஆராய வழிவகுத்தாலும், ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத, வேறுபட்ட அரசியல் அல்லது மக்கட்தொகை பண்புகளைக் கொண்ட ஏனைய பகுதிகளில் காணப்படும் அனுபவங்களை இத்தரவுகள் முழுமையாக உள்ளடக்காமல் இருக்கலாம். எனவே, நாடு முழுவதற்குமான அனுபவங்களின் ஒட்டுமொத்தப் பன்முகத்தன்மையை இவ் ஆய்வு முழுமையாகப் பிரதிபலிக்காமல் போகலாம்.

ஆய்வுப் பொருளின் சிக்கல்தன்மை (Sensitive Nature): தேர்தல் நிதி வழங்கல் தொடர்பான கலந்துரையாடல்கள், குறிப்பாக முறைசாரா வழிமுறைகள், கட்சி உட்புறச் செயல்பாடுகள் மற்றும் உள்ளக பாரபட்சங்கள் போன்றவை மிகவும் சிக்கலானதும் எளிதில் வெளியிட முடியாததுமான விடயங்களாகும். இதன் காரணமாக, சில பங்கேற்பாளர்கள் தகவல்களை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்வதில் தயக்கம் காட்டியிருக்கலாம். இது தரவுகளின் முழுமைத்தன்மையை ஓரளவிற்கு மட்டுப்படுத்தியிருக்க வாய்ப்புள்ளது.

மேற்குறிப்பிட்ட மட்டுப்பாடுகள் காணப்பட்ட போதிலும், இலங்கையின் உள்ளூர் அரசியலில் பெண்களின் ஈடுபாட்டைக் கட்டுப்படுத்தும் நிதிசார் சவால்கள் குறித்த முக்கியமான தகவல்களை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது. பல்வேறு பிரதேசங்களை உள்ளடக்கியதோடு, வேட்பாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களையும் உள்வாங்கியதன் மூலம், விளிம்புநிலை சமூகப் பின்னணியைக் கொண்ட பெண்களின் தேர்தல் பிரச்சார நிதிச் சூழல் பற்றிய ஒரு நடைமுறை ரீதியான மற்றும் சூழல் சார் புரிதலை இவ் ஆய்வு முன்வைக்கின்றது.

# ஆவணங்களின் மீளாய்வு

## அறிமுகம்

இலங்கையில், அதிலும் விசேடமாக இன மற்றும் மதச் சிறுபான்மைப் பின்னணியைக் கொண்ட பெண்கள் தேர்தல் அரசியலில் பிரவேசிக்க முற்படும்போது, சிக்கலான கட்டமைப்பு மற்றும் முறைமைசார் தடைகளை எதிர்கொள்கின்றனர். இவர்கள் எதிர்கொள்ள நேரிடும் சவால்களில் மிக முக்கியமான, அதேவேளை போதியளவு ஆய்வுக்குட்படுத்தப்படாத ஒன்றாகத் தேர்தல் பிரச்சார நிதி சார்ந்த சவால்கள் விளங்குகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், கட்சிகளிடமிருந்து நிதி பெறுவதில் உள்ள வரையறைகள், வெளிப்படைத்தன்மையற்ற வேட்புமனுத் தெரிவு முறைகள் மற்றும் கட்டமைப்புசார் புறக்கணிப்புகள் என்பன இச்சிறுபான்மைப் பெண்களின் அரசியல் பங்கேற்பைப் பெருமளவு கட்டுப்படுத்துகின்றன. இவற்றுடன், விசுவாசத்தின் அடிப்படையில் இயங்கும் வலையமைப்புகள், ஆணாதிக்க விழுமியங்கள் மற்றும் சலுகைசார் அரசியல் (சலுகைகளை வழங்கி வாக்குகளை அல்லது ஆதரவைப் பெறும் முறை) என்பன ஆழமாக வேரூன்றியுள்ள இலங்கையின் அரசியல் கலாசாரமானது, நிலைபெற்ற அதிகாரப் படிநிலைக்கு வெளியே உள்ளவர்களைத் திட்டமிட்டுப் புறக்கணிக்கின்றது.

இலங்கையின் பாலின அரசியலில் நிலவும் முரண்பாடான நிலையை கொடிகார (2011) மிகத் தெளிவாக சுட்டிக்காட்டுகிறார்: கல்வி, எழுத்தறிவு மற்றும் சுகாதாரம் ஆகிய சமூகக் குறிகாட்டிகளில் பெண்கள் முன்னிலையில் இருந்தபோதும், அவர்களது அரசியல் பிரதிநிதித்துவமானது தெற்காசியாவிலேயே மிகக் குறைந்த மட்டத்திலேயே தொடர்கின்றது. இம் முரண்பாடானது, அனைவரையும் உள்ளடக்கிய பங்கேற்பை உறுதிப்படுத்துவதில், குறிப்பாகப் பெண்களை உள்ளடக்குவதில், முறையான ஜனநாயக நிறுவனங்கள் கொண்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட செல்வாக்கைப் பிரதிபலிக்கின்றது (விக்ரமசிங்க மற்றும் கொடிகார, 2012; IFES, 2022). 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, நாடாளுமன்றத்தில் 5.3% இடங்களையும், உள்ளூராட்சி மன்றங்களில் 2%க்கும் குறைவான இடங்களையுமே பெண்கள் வகித்தனர். இது பாலின சமத்துவ சுட்டிகளில் நேபாளம் மற்றும் பங்களாதேஷ் போன்ற பிராந்திய நாடுகளை விட இலங்கையைப் பின்தங்கச் செய்தது (IFES, 2022). இருப்பினும், 2024 நாடாளுமன்றத் தேர்தல் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை அடையாளப்படுத்தியது. தேசிய மக்கள் சக்தி கூட்டணி (NPP) 159 இடங்களைக் கைப்பற்றி வரலாற்றுப் பெரும்பான்மையைப் பெற்றதுடன், இலங்கையின் மிகக்கூடுதலான எண்ணிக்கையிலான பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உருவாக்கியுள்ளது. இதில் 21 பெண்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, தேசியப் பட்டியல் ஊடாகவும் சிலர் நியமிக்கப்பட்டனர். இதன் விளைவாக மொத்தப் பெண் பிரதிநிதித்துவமானது சுமார் 9.8% ஆக அதிகரித்துள்ளது (தேர்தல் ஆணைக்குழு, 2024).

பாலினம், பொருளாதார ரீதியிலான நலிவடைந்த நிலை, அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் மற்றும் ஒட்டுமொத்த அரசியல் கலாசாரம் ஆகிய காரணிகள் ஒன்றிணைந்து, இலங்கையின் சிறுபான்மைப் பெண்களுக்கான தேர்தல் நிதிச் சூழலையும் அவர்களது அரசியல் பிரவேசத்தையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை இவ் ஆவண மீளாய்வு விமர்சன ரீதியாக ஆய்வு செய்கிறது.

## இலங்கையின் பிரச்சார நிதி குறித்த ஒரு வரலாற்றுப் பார்வை

இலங்கையின் தேர்தல் பிரச்சார நிதி நடைமுறைகளானது, காலனித்துவத்தின் கீழ் பிரித்தானியர் காலத்தில் அறிமுகமான பிரதிநிதித்துவ ஜனநாயகத்துடன் ஆரம்பமாகிறது. 1947 ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல்கள் தொடர்பான அரசவைக் கட்டளையானது, தேர்தல் நிதியைக் கட்டுப்படுத்துவதற்கான ஆரம்பகால விதிகளை உருவாக்கியதோடு, சுதந்திரத்தின் பின்னரான தேர்தல்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்தது. அக்காலத்தில் தேர்தல் பிரச்சாரங்களுக்கான நிதி திரட்டுதல் என்பது ஓர் எளிமையான விவகாரமாகவே இருந்தது. அரசியல் கட்சிகள் ஒழுங்கமைப்பு ரீதியாக ஓரளவிற்கு ஒத்துழைப்பு வழங்கினாலும், வேட்பாளர்கள் தங்களது சொந்தப் பணத்தையும் சொத்துக்களையுமே தேர்தல் செலவுகளுக்காகப் பெருமளவில் பயன்படுத்தினர்.

இலங்கையின் ஆரம்பகால ஜனநாயகக் காலத்தில் தேர்தல் நிதி எவ்வாறு கையாளப்பட்டது என்பது குறித்து வாட்வார்ட் (1969) முக்கியமான தகவல்களை வழங்குகிறார். அக்காலகட்டத்தில் அரசியல்

நிதியானது தனிநபர்களை மையப்படுத்தியதாகவும், முழுமையாக ஓரிடத்தில் மத்திமமயப்படாது சிதறிய நிலையிலுமே காணப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் முறையான நிறுவன நிதிக்கு பதிலாக தனிநபர்களின் சொத்துக்களையே நம்பியிருந்தன. ஐக்கிய தேசியக் கட்சியிடம் அதிக நிதியிருந்தாலும், அது நாடு முழுவதும் ஒரே அளவில் சீராக இருக்கவில்லை. கொழும்பு மற்றும் மேல் மாகாணத்தின் சில பகுதிகளைத் தவிர்த்து, ஏனைய இடங்களில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தங்களது சொந்த ஏற்பாடுகளிலேயே நிதி திரட்ட வேண்டியிருந்தது (வாட்வார்ட், 1969). இந்தச் சமமற்ற முறையினால், ஒரு வேட்பாளர் எவ்வளவு சிறப்பாகப் பிரச்சாரம் செய்வார் என்பது அவரது சொந்தப் பணவசதி மற்றும் உள்ளூர் வலையமைப்புகளுடனான தொடர்புகளிலேயே தங்கியிருந்தது.

நிதி ஆதரவு வழங்கக்கூடிய நிறுவன ரீதியான ஏற்பாடுகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மிகவும் அரிதாகவே காணப்பட்டன. கட்சியின் ஆரம்பக் கட்டத் தேர்தல்களுக்குத் தேவையான நிதி ஆதரவு பெரும்பாலும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் தனிப்பட்ட சொத்துக்களிலிருந்தே பொறுப்பேற்கப்பட்டன.

மத்திய கட்சி ஒருங்கிணைப்பு என்பது அக்காலத்தில் பெயரளவில் மட்டுமே இருந்தது. தேர்தல் கொள்கை பிரகடனங்களின் பிரதிகளை வேட்பாளர்களுக்குக் கொடுப்பதோடு மத்திய அலுவலகத்தின் பணி முடிவடைந்ததாக வாட்வார்ட் (1969) கூறுகிறார். ஒரு மத்திய கட்டமைப்பு இல்லாததும், வேட்பாளர்கள் தமது சொந்தப் பணத்தையே தேர்தல் பிரச்சாரங்களுக்காக பயன்படுத்தியதும், ஆரம்பகால தேர்தல் நிதிசார் முறைகளானது ஒரு முறையான கட்சி ஆதரவைச் சார்ந்திருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றன. மாறாக, செல்வந்தர்களின் பணமும் முறைசாரா பரஸ்பர உடன்பாடுகளுமே ஆரம்பகால தேர்தல் நிதிசார் நடைமுறைகளை தீர்மானித்தன.

காலப்போக்கில், அரசியல் முறைமை வளர்ச்சியடைந்து தேர்தல்களில் போட்டி அதிகரித்தபோது, பிரச்சார நிதி திரட்டுவதும் போட்டி நிறைந்த, பரவலாக்கப்பட்ட ஒரு முயற்சியாக மாறியது. அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தமக்குத் தேவையான நிதியை வெளிப்படையற்ற மற்றும் முறைசாரா வழிகளில் தாமாகவே திரட்ட ஆரம்பித்தனர் (வெளிக்கல, 2015). குறிப்பாக, 1978 அரசியலமைப்பினால் கொண்டுவரப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறையும் விருப்பு வாக்கு முறையும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தின. இதனால் தேர்தல்கள் முன்பை விடக் கடினமாகின. அதேநேரம் பிரச்சாரங்களின் நோக்கமும் மாறியது. வேட்பாளர்கள் மாற்றுப் பாராளுமன்றக் கட்சிகளுடன் மட்டும் போட்டியிடாமல், கட்சிக்குள்ளேயே இருக்கும் சக உறுப்பினர்களுடன் விருப்பு வாக்குகளுக்காகப் போட்டியிட வேண்டிய சூழல் உருவானது (பீரிஸ், 2023).

ஒரே கட்சிக்குள் நிலவிய இப் போட்டியானது தேர்தல் செலவுகளை வெகுவாக உயர்த்தியது. கட்சியை முன்னிலைப்படுத்துவதற்கு மட்டுமல்லாமல் வேட்பாளர்கள் தங்களது சொந்த வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காகவும் கவர்ச்சிகரமான பிரச்சாரங்களைச் செய்ய வேண்டியிருந்தது. கட்சி வெற்றிபெற வேண்டும், அதேநேரம் தமக்கும் அதிக விருப்பு வாக்குகள் கிடைக்க வேண்டும் என்ற இந்த இரட்டிப்புத் தேவைப்பாடு, வேட்பாளர்களைத் தமது சொந்தப் பணத்தை தேர்தல் பிரச்சாரத்தில் அதிகளவில் பயன்படுத்தத் தூண்டியது. பீரிஸ் (2023) அவதானித்தபடி, விகிதாசாரத் தேர்தல் முறையினால் அரசியல் தனிநபர் மயமாகியமை, தேர்தல்களை பெரும் பணப்பந்தயமாக மாற்றியதோடு ஒட்டுமொத்த அரசியல் சூழலையும் பணத்தின் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தது.

1977 இன் பொருளாதாரத் தாராளமயமாக்கல் சீர்திருத்தங்கள், இலங்கையின் தேர்தல் நிதிச் சூழலை மேலும் சிக்கலானதாக மாற்றின. திறந்த பொருளாதாரக் கொள்கையினால், தனியார் நிறுவனங்களின் அனுசரணை, உத்தியோகபூர்வமற்ற நன்கொடைகள் மற்றும் அதிகாரப் பலம் கொண்ட குழுக்களின் ஊடாகப் பெருமளவு பணம் அரசியலுக்குள் புகுந்தது (வேணுகோபால், 2011). இதனால் தேர்தல் பிரச்சாரங்கள், அதிகப் போட்டி நிறைந்தவையாக மாறியதோடு ஊழல் மற்றும் முறையற்ற அரசியல் கொடுக்கல் வாங்கல்கள் அதிகம் இடம்பெறும் சலுகை சார் அரசியலுக்குள்ளாகின. முறையான கண்காணிப்பு விதிகள் இல்லாத நிலையில், கணக்கில் வராத நிதியின் புழக்கம் அதிகரித்தது. இதன் விளைவாக, தேர்தலில் போட்டியிடுவதில் பணபலமிக்க வேட்பாளர்களுக்கும் குறைந்த வசதி

கொண்ட வேட்பாளர்களுக்கும் இடையில் பாரிய சமமின்மை உருவாகியது (ட்ரான்ஸ்பரென்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா, 2015).

அரசியல் பிரதிநிதித்துவத்தில் இந்த மாற்றங்கள் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. பிரச்சாரங்களுக்கான செலவுகள் உயர்ந்துள்ள நிலையில், கட்சியின் வேட்புமனுவை உறுதிப்படுத்துவதற்கும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கும் பணபலம் என்பது ஒரு எழுதப்படாத நடைமுறை விதியாகிவிட்டது. உயர் செல்வந்த வர்க்கத்தை சேர்ந்த கட்சித் தலைமைகள் செல்வந்தர்களுக்கும் அதிகாரப் பின்னணி கொண்டவர்களுக்குமே முன்னுரிமை வழங்குகின்றன; இது புதியவர்கள், குறிப்பாகப் பெண்கள் மற்றும் சிறுபான்மை வேட்பாளர்கள் அரசியல் களத்தில் நுழைவதை மிகவும் கடினமாக்கியுள்ளது (விக்ரமசிங்க மற்றும் கொடிகார, 2012). விகிதாசாரத் தேர்தல் முறையின்கீழ் தேர்தல் தொகுதிகள் விரிவான நிர்வாக அலகுகளாக மாற்றப்பட்டமை, தேர்தல் பிரச்சாரங்களை (குறிப்பாக வீடு வீடாக சென்று வாக்கு திரட்டல்) அதிக வளங்கள் தேவைப்படும் ஒரு முயற்சியாக மாற்றியுள்ளது என விக்ரமசிங்க மற்றும் கொடிகார (2012) குறிப்பிடுகின்றனர். இது அனைத்து வேட்பாளர்களுக்கும் ஒரு சவாலாக இருப்பினும், பொதுவாகக் குறைந்த பொருளாதாரப் பலத்தையும் குறைவான நிறுவன ரீதியான தொடர்புகளையும் கொண்டுள்ள பெண்களுக்கு இது ஒரு பெரும் சுமையாக அமைந்துள்ளது.

இதன் விளைவாக, இலங்கையின் இன்றைய தேர்தல் பிரச்சார நிதி முறைமையானது, நீண்டகால நிறுவன ரீதியான வளர்ச்சி, அரசியல் போட்டி மற்றும் பொருளாதார மாற்றங்களின் பிரதிபலிப்பாக விளங்குகின்றது. ஆரம்பத்தில் ஒப்பீட்டளவில் மிகச் சாதாரணமான தனிநபர் பிரச்சார முறையாக தொடங்கியது, இன்று பெரும் பணபலம் கொண்ட, உயர் அரசியல் வர்க்கத்தினரால் வழிநடத்தப்படும், அதிக பொருட்செலவு மற்றும் அதிக சவால்கள் நிறைந்த ஒரு பந்தயமாக மாறியுள்ளது. இந்த மாற்றத்தின் விளைவுகள், குறிப்பாக விளிம்புநிலைச் சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவர்கள் கட்சி கட்டமைப்புகள் மற்றும் நிதி உதவி பொறிமுறைகள் ஆகிய இரண்டிலிருந்தும் திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர்.

## பெண்கள் எதிர்கொள்ளும் பொருளாதார சமத்துவமின்மையும் நிதிசார் நிலையற்ற தன்மையும்

இலங்கையில் பெண்களின் அரசியல் பங்கேற்பை தடுக்கும் ஒரு பிரதான மற்றும் நிலையான தடையாக அவர்களுக்கு நிதி ஆதாரங்கள் கிடைப்பதில் உள்ள வரையறுக்கப்பட்ட அணுகலை குறிப்பிடலாம். இது அவர்கள் தேர்தல்களில் போட்டியிடும் வாய்ப்பை மட்டுப்படுத்துவதுடன், அரசியலில் நீடித்திருப்பதை சவாலுக்குள்ளாக்குகிறது. பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி, இன்றைய அரசியல் களத்தில் பணபலமும் அதிகாரத் தொடர்புகளும் வெற்றியைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளாக உள்ளன. இத்தகைய சூழலில், பொருளாதாரப் பலம் என்பது பிரச்சாரங்களை முன்னெடுப்பதற்கான ஒரு வசதி என்பதைத் தாண்டி, ஒரு வேட்பாளர் தனது அரசியல் ஆளுமையை நிலைநிறுத்துவதற்கும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கும் அரசியலில் வெற்றி பெறுவதற்கும் அவசியமான ஒரு கருவியாக உருமாறியுள்ளது (விக்ரமசிங்க மற்றும் கொடிகார, 2012; வெளிகல, 2015).

பொருளாதாரப் பங்கேற்பைப் பொறுத்தமட்டில் இலங்கைப் பெண்கள் இன்றும் பாரியளவில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2022) தரவுகளின்படி, தொழிலாளர் சந்தையில் ஆண்களின் பங்களிப்பான 70.5% உடன் ஒப்பிடுகையில் பெண்களின் பங்களிப்பு 32.1% என்ற மிகக் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. மேலும், பெண்களின் வேலையின்மை விகிதம் சுமார் 6.5% ஆகக் காணப்படுவதுடன், இது ஆண்களின் வேலையின்மை விகிதத்தைப் போல ஏறத்தாழ இருமடங்காகும். பணியாற்றும் பெண்களில் பெரும்பாலோர் ஆடை உற்பத்தி, வீட்டுப் பணி மற்றும் பெருந்தோட்டங்கள் போன்ற குறைந்த ஊதியம் தரும் முறைசாரா அல்லது பாதுகாப்பற்ற வாழ்வாதாரங்களையே நம்பியுள்ளனர். இத்தகைய முறைசாராத் துறைகள் அவர்களுக்குப் போதுமான ஒருமித்த வருமானத்தையோ, சேமிப்பையோ அல்லது சுயமான நிதிப் பாதுகாப்பையோ வழங்குவதில்லை (குணதிலக, 2013; ஜயவர்தன, 1986).

பெண்களின் பொருளாதார நலிவுறுநிலைக்கு சொத்துரிமை மற்றும் வாரிசுரிமை தொடர்பான சமூகக் கட்டமைப்பு ஒரு முக்கிய காரணமாகும். நிலம் அல்லது பெறுமதியான சொத்துக்கள் பெண்களின் பெயரில் இருப்பது அரிதாகவே உள்ளது. இவையே கடன் பெறுவதற்கும், தேர்தல் நிதியைத் திரட்டுவதற்கும், கட்சித் தலைமைகளால் ஒரு தகுதியான வேட்பாளராக அங்கீகரிக்கப்படுவதற்கும் அவசியமான முன்நிபந்தனைகளாக காணப்படுகின்றன (டி.மெல், பீரிஸ், மற்றும் கோமஸ், 2013). மேலும், ஊதியம் வழங்கப்படாத வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் பெண்கள் அதிக நேரத்தைச் செலவிடுவதால், அவர்களால் மேலதிக வருமானம் ஈட்டும் வேலைகளில் ஈடுபடவோ அல்லது தேர்தல் பிரச்சாரங்களுக்காகத் தங்களது நேரத்தையும் பணத்தையும் செலவிடவோ முடிவதில்லை (கொட்டேகொட, 2023).

விளிம்புநிலை இன மற்றும் மதக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள், குறிப்பாக தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் சமூகங்களிடையே இப் பொருளாதாரச் சமமின்மைகள் இன்னும் மிகத் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. கட்டமைப்பு ரீதியான பாகுபாடு, வரலாற்று ரீதியான ஓரங்கட்டப்படல் மற்றும் புவியியல் ரீதியான தனிமைப்படுத்தல் ஆகியன இவர்கள் அரச மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புகளைப் பெறுவதிலும், நிதிச் சேவைகள் மற்றும் கல்வியை அணுகுவதிலும் பாரிய தடைகளை உருவாக்கியுள்ளன. உதாரணமாக, தோட்டத்துறையைச் சேர்ந்த பெண்கள் நாட்டின் மிகக்குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களாக இருப்பதுடன், மொழிசார்ந்த, இடஞ்சார்ந்த மற்றும் சமூகத் தடைகளால் பொது வாழ்வில் பங்கேற்பதிலிருந்து கடுமையாகக் கட்டுப்படுத்தப்படுகின்றனர் (ஜயவர்தன, 2017). இவ்வாறு பாலினம், இனம் மற்றும் வர்க்கம் ஆகிய காரணிகள் ஒன்றிணைந்து உருவாக்கும் பன்முகத் தாக்கம் (Intersectionality), முறையான கட்டமைப்பு ரீதியான தலையீடுகள் இன்றி கடக்க முடியாத பல அடுக்கு நிதிப் புறக்கணிப்புகளைத் தோற்றுவிக்கின்றது.

இதன் விளைவாக, குறிப்பாக விளிம்புநிலை இனக்குழுக்கள் மற்றும் உழைக்கும் வர்க்கப் பின்னணியைச் சேர்ந்த பெண்கள், தேர்தல் பிரச்சாரங்களுக்கான பாரிய செலவுகளை எதிர்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக, தேர்தல் பிரச்சாரத்துக்கு அவசியமான விளம்பரப் பொருட்களை அச்சிடுதல், கூட்டங்களை ஏற்பாடு செய்தல், பிரச்சாரப் பணியாளர்களை நியமித்தல் மற்றும் பரந்த தேர்தல் தொகுதிகள் எங்கும் பயணம் செய்தல் போன்ற தேர்தல் பிரச்சார செலவுகளை ஈடுகட்டத் தேவையான நிதிப்பலம் இப் பெண்களிடம் இருப்பதில்லை (விக்ரமசிங்க மற்றும் கொடிகார, 2012). கட்சி நிதிகள், வர்த்தக, நன்கொடையாளர் வலையமைப்புகள் மற்றும் செல்வாக்கு மிக்க நபர்களிடமிருந்து கிடைக்கும் முறைசாரா ஆதரவு என்பன பெரும்பாலும் ஆண்களின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதால் இவற்றை அணுகுவதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே பெண்களுக்கு கிடைக்க பெறுகின்றது. தனியார் நிதி ஆதாரங்களை அதிகளவில் சார்ந்திருக்கும் தற்போதைய அரசியல் போக்கு, ஏற்கனவே நிலவும் பாலினச் சமமின்மைகளை ஆழப்படுத்துவதுடன், வளங்களை அணுகுவதில் காணப்படும் பாரபட்சங்களால் பெண்களை விகிதாசாரமற்ற முறையில் பாதிப்புக்குள்ளாக்குகிறது (அத்துகோரல, 2021; UNFPA, 2025).

சுருக்கமாகக் கூறின், தொழிலாளர் சந்தையில் பெண்களின் குறைந்த பங்கேற்பு, வருமானப் பகிர்வில் நிலவும் சமமின்மை, வரையறுக்கப்பட்ட சொத்துரிமை மற்றும் அரசியல் நிதி வழங்கல் கட்டமைப்புகளிலிருந்து அவர்கள் விலக்கி வைக்கப்படுதல் ஆகிய பன்முகக் காரணிகளின் ஒன்றிணைந்த தாக்கம், பெண்கள் அரசியலுக்குள் நுழைவதையும் ஒரு நீண்டகால அரசியல் ஆளுமையாக நிலைத்து நிற்பதற்கான வாய்ப்பையும் அவர்களுக்கு இழக்கச் செய்கிறது. இத்தகைய பொருளாதாரத் தடைகளுக்கு உரிய தீர்வு காணப்படாதவரை, நிதிப் பாதுகாப்பின்மையானது ஒரு 'வாயிற்காவலனாக' (Gatekeeper) நின்று, குறிப்பாக விளிம்புநிலைச் சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் தேர்தல் அரசியலில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதைத் தொடர்ந்து தடுத்து நிறுத்தும்.

## கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியான தடைகள்

பொருளாதாரச் சமமின்மையைத் தாண்டி, ஆணாதிக்கம், சமூகப் பழமைவாதம் மற்றும் பாலின அடிப்படையிலான அதிகாரப் படிநிலைகளில் வேரூன்றியுள்ள கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியான தடைகள், பெண்களின் தேர்தல் நிதித் திரட்டலையும் அரசியல் பங்கேற்பையும் பெருமளவு பாதிக்கின்றன. இலங்கையின் அரசியல் கலாசாரம் மற்றும் சமூக நெறிமுறைகளில் ஆழமாகப் பதிந்துள்ள இத்தகைய கட்டுப்பாடுகள், அரசியலை ஒரு 'ஆண்களுக்கான களம்'என்ற விம்பத்தை

நிலைநிறுத்துகின்றன. இவை பெண்களை முறைசார் நிறுவன ரீதியான கட்டமைப்புகளில் இருந்தும், தீர்மானங்களை மேற்கொள்ளும் முறைசாரா அதிகார வலையமைப்புகளில் இருந்தும் தொடர்ச்சியாக அந்நியப்படுத்துகின்றன.

### ஆணாதிக்கக் கட்டமைப்பும் பாலின அடிப்படையிலான சமூக நெறிமுறைகளும்

இலங்கையில் ஆணாதிக்கக் கட்டமைப்புகள் கொண்டுள்ள அதீத செல்வாக்கு, அரசியல் நிதி வழங்கலில் இருந்து பெண்கள் புறக்கணிக்கப்படுவதை தீர்மானிப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றது (விக்ரமசிங்க மற்றும் கொடிகார, 2012). பெண்ணிய நிறுவனமயவாதக் (Feminist Institutionalism) கோட்பாட்டினைத் துணையாகக் கொண்டு, குரூக் மற்றும் மெக்கே (2011) போன்ற ஆய்வாளர்கள் முன்வைக்கும் வாதத்தின்படி, பெண்களின் அரசியல் செயற்பாட்டுத்திறனை (Political Agency) கட்டுப்படுத்துவதில், ஆண்களின் ஆதிக்கத்திலுள்ள அரசியல் வலையமைப்புகள், அரசியல் ஆதரவு முறைமைகள் மற்றும் தலைமைத்துவம் குறித்த சமூக எதிர்பார்ப்புகள் போன்ற முறைசாரா நிறுவனங்கள் உத்தியோகபூர்வ விதிகளுடன் ஒன்றித்து செயல்படுகின்றன. இத்தகைய முறைசாரா நெறிமுறைகள் ஒரு நம்பகமான' வேட்பாளருக்கான தகுதியம்சங்களை வரையறுப்பதோடு, நிதி மூலதனம், உயர்மட்டச் சமூகத் தொடர்புகள் மற்றும் குடும்ப அரசியல் பெருமைகளைக் கொண்ட ஆண்களுக்கே தொடர்ச்சியாகக் களம் அமைத்துக் கொடுக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தமட்டில், ஆணாதிக்க வழக்கங்கள் அல்லது நெறிகள் அரசியல் கட்சிகளில் நிலவும் நிறுவன நடைமுறையாக மட்டுமன்றி, குடும்பம் மற்றும் சமூக மட்டத்திலான கட்டமைப்புகளிலும் ஊடுருவியுள்ளன (டி. மெல், பீரிஸ், மற்றும் கோமஸ், 2013). பழமைவாதச் சிந்தனைகள் வேரூன்றிய பகுதிகளில் வாழும் பெண்கள் பொது வாழ்வில் ஈடுபடுவது பெரும்பாலும் ஊக்கப்படுத்தப்படுவதில்லை. அதிலும் குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல தசாப்த காலம் நீடித்த மோதல், இராணுவமயமாக்கல் மற்றும் கலாசார பழமைவாதம் ஆகியவை பெண்களின் சுதந்திரமான நடமாட்டத்தையும், அவர்கள் பொது வெளியில் அடையாளப்படுத்தப்படுவதையும், தேர்தல் பிரச்சாரத்துக்கு அவசியமான வளங்களை பெறுவதையும் கட்டுப்படுத்தும் மேலதிக காரணிகளாக அமைந்துள்ளன (பண்டாரகே, 2010).

### சமூகப் பழமைவாதம் மற்றும் பிராந்திய ரீதியான வேறுபாட்டடின் பங்கு

பாலின நெறிமுறைகளை மீள உறுதிப்படுத்துவதில் சமூகப் பழமைவாதம் ஒரு தீர்மானமிக்க காரணியாக செயற்படுகின்றது. குறிப்பாகப் போருக்குப் பின்னரான மற்றும் கிராமப்புறச் சமூகங்களில் இதன் தாக்கம் ஆழமானது (டி அல்விஸ், 1995). இத்தகைய சூழல்களில், அரசியல் பாரம்பரியமோ அல்லது குடும்பப் பின்னணியோ இல்லாத பெண்கள் பொதுத் தலைமைத்துவ பொறுப்புகளை ஏற்பதை இச்சமூகங்கள் பொருத்தமற்ற ஒன்றாகவே கருதுகின்றன. இத்தகைய கலாசார எதிர்பார்ப்புகள், பெண்கள் சுதந்திரமாகத் தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதையும், பொதுவெளியில் கருத்துரைப்பதையும், பெரும்பாலும் ஆண்களின் ஆதிக்கத்திலுள்ள சமூக வலையமைப்புகளிடமிருந்து நிதி ஆதரவைப் பெறுவதையும் தடுக்கின்றன. கோய்ட்ஸ் (2003) குறிப்பிடுவது போல, 'கௌரவம்' மற்றும் 'பாலின ஒழுக்க நெறிகள்' சார்ந்த கலாசார கருத்தியல்கள், பெண்களை நடத்தை மற்றும் ஒழுக்கம் சார் சமூகக் கண்காணிப்பிற்கு தொடர்ச்சியாக உட்படுத்துவதன் மூலம் அவர்களின் அரசியல் செயற்பாட்டுத் திறனை மட்டுப்படுத்துகின்றன. இது வாக்காளர்களின் தீர்மானங்களிலும் இப் பெண்களுக்கு கிடைக்கும் நிதி ஆதரவிலும் நேரடித் தாக்கத்தைச் செலுத்துகின்றது.

மேலும், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலவும் போருக்கு பின்னரான அரசியல் சூழல், பெண்களுக்குப் பிரத்தியேகச் சவால்களைத் தோற்றுவித்துள்ளது. குடும்பத்திலுள்ள ஆண்கள் உயிரிழந்த அல்லது காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், கட்டாயத்தின் பேரில் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்கும் இப் பெண்கள், பெரும்பாலும் சமூக விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். அவர்கள் உண்மையான அரசியல் அதிகாரம் கொண்டவர்களாகக் கருதப்படுவதில்லை. மாறாக அவர்களுக்கு 'அடையாளப் பிரதிநிதி' என்ற முத்திரை குத்தப்படுவதுடன், அவர்களின் அரசியல் ஆளுமை குறைத்து மதிப்பிடப்படுகின்றது (ஸ்ரீதரன், 2024).

### பன்முக காரணிகளின் தொடர்புத்தன்மையும் இரட்டைப் பாகுபாட்டுக்கு உள்ளாதலும்

சிறுபான்மைப் பெண்கள் எதிர்கொள்ளும் அனுபவங்கள், சமூகக் கட்டமைப்பு சார் தடைகளைப் புரிந்துகொள்வதில் பன்முக காரணிகளின் தொடர்புத்தன்மையினை (Intersectional Approach) ஆராய்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. கிம்பர்லே கிரென்ஷாவ் (1989) அறிமுகப்படுத்திய இக்கோட்பாடானது, பாலினம், இனம், மதம் மற்றும் வர்க்கம் போன்ற ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த அடையாளங்கள் எவ்வாறு ஒருவர் விளிம்புநிலைக்குத் தள்ளப்படுவதை மேலும் தீவிரப்படுத்துகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இலங்கைச் சூழலில், தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் பெண்கள் 'இரட்டைப் பாகுபாடு' (Double Discrimination) எனப்படும் பாலினம் மற்றும் இன-மத அடையாளங்கள் சார்ந்த இருமுனைப் புறக்கணிப்புகளை அனுபவிக்கின்றனர். பெண்கள் மீதான இத்தகைய பாகுபாடுகள், அவர்களின் கல்வி வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்படுதல், குறைந்த வேலைவாய்ப்பு வீதம், மற்றும் அன்றாட செயற்பாடுகளின் மீது இடப்படும் கட்டுப்பாடுகள் ஊடாக வெளிப்படுகின்றன; மேலும் இந்நிலைமையானது அரசியலில் தீர்மானம் எடுக்கும் அதிகார வெளியிலிருந்து பெண்கள் முழுமையாக அகற்றப்படுவதற்கும் காரணமாகின்றது (விக்ரமசிங்க மற்றும் கொடிகார, 2012).

சிறுபான்மைப் பெண்கள் எதிர்கொள்ளும் அனுபவங்கள், சமூகக் கட்டமைப்புத் தடைகளைப் புரிந்துகொள்வதில் பன்முகக் காரணிகளை ஆராயும் அணுகுமுறையின் (Intersectional Approach) அவசியத்தை வலியுறுத்துகின்றன. கிம்பர்லே கிரென்ஷாவ் (1989) அறிமுகப்படுத்திய இக்கோட்பாடானது, பாலினம், இனம், மதம் மற்றும் வர்க்கம் போன்ற ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த அடையாளங்கள் எவ்வாறு ஒருவர் விளிம்புநிலைக்குத் தள்ளப்படுவதை மேலும் தீவிரப்படுத்துகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இலங்கைச் சூழலில், தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் பெண்கள் 'இரட்டைப் பாகுபாடு' எனப்படும் பாலினம் மற்றும் இன, மத அடையாளங்கள் சார்ந்த இருமுனைப் புறக்கணிப்புகளை அனுபவிக்கின்றனர். இத்தகைய ஒன்றிணைந்த பாகுபாடுகள், கல்வி வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்படுதல், குறைந்த வேலைவாய்ப்பு வீதம், மற்றும் அன்றாட செயற்பாடுகளின் மீது இடப்படும் கட்டுப்பாடுகள் ஊடாக வெளிப்படுவதுடன், அரசியல் தீர்மானம் எடுக்கும் அதிகார வெளியிலிருந்து முழுமையாக அகற்றப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றன (விக்ரமசிங்க மற்றும் கொடிகார, 2012).

## அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளும் வேட்பாளர் தெரிவுமுறையும்

### வெளிப்படைத்தன்மையற்ற உட்கட்சி நிர்வாகமும் முறைசாரா தெரிவு முறைகளும்

இலங்கையின் தேர்தல் அரசியலில் பிரவேசிப்பதற்கான வாய்ப்புகளைத் தீர்மானிக்கும் மையங்களாக அரசியல் கட்சிகள் திகழ்கின்றன. ஆனால் அவை பெரும்பாலும் வெளிப்படைத்தன்மையற்ற ஒரு மூடிய அமைப்பாகவே தொழிற்படுகின்றன. நாடு உத்தியோகபூர்வமாக ஜனநாயக விழுமியங்களைப் பின்பற்றினாலும், கட்சிகளின் உட்கட்சி ஆளுகையானது பெருமளவு வெளிப்படைத்தன்மையற்றதாகவும் எவ்வித ஒழுங்குமுறைக்கும் உட்படாததாகவுமே காணப்படுகின்றது. வேட்பாளர் தெரிவானது, பொதுவாக நியமப்படுத்தப்பட்ட நடைமுறைகளால் வழிநடத்தப்படுவதற்குப் பதிலாக, கட்சித் தலைவர்கள் மற்றும் செயற்குழுக்களின் தன்னிச்சையான விருப்புரிமையிலேயே தங்கியுள்ளது (லியனகே, 2018). பெரும்பாலான பிரதான கட்சிகளில் உட்கட்சித் தேர்தல் பொறிமுறைகளோ அல்லது முறையான வேட்பாளர் தெரிவுக் கட்டமைப்புகளோ காணப்படுவதில்லை. இதன் விளைவாக, வேட்பாளராக விரும்பும் நபர்கள் வேட்பாளர் நியமனத்தை பெறுவதற்காக, கட்சி உயர் வர்க்கத்தினருடன் தனிப்பட்ட உறவுகளைப் பேணுதல், நிதி திரட்டும் ஆற்றலை ஒப்புவித்தல் மற்றும் மக்கள் செல்வாக்கை நிரூபித்தல் போன்ற முறைசாரா வழிகளைக் கையாள வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்படுகின்றனர். இத்தகைய முறைசாரா வழிகள், கட்சித் தலைவர்கள் தங்களது செல்வாக்கை நிலைநிறுத்த உதவுகின்றன. இவை பெரும்பாலும் வெளிப்படையாகக் கூறப்படாத, ஆனால் கட்சிக் கட்டமைப்பிற்குள் தெளிவாகப் புரிந்துகொள்ளப்பட்ட சில நிழல் எதிர்பார்ப்புகளின் படியே இயங்குகின்றன. சிறிவர்தனவின் (2022) கருத்துப்படி, ஒரு வேட்பாளர் கட்சித் தலைமைக்கு எவ்வளவு விசுவாசமானவர், எவ்வளவு நிதி வழங்கக்கூடியவர், செல்வாக்கு மிக்க நன்கொடையாளர்களுடன் அவர் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பு மற்றும் ஊடகங்களை எவ்வாறு கையாள்கிறார் என்பதைக் கொண்டே அவர் மதிப்பிடப்படுகிறார். இத்தகைய எழுதப்படாத விதிகள், பணமும் செல்வாக்கும் உள்ளவர்களுக்கு மட்டுமே வாய்ப்புகளை வழங்குகின்றன. இதன் விளைவாக, அரசியல் திறமையும் அரசியல் ஈடுபாடும் கொண்ட, சமூக அடிமட்ட மக்களிடம் நம்பிக்கையை வென்ற தகுதியான நபர்களுக்குப் பதிலாக, நிதி பலம் கொண்ட சமூக ரீதியாக

நன்கு நிலைபெற்றவர்கள் வேட்பாளர்களாக முன்னிறுத்தப்படுகின்றனர் (பியார்னெகார்ட் மற்றும் கெனி, 2015).

### பாலினம் மற்றும் பன்முக அடையாள அடிப்படையிலான விலக்கல்

நிதியால் உந்தப்படும் இந்த முறைசாரா தெரிவு நடைமுறைகள், சிறுபான்மை இன மற்றும் மதப் பின்னணியைக் கொண்ட பெண்களுக்குப் பாரிய சவால்களை உருவாக்குகின்றன. தேர்தல் பிரச்சார நிதியைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் கட்டுப்பாடுகள், ஆண்களின் மேலாதிக்கம் கொண்ட அரசியல் செல்வாக்கு வட்டங்கள் மற்றும் நிலவும் பாலினப் பாரபட்சங்கள் ஆகியன பெண்களை வேட்புமனு தாக்கல் செய்யும் கட்டத்தில் இருந்தே திட்டமிட்ட முறையில் வெளியேற்றுகின்றன (விக்ரமசிங்க மற்றும் கொடிகார, 2012).

இவ்விடயத்தில் வழக்கத்திற்கு மாறான ஒரு முக்கியமான மாற்றத்தை 2024 பாராளுமன்ற தேர்தல் கொண்டு வந்தது. மலையகத் தமிழ் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் (தோட்டத் தமிழ்) பெண்ணான அம்பிகா சாமுவேல் வெற்றிகரமாக பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது, பன்முக அடையாள ஓரங்கட்டல் என்பது எவ்வளவு ஆழமாக அரசியல் அமைப்பில் பதிந்துள்ளது என்பதை வெளிச்சமிட்டுக் காட்டியது. தோட்டத் தமிழ் சமூகங்கள் தலைமுறை தலைமுறையாக சமூக பொருளாதார அவலங்களையும் அரசியல் நிராகரிப்பையும் சுமந்து வந்துள்ள நிலையில் (உயன்கொட, 2012), சாமுவேலின் பிரச்சாரமும் நிதிப் பற்றாக்குறை மற்றும் நிறுவனங்களின் ஐயப்பார்வையை தொடர்ந்து எதிர்கொண்டது. தேசிய மக்கள் சக்தியின் (NPP) இலக்கு வைக்கப்பட்ட உள்வாங்கல் கொள்கைகள் மற்றும் அவர்கள் வழங்கிய நிறுவன ரீதியான ஆதரவு ஆகியவையே, இத்தகைய கட்டமைப்பு ரீதியான புறக்கணிப்புகளை முறியடித்து இவரது வெற்றியைச் சாத்தியமாக்கியது (ஸ்கந்தகுமார், 2014). அரசியல் கட்சிகள் மனது வைத்தால், செயல்முனைப்பான தலையீடுகள் மூலம் விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அதிகார மட்டங்களில் உரிய இடத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த சான்றாகும் (கொடிகார, 2010).

### கட்சி நுழைவு தடைகளும் ஆண் மேலாதிக்கம் மிகுந்த தலைமைத்துவ நெறிமுறைகளும்

வேட்பாளர்களைத் தெரிவு செய்வதைத் தாண்டி, அரசியல் கட்சிகள், ஒரு வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பையும் அவர் மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் அங்கீகரிக்கப்படுவார் என்பதையும் தீர்மானிக்கும் நுழைவுத் தடைகளாக அல்லது அதிகாரக் காவலர்களாக செயற்படுகின்றன. வேட்பாளர் தேர்வில் பின்பற்றப்படும் முறைசாரா நெறிமுறைகள், தலைமைத்துவத்தை ஆண்களின் பண்புகளுடன் தொடர்புபடுத்தும் ஆணாதிக்க விழுமியங்களுக்கு உயிரூட்டும் விதமாகவே அமைந்துள்ளன. பியார்னெகார்ட் மற்றும் கெனி (2015) குறிப்பிடுவது போல், இத்தகைய நெறிமுறைகளுக்கு உட்படாதவர்கள் கட்சிகளால் விளிம்புநிலைக்கு தள்ளப்படுவதுடன், பொருளாதார சுதந்திரம், உயர்மட்ட குழுக்களின் அறிமுகம் மற்றும் அரசியல் ஆதரவு வட்டங்களுடனான தொடர்புகள் கொண்ட தனிநபர்கள் முன்னுரிமை அளிக்கப்படுகின்றனர். அதேவேளை, தேர்தல் வெற்றிக்கு தேவையான உத்திகளை பயன்படுத்தி அதிரடியாகச் செயற்படும் தன்மையோ (Strategic Aggression) அல்லது போதிய சமூக செல்வாக்கோ பெண்களிடம் இல்லை என்ற பொதுவான கருத்து நிலவுவதால், இது அரசியல் ஆள்சேர்ப்பில் ஆண்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் ஒரு பாலினப் படிநிலையை உருவாக்குகின்றது.

### வியூக நோக்குடைய பெயரளவிலான அடையாளவாதமும் (Strategic Tokenism) பலவீனமான ஒதுக்கீட்டு அமுலாக்கமும்

வாக்காளர்களினதும் நிதி வழங்குநர்களினதும் நன்மதிப்பை பெற சில அரசியல் கட்சிகள் பாலின ஒதுக்கீடுகளை நடைமுறைப்படுத்தினாலும் அல்லது பெண் அரசியல்வாதிகளை முன்னிலைப்படுத்தினாலும், அவை பெரும்பாலும் ஒரு அடையாள அளவிலான உள்வாங்கலாகவே (Symbolic Inclusion) சுருங்கிவிடுகின்றன. வெற்றி வாய்ப்பற்ற தேர்தல் தொகுதிகளைப் பெண்களுக்கு ஒதுக்குவது, போதிய நிதி ஆதரவின்றி அவர்களைக் களமிறக்குவது அல்லது தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்னதாக அவர்களை மாற்றீடு செய்வது போன்ற நடவடிக்கைகள், பாலினச் சமத்துவத்தின் மீதான உண்மையான ஈடுபாட்டை விடவும், 'பாலின உள்ளடக்கத்தை' ஒரு கருவியாகப்

பயன்படுத்துவதையே வெளிப்படுத்துகின்றன (விக்ரமசிங்க மற்றும் கொடிகார, 2012). குருக் மற்றும் மெக்கே (2011) வாதிடுவது போல, இத்தகைய உத்திகள் சார்ந்த பெயரளவிலான அடையாளவாதம், கட்சிகளுக்குள் வேரூன்றியுள்ள அதிகாரச் சமமின்மையைத் தக்கவைத்துக்கொண்டே, உள்ளடக்குதல் தொடர்பாக வெளிப்புறத்திலிருந்து வரும் அழுத்தங்களைத் தற்காலிகமாகத் திருப்திப்படுத்த உதவுகின்றது. முறையான நிறுவனச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படாதவரை, இத்தகைய ஒதுக்கீடுகள் எத்தகைய சமத்துவமின்மையை தகர்ப்பதற்காக உருவாக்கப்பட்டனவோ, அவற்றையே மீண்டும் புதிய வடிவில் உறுதிப்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளன.

## சட்ட மற்றும் கொள்கை ரீதியான கட்டமைப்புகளின் வரம்புகள்

இலங்கையின் அரசியல் நகர்வுகளில் பணத்தின் செல்வாக்கு தொடர்பான அதிருப்திகள் நிலவி வந்தாலும், தேர்தல் நிதியை நிர்வகிப்பதற்கான ஒரு முழுமையான மற்றும் சட்டபூர்வமாக செயல்படுத்தக்கூடிய கட்டமைப்பு நீண்டகாலமாக நாட்டில் நடைமுறையில் இருக்கவில்லை. 2019 இல் முன்மொழியப்பட்ட தேர்தல் நிதி தொடர்பான சட்டமூல வரைபு , நிதி வழங்குநர்களின் தகவல்களைப் பகிரங்கப்படுத்துதல், செலவுகளுக்கான எல்லைகளை நிர்ணயித்தல் மற்றும் விதிகளை மீறுவோருக்குத் தண்டனை வழங்குதல் போன்ற முக்கியமான விவகாரங்களை சீர்செய்ய முனைந்தது. 2022 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில், தேர்தல் முடிந்து 21 நாட்களுக்குள் வேட்பாளர்கள் தமது நிதி அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் போன்ற முன்னேற்றகரமான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட போதிலும், பாராளுமன்ற இழுபறிகள் மற்றும் நிலையான அரசியல் ஆர்வம் இல்லாமை காரணமாக இச்சட்டமூலம் சட்டமாக இயற்றப்படாமலேயே இருந்தது (ட்ரான்ஸ்பரென்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா, 2016; தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் [CMEV], 2017).

அரசியல் நிதியை ஆராயவும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும் இந்தச் சட்டமூலம் ஒரு காத்திரமான பொறிமுறை என தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் போன்ற சிவில் சமூக அமைப்புகள் கருதின. ஆனால், இச் சட்டவரைபு சட்டமாக்கப்படாமல் முடங்கிக் கிடந்ததும், தேர்தல் பிரச்சார நிதி தொடர்பான ஆவணங்கள் பொதுவெளியில் பகிரப்படாமல் இரகசியமாகப் பேணப்பட்டதும் பொறுப்புக்கூறல் முறையை வலுவிழக்கச் செய்தன. வேட்பாளர்களுக்கோ அல்லது கட்சிகளுக்கோ வழங்கப்படும் நிதிப் பங்களிப்புகளைக் கட்டுப்படுத்த அண்மைக்காலம் வரை எவ்விதக் கட்டாயச் சட்ட விதிகளும் இருக்கவில்லை. அதேபோல தேர்தல் செலவுகளுக்கும் நடைமுறைச் சாத்தியமான உச்ச வரம்புகள் விதிக்கப்படவில்லை (CMEV, 2017). இந்தச் சட்டக் குறைபாடுகள் தேர்தல்களில் சமமான வாய்ப்புகள் கிடைப்பதைத் தடுத்ததோடு, அரசியல் பங்களிப்பில் நிலவும் பாரபட்சங்களை மேலும் ஆழப்படுத்தின.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இயற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் மூலம் இச் சட்டவாக்கச் சூழல் மாற்றமடைந்தது. இது இலங்கையின் தேர்தல் நிதி தொடர்பான முதலாவது கட்டாயச் சட்டக் கட்டமைப்பாகும். இச் சட்டம் பல முக்கியமான விதிகளை அறிமுகப்படுத்தியது:

- செலவின வரம்புகள்: வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்து ஐந்து நாட்களுக்குள், ஒரு வாக்காளருக்கான வீதம் மற்றும் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட 'அதிகாரமளிக்கப்பட்ட தொகையை' ஒவ்வொரு தேர்தலுக்கும் நிர்ணயிப்பது தேர்தல் ஆணைக்குழுவின் கடப்பாடாகும்.

- நன்கொடை மீதான கட்டுப்பாடுகள்: அரச நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள், 50% இற்கும் கூடிய வெளிநாட்டு பங்குடைமையைக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் ஆளடையாளம் வெளிக்காட்டப்படாத நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெறுவது அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

- நிதி விபரங்களை பகிரங்கப்படுத்துதல்: தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 21 தினங்களுக்குள், வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அனைத்தும் தமது பிரச்சார நிதி

வரவு-செலவுகள் தொடர்பான விபரமான மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகளை சமர்ப்பிப்பது கட்டாயமாகும் (TISL, 2023).

இதனை முழுமைப்படுத்தும் விதமாக, 2023 ஆகஸ்டில் நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வந்த, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டமானது, வேட்புமனுத் தாக்கல் செய்யும் போதே தமது சொத்து மற்றும் பொறுப்புகள் பற்றிய விபரங்களை பிரகடனப்படுத்துவதை அனைத்து வேட்பாளர்களுக்கும் கட்டாயமாக்கியது (இலங்கை பாராளுமன்றம், 2023). அரசியலில் நிலவும் பணத்தின் ஆதிக்கத்தை வரைமுறைப்படுத்துவதில் இவ்விரு சட்டங்களும் முக்கியமான மைல்கற்களாக கருதப்படுகின்றன.

இருப்பினும், நடைமுறைப்படுத்துதலில் பாரிய சவால்கள் இன்னும் நீடிக்கின்றன. செலவின வரம்புகளை நிர்ணயிப்பதிலும் நிதி சார் வெளிப்படுத்தல்களைப் பெறுவதிலும் தேர்தல் ஆணைக்குழு தற்போது முக்கிய பங்கு வகித்த போதிலும், அதன் அமுலாக்க திறன் வலுவற்றதாகவே உள்ளது. விதி மீறல்கள் பற்றிய தகவல்களை சட்ட அமுலாக்க முகவர்களிடம் (பொலிஸாரிடம்) வழங்குவதோடு ஆணைக்குழுவின் வேலை முடிந்துவிடுகிறது (பெரேரா, 2024; TISL, 2023). அத்துடன், மூன்றாம் தரப்பு மற்றும் இணையவழி (டிஜிட்டல்) பிரச்சாரச் செலவுகள் இன்னும் முறைப்படுத்தப்படாமல் உள்ளன. மேலும், நன்கொடைகள் பற்றிய விபரங்களை உடனுக்குடன் அல்லது தேர்தலுக்கு முன்னதாக வெளிப்படுத்துவதற்கான சட்பூர்வமான கட்டாயப்பாடுகள் எதுவும் இல்லை. நிதி அறிக்கைகளை சட்டப்படி சமர்ப்பிக்க வேண்டியது அவசியமென்றாலும், அவை தானாகவே பொது வெளியில் பகிரங்கப்படுத்தப்படாமையானது வெளிப்படைத்தன்மை மற்றும் சிவில் சமூக மேற்பார்வையை (Civic Oversight) கேள்விக்குறியாக்குகின்றது (ஹுத்தொடுவ, 2024).

தேர்தல் பிரச்சாரத்திற்காக அனுமதிக்கப்படும் உத்தியோகபூர்வ செலவின வரம்பு சர்ச்சைக்குரிய விடயமாக உருவெடுத்துள்ளது. 2024 ஆகஸ்ட் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியின் படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் ஒரு வாக்காளருக்கு 109 ரூபாய் வீதம், மொத்தமாகச் சுமார் 186 கோடி ரூபாய் (சுமார் 5 மில்லியன் அமெரிக்க டாலர்) வரை செலவிட முடியும். இலங்கை அரசியலில் இதுவரை காணப்படாத இந்தத் தொகை மிகையானது என்றும், தேர்தல் நிதிச் சீர்திருத்தங்களின் நோக்கத்தையே இது நீர்த்துப்போகச் செய்கிறது என்றும் விமர்சகர்கள் வாதிடுகின்றனர். இதனை 2023ஆம் ஆண்டின் சட்டத்திற்கு இழைக்கப்பட்ட ஓர் 'அவமதிப்பு / கேலி' என சாடும் ஹுத்தொட்டுவ (2024), இத்தகைய உயர் செலவு வரம்புகள் செல்வந்தர்களுக்கு மட்டுமே சாதகமாக அமைந்து, சீர்திருத்தச் சிந்தனை கொண்ட அடிமட்ட நிலை வேட்பாளர்களை ஓரங்கட்டும் ஓர் அரசியல் கலாசாரத்தை நிலைநிறுத்தும் என வாதிடுகிறார். இது 2022ஆம் ஆண்டின் மக்கள் போராட்டத்தின் (அரகலய) போது மக்கள் கோரிய முறையான மாற்றத்தை சாத்தியமற்றதாக்கிவிடும் என்பது அவரது கருத்தாகும் (ஹுத்தொட்டுவ, 2024).

TISL மற்றும் CMEV போன்ற அமைப்புகள் தற்போதைய சட்டத்திலுள்ள பலவீனங்களைத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், தேர்தல் பிரச்சார நிதி விபரங்களை பொதுமக்கள் அணுகுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன. 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமோ அல்லது 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டமோ, வேட்பாளர்களால் சமர்ப்பிக்கப்படும் நிதி அல்லது சொத்து பிரகடனங்களைத் கணக்காய்வு செய்வதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்கவில்லை என்பது ஒரு பிரதான கட்டமைப்பு ரீதியான பலவீனமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இதன் விளைவாக, வேட்பாளர்கள் உண்மைக்கு புறம்பான அல்லது திசைதிருப்பக்கூடிய தகவல்களைச் சமர்ப்பிக்க வாய்ப்புள்ளதுடன், அவை கண்டறியப்படுவதற்கான வாய்ப்பும் மிகக் குறைவாகவே உள்ளது. வலுவான கணக்காய்வு விதிகள், பொதுமக்கள் தகவல்களை அணுகுவதற்கான போதுமான ஏற்பாடுகள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கான கூடுதல் விசாரணை அதிகாரங்கள் இன்றி, தற்போதைய சட்டக் கட்டமைப்பின் வினைத்திறன் அடிப்படை ரீதியாக நலிவடைந்துள்ளது (CMEV, 2017; TISL, 2023). மேலும், மற்றொரு முக்கியமான பலவீனம் யாதெனில், தேர்தல் பிரச்சாரம் தொடர்பான அனைத்து வருமானம் மற்றும் செலவினங்களை பிரச்சாரத்திற்கான ஒரு பிரத்யேக வங்கிக் கணக்கின் ஊடாகக் கையாள வேண்டும் என்ற நிபந்தனை 2023 இன் 3 ஆம் இலக்க தேர்தல் செலவீனங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் உள்ளடக்கப்படாமை ஆகும். இத்தகைய ஏற்பாடு இல்லாத நிலையில், நிதி பரிமாற்றங்களை கண்காணிப்பது கடினமாவதுடன், பதியப்படாத பணப் பரிமாற்றங்களை மேற்கொள்ளவும் வேட்பாளர்கள் தமது செலவினங்களின் உண்மை அளவையும் மூலத்தையும் மறைப்பதற்கும் இது வாய்ப்புகளை உருவாக்குகின்றது (TISL, 2023).

### ஒதுக்கீடு தொடர்பான சீர்திருத்தங்கள் மற்றும் அடையாளப் பிரதிநிதித்துவம்

2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களுக்கு 25% கட்டாய இடஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டது. முறைசார் அரசியலில் இருந்து பெண்கள் காலம் காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த சூழலில், இது ஒரு முக்கிய மைல்கல்லாகப் பார்க்கப்பட்டது. 2018 உள்ளூராட்சித் தேர்தலின் போது 2,000 க்கும் அதிகமான பெண்கள் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டமை, இலங்கை வரலாற்றில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் ஏற்பட்ட பாரிய எண்ணிக்கையிலான வளர்ச்சியாகும். ஆனாலும், நிறுவன மற்றும் வள ரீதியான ஒத்துழைப்புகள் வழங்கப்படாத காரணத்தினால், இந்த ஒதுக்கீட்டு முறையானது வெறும் பெயரளவிலான ஒன்றாகவே நீடிக்கிறது. பீரிஸ் மற்றும் லெகம்வசம் (2020) குறிப்பிடுவது போல, உட்கட்சி ஜனநாயகப்படுத்தல், அரசியல் கல்வி மற்றும் ஆற்றல் விருத்தி போன்றவை இல்லாத நிலையில், இடஒதுக்கீடுகள் உண்மையான வலுவாட்டலுக்குப் பதிலாக வெறும் அடையாளச் செயல்பாடுகளாகவே மாறும் அபாயம் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பல பெண்கள் சபை அமர்வுகளில் புறக்கணிக்கப்படுவதாகவும், போதிய வளங்கள் ஒதுக்கப்படுவதில்லை என்றும், ஆண் உறுப்பினர்களிடமிருந்து எதிர்ப்புகளைச் சந்திப்பதாகவும் கூறியுள்ளனர்.

அதேபோல, ஒதுக்கீட்டு முறைமையானது இன்னும் தேசிய அளவிலான அமைப்புகளுக்கு விரிவுபடுத்தப்படவில்லை. தேசிய மக்கள் சக்தி (NPP) கட்சியின் ஊடாக அண்மைக்காலத்தில் எட்டப்பட்ட முன்னேற்றங்களைத் தாண்டியும், 2024 தேர்தல்களின் அடிப்படையில் பெண்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் 10 சதவீதத்திற்கும் கீழான மிகக் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது (தேர்தல் திணைக்களம், 2024). தேசிய மட்டத்திலான ஒதுக்கீடு குறித்த முயற்சிகள், கட்சிகளுக்கு இடையிலான பொதுவான உடன்பாடு இல்லாமை மற்றும் கட்சிப் பிரமுகர்களின் ஆழமான எதிர்ப்பு காரணமாகத் தொடர்ந்து தடைப்பட்டு வருகின்றன (முரகல அறக்கட்டளை, 2024).

## ஒப்பீட்டு இலக்கிய ஆய்வு


பெண்களின் அரசியல் பங்கேற்பு என்பதை வெறும் பிரதிநிதித்துவம் குறித்த கேள்வியாக மாத்திரமன்றி, தேர்தல் பிரச்சார நிதி மற்றும் கட்சி வாயில் காப்பு முறை மூலம் பாலினப் புறக்கணிப்பை நிலைநிறுத்தும் அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புகளின் வெளிப்பாடாகவே தற்கால ஆய்வுகள் அணுகுகின்றன. க்ரூக் (2010) வாதிடுவது போல ஆண்களின் அதிகாரத்திலுள்ள அரசியல் ஆதரவுத் தளங்களும் அமைப்பு சார் நெறிமுறைகளும் வேட்பாளர் தெரிவைத் தீர்மானிப்பதோடு, இவை நிதி மற்றும் குறியீட்டு மூலதனத்திற்கான அணுகல் கொண்டவர்களுக்கே முன்னுரிமை வழங்குகின்றன. மறைமுக நன்கொடைகள், உயர் வர்க்கத்தின் பிடியிலுள்ள அரசியல் ஆதரவு முறைகள் மற்றும் உறவு முறை சார்ந்த அரசியல் சலுகைகள் என்பவற்றின் பேரில் கட்டியெழுப்பப்பட்டுள்ள பிராந்தியம் முழுவதிலும் நிலவும் முறைசாரா தேர்தல் பிரச்சார நிதி முறைமைகள் பெண்களுக்குப் பெரும் கட்டமைப்புச் சவால்களை ஏற்படுத்துகின்றன (அக்ரவால், 2021; WEDO, 2007). நன்கொடையாளர்களில் பெரும்பாலானோர் ஆண்களாக இருப்பது பெண்களின் பிரச்சார வலுவைக் குறைப்பதுடன், அவர்களை தமது சொந்த நிதி அல்லது தன்னார்வ நிறுவனங்களின் தற்காலிக நிதி உதவிகளில் தங்கியிருக்கச் செய்கின்றது (நஸ்னின் மற்றும் மஹ்மூத், 2012; WEDO, 2007). இந் நிதி சார் கட்டுப்பாடுகள், ஆணாதிக்க நெறிமுறைகள், தேர்தல் வன்முறை மற்றும் பக்கச்சார்பான ஊடகச் சித்தரிப்பு என்பவற்றுடன் இணைந்து பெண்களின் தேர்தல் இருப்பையும் வெற்றி வாய்ப்பையும் மேலும் கட்டுப்படுத்துகின்றன (பியார்னெகார்ட் மற்றும் செட்டர்பெர்க், 2020). எனவே, ஜலால்சாய் (2013) மற்றும் நஸ்னீன் (2018) குறிப்பிடுவது போல, பெண்களின் குறைந்த பங்கேற்பு என்பது அரசியல் இலட்சியமின்மையினால் நிகழ்ந்தது அல்ல. மாறாகத் தெற்காசியாவின் தேர்தல் அரசியல், பொருளாதாரத்தில் திட்டமிட்டுப் பொதிந்துள்ள கட்டமைப்புப் புறக்கணிப்பின் விளைவாகும்.

தேர்தல் அரசியலுடன் தொடர்புடைய நிதி ரீதியான சுமை, குறிப்பாக இன, சாதிய அல்லது மத ரீதியாக விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட குழுக்களை சேர்ந்த பெண்களுக்கு பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இந்திய தலித் பெண்கள் குறித்த ஆய்வுகளின் படி, அவர்கள் சாதியப் பாரபட்சம் மற்றும் பாலின அடிப்படையிலான நிதிப் பற்றாக்குறை ஆகிய இரட்டை சுமையை ஒரே நேரத்தில் எதிர்கொள்ள நேரிடுவதால் அவர்களின் அரசியல் பங்கேற்பு கீழ் நிலை அரசு அமைப்புகள் அல்லது நிதி வரையறை கொண்ட ஒதுக்கீட்டு இருக்கைகளுக்கே சுருங்கிவிடுகிறது (பைக், **2018).** பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டு இருக்கைகள் பெண்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கையை அதிகரித்தாலும் தேர்தல் பிரச்சார நிதியை பெறுவதற்கான சமமான அணுகலை வழங்கவில்லை: வேட்புமனுக்களுக்கும் தேர்தல் பிரச்சார நிதிக்கும் அவர்கள் கட்சிப் பிரமுகர்களையே தங்கியிருக்க வேண்டியுள்ளது (நஸ்னின் மற்றும் மஹ்மூத், **2012).** இந்தச் சூழலில், உண்மையான உள்ளடங்களுக்காக பிரதிநிதித்துவச் சீர்திருத்தங்கள் தேர்தல் பிரச்சார நிதி சீர்திருத்தங்களுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதே ஆய்வாளர்களின் வாதமாகும். நிதி ஒதுக்கீடுகள், வெளிப்படைத்தன்மை மற்றும் குடிமை மேற்பார்வை ஆகியவற்றைக் கொண்டு வருவதன் மூலமே, குறிப்பாக சிறுபான்மை இன, சாதிய மற்றும் மதச் சமூகப் பெண்களின் அரசியல் பங்கேற்பை ஜனநாயகப்படுத்த முடியும் (அக்ரவால், **2021)**.

# ஆய்வு முடிவுகள்

## அரசியல் களத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்

இலங்கை அரசியலில் கால்பதிக்கும் பெண்கள் பாலின அடிப்படையிலான சிக்கலான பல சவால்களைச் சந்திக்கின்றனர். இவை அவர்களின் அரசியல் ஈடுபாட்டைப் பாதிப்பதோடு, அரசியல் களத்தில் வினைத்திறனுடன் போட்டியிடும் அவர்களின் ஆற்றலையும் தீர்மானிக்கின்றன. உள்ளூர் கலாசாரப் பழக்கவழக்கங்கள், குடும்ப கட்டமைப்புகள் மற்றும் சமூக எதிர்பார்ப்புகள் என்பன இச்சவால்களைத் தீர்மானிக்கும் காரணிகளாக உள்ளன. இவை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டாலும், ஆணாதிக்கமும் சமூகக் கட்டுப்பாடுகளும் பெண்களின் அரசியல் செயற்பாட்டுத்திறனை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. முக்கியமாக, பெண்கள் அனைவரும் ஒரே நிலையிலானவர்கள் அல்ல: வர்க்கம், திருமண அந்தஸ்து, மதம், மொழி மற்றும் சமூகப் பின்புலம் போன்ற காரணிகளே அவர்கள் சந்திக்கும் தடைகளையும், அவற்றைக் கடக்க அவர்கள் பயன்படுத்தும் உத்திகளையும் முடிவு செய்கின்றன.




### பாலின ரீதியான இயக்கத்திறன்/நடமாட்டத்திறனும் ஒழுக்கம் சார்ந்த கண்காணிப்பும்

இலங்கையில் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடுக்கும் மிக முக்கியமான தடைகளில் ஒன்றாக அவர்களின் நடமாட்ட சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. சமூக வெளிப்பாடு, இயங்குதல் அல்லது செயற்படுதல் மற்றும் உடனடி வினைத்திறன் ஆகியவற்றை அரசியல் எதிர்பார்க்கிறது. ஆனால் இவை சமூகத்தில் வேரூன்றியுள்ள பாலின நெறிமுறைகளுக்கு மாறானவையாக உள்ளன. மொனராகலையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின்படி, அரசியல் பணி என்பது கூட்டங்களில் கலந்துகொள்ளுதல், வீடுகளுக்குச் செல்லுதல், பொருட்களை விநியோகித்தல் மற்றும் மிக முக்கியமாக அவசர கால தேவைகளுக்குப் பதிலளித்தல் எனத் தொடர்ச்சியாக களத்தில் இருப்பதை அவசியப்படுத்துகின்றது. எனினும், பெண்களின் பொதுவெளி நடமாட்டமானது எப்போதும் சமூகத்தின் கண்காணிப்பிற்கும் ஒழுக்கவியல் ரீதியான கேள்விகளுக்கும் உட்பட்டதாகவே இருக்கின்றது.

ஓர் ஆண் அரசியல்வாதி குறிப்பிட்ட வகையில்,

"பெண்களுக்கு அரசியல் செய்வது மிகவும் கஷ்டமான விடயம், காரணம் அவர்களால் இரவில் தனியாகப் போய் வர முடியாது. இரவு நேரத்திலும் அவசரமான வேலைகள் வரலாம், அப்போது மக்கள் உங்களை அங்கு எதிர்பார்ப்பார்கள்... ஓர் அடிப்படைத் தேவையாகப் பெண்கள் குறைந்தது ஒரு மோட்டார் சைக்கிளாவது ஓட்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இங்கு பெண்களின் நடமாட்டத்தை வெறும் பயணமாகப் பார்க்காமல் அவர்களின் ஒழுக்கமாகவே சமூகம் பார்க்கிறது. தனியாக பயணிக்கும் திருமணமாகாத பெண்கள் சமூக ரீதியாக இழிவுபடுத்தப்படும் நிலையில், விதவைகள் மேலதிகக் கண்காணிப்பைச் சந்திக்கின்றனர். இது குறித்து மொனராகலையில் உள்ள பெண்கள் உரிமை அமைப்பின் நிபுணர் ஒருவர் கூறுகையில்:

"ஒரு பெண்ணைப் பற்றிய சிறிய வதந்தி கூட ஒரு பெரிய அவதூறாக மிகைப்படுத்தப்படுகிறது. குறிப்பாக விதவைகள் முற்றாக மௌனிக்கப்படுகிறார்கள்; அரசியல் அவர்களுக்கு ஏற்றது கிடையாது."

இந்தச் பின்னணியில், திருமணம் என்பது இருமுனை வாளாக மாறுகிறது. அது ஒருவருக்கு அங்கீகாரத்தை வழங்கலாம் அல்லது அவர் மீது கட்டுப்பாடுகளை விதிக்கலாம். ஓர் ஆண் அரசியல்வாதி இரண்டு வேட்பாளர்களை இவ்வாறு ஒப்பிட்டார்:

"இரண்டு இளம் பெண் வேட்பாளர்கள் இருந்தனர். ஒருவர் திருமணமானவர், மற்றவர் திருமணமாகாதவர். திருமணமாகாத பெண்ணுக்குத் துணையாக வர யாருமில்லாததால் அவரால் தனது சக்திக்கு உட்பட்ட எல்லைக்குள் மட்டுமே தனது பிரச்சாரத்தை முன்னெடுக்க முடிந்தது. வெற்றி பெற்ற மற்றவர் திருமணமானவர், அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவரது கணவர் உடன் வருவார்'."

ஆகவே, பெண்களுக்கான சமூக அங்கீகாரம் அல்லது அந்தஸ்து பெரும்பாலும் அவர்கள் கணவருடன் இருப்பதையோ அல்லது அவர் ஆதரிப்பதையோ பொறுத்தே அமைகிறது. பொது வாழ்க்கையை வழிநடத்த பெண்களுக்கு ஆண்களின் பாதுகாப்பு தேவை என்ற ஆணாதிக்க கருதுகோள்களை இது மீள வலியுறுத்துகின்றது.

### பெண்களின் அரசியல் செயற்பாட்டுத் திறனில் நிலவுகின்ற பிராந்திய ரீதியான வேறுபாடுகள்

#### யாழ்ப்பாணம்: மோதலும் பாலின நெறிமுறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றமும்

யாழ்ப்பாணத்தில் பல தசாப்த கால உள்நாட்டுப் போரும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் அதிகரிப்பும் பாலின ரீதியான உறவுகளை மறுசீரமைத்துள்ளன. போர்க்காலத்தில் நீண்டகாலமாக ஆண்கள் இல்லாத சூழல், சமூக வாழ்க்கை மற்றும் பொதுத் தீர்மானம் எடுத்தலில் பெண்களின் பங்களிப்பை இயல்பான ஒன்றாக மாற்றியதுடன், பெண்கள் பொதுவெளியில் தோன்றுவதற்கும் தலைமைத்துவத்தை ஏற்பதற்கும் பழகிக்கொண்ட ஒரு சூழலை உருவாக்கியது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் அரசியல்வாதி ஒருவர், கட்சிகளால் விளிம்புநிலைக்கு தள்ளப்படுவதற்கு எதிராகத் தாங்கள் மேற்கொண்ட கூட்டு முயற்சிகள் குறித்து இவ்வாறு விபரித்தார்:

"கடந்த 2018 தேர்தலில் போட்டியிட்ட நாங்கள் அனைவரும் தற்போது ஒன்றிணைந்துள்ளோம். இம்முறை, அனுபவம் வாய்ந்த மூத்த பெண் வேட்பாளர்களை நீக்கிவிட்டு புதியவர்களைக் கொண்டுவர அவர்கள் முயன்றனர், ஆனால் நாங்கள் அதனை எதிர்த்தோம். இது தொடர்பாக ஊடகக் கலந்துரையாடல்களையும் நடத்தினோம். யுத்தத்துக்கு பிந்தைய காலத்தில் எங்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள், எங்கள் உரிமைகளுக்காக குரல் கொடுக்கவும் போராடவும் தேவையான தன்நம்பிக்கையையும் பலத்தையும் எமக்கு அளித்துள்ளன."

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மற்றொரு பெண் அரசியல்வாதி பின்வருமாறு விளக்கினார்:

"நாங்கள் அரசியலில் நுழைவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே இப்பகுதியில் சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். ஒரு குடும்பம் துயரில் இருக்கும்போது உதவுவதாகட்டும் அல்லது சமூக நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதாகட்டும், எதற்கும் நாங்கள் முன்னிற்பதால் மக்கள் எங்களை நன்கு அறிவார்கள். கட்சிக்குள்ளேயே கூட, சில நேரங்களில் ஆண்கள் எங்களை ஓரங்கட்டவோ அல்லது எங்களுக்கு அங்கு இடமில்லை என்பது போலவோ நடந்துகொள்ள முயல்கிறார்கள்; ஆனால் நாங்கள் அமைதியாக இருப்பதில்லை. எமது நிலைப்பாட்டில் உறுதியாக நின்று அதனை எதிர்த்து போராடுகிறோம். மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பதால், எங்களை எளிதில் அகற்ற முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்."

ஆகவே, யுத்தத்தின் விளைவாக பாலின பாத்திரங்களில் ஏற்பட்டுள்ள மறுசீரமைப்பானது, கட்சிக்குள் ஆணாதிக்க மனப்பாங்குகள் இன்னும் நீடித்த போதிலும், யாழ்ப்பாணப் பெண்கள் அரசியலில் ஈடுபட ஒரு சமூக அடித்தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளது. இவர்களின் கருத்துகள், மோதல்,

சமூகப்பணி மற்றும் ஒன்றுதிரட்டுதல் ஆகியவற்றின் மூலம் செதுக்கப்பட்ட ஓர் உறுதிமிக்க அரசியல் முகவாண்மையை சுட்டிக்காட்டுகின்றன; இது ஏனைய இடங்களில் காணப்படும் ஓரங்கட்டுதல் மற்றும் பிறரைச் சார்ந்திருக்கும் தன்மை என்பவற்றுக்கு முற்றிலும் மாறுபட்டதாக திகழ்கிறது.

### கொழும்பு: வர்க்கமும் குடும்ப அதிகாரமும்

கொழும்பில் பெண்களின் அரசியல் பங்கேற்பானது, ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த விமர்சனங்களை விடவும் சமூக வர்க்கச் சலுகைகள் மற்றும் உயர் வர்க்கத் தொடர்புகளாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. நகர்ப்புற உள்ளூராட்சி மன்ற பெண் அரசியல்வாதிகள் பெரும்பாலும் அரசியல் செல்வாக்கு அல்லது பொருளாதார ரீதியான ஸ்திரத்தன்மை கொண்ட குடும்பங்களிலிருந்து வருவதால், அவர்களுக்கு சமூக அங்கீகாரமும் பாதுகாப்பும் ஒருசேர கிடைக்கப் பெறுகின்றன.

கொழும்பைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி விளக்கியதாவது:

“எனது தந்தை அரசியல்வாதிகளுக்குப் பெருமளவில் உதவி செய்தவர். அவர் நேரடியாகத் தேர்தலில் போட்டியிடவில்லை என்றாலும், அரசியல்வாதிகளுடன் நெருக்கமான தொடர்பைப் பேணியதுடன் அவர்களின் பிரச்சார நடவடிக்கைகளிலும் பங்களித்தார். அவரது மறைவுக்குப் பின்னர், என்னை தேர்தலில் போட்டியிடுமாறு கோரினர். எப்படியும் தந்தையின் தொழிலை நான் கவனித்து வந்ததனால், அவர் செய்த அரசியல் பணிகளையும் தொடர வேண்டும் என்று எண்ணினேன். எனது கணவர் எனது நெருங்கிய உறவினரும் (*Cousin*) கூட; எனது தந்தை அரசியலில் எவ்வளவு ஈடுபாட்டுடன் இருந்தார் என்பதை அவர் அறிந்திருந்ததால், எனது இந்த முடிவிற்கு முழு ஆதரவை வழங்கினார்.”

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் (FSLGA) பிரதிநிதி ஒருவர் கொழும்பின் நகர்ப்புற அரசியல் சூழலைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் இவ்வாறு விவரித்தார்:

“கொழும்பில் அரசியல் என்பது அதிக பொருட்செலவு மற்றும் கடுமையான போட்டித்தன்மை மிக்கது. இங்கு அரசியலில் நிலைத்திருக்கும் பெண்கள் பணமும் செல்வாக்கும் உள்ளவர்கள். அவர்கள் அதிகாரமிக்கவர்கள், ஆனால் அவர்கள் அதிகாரமிக்க குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது”

யாழ்ப்பாணத்தில் பெண்கள் சமூக சேவையின் மூலம் தமக்கான அங்கீகாரத்தைப் பெறுகிறார்கள். ஆனால் இதற்கு மாறாக, கொழும்புப் பெண்கள் தங்களின் குடும்ப சொத்துக்கள் மற்றும் அரசியல் பாரம்பரியத்தை வைத்தே அரசியலில் கால் பதிக்கிறார்கள்.

### மட்டக்களப்பு: மதம், ஆணாதிக்கம் மற்றும் முரண்நிலை (தனிச்)சுதந்திரம்

முஸ்லிம் சமூகங்கள் செறிந்து வாழும் மட்டக்களப்பு போன்ற பகுதிகளில், பெண்களின் அரசியல் பங்கேற்பிற்கு குடும்பமும் மத நிறுவனங்களும் பெரும் தடைகளாக உள்ளன. மதம் மற்றும் ஒழுக்கத்தின் பெயரால் முன்னெடுக்கப்படும் சமூகக் கண்காணிப்பு முறையானது, அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாத கட்டுப்பாடுகள் நிறைந்த ஒரு சூழலை உருவாக்குகிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஓர் ஆண் அரசியல்வாதியின் கூற்றுப்படி,

“முஸ்லிம் பள்ளிவாசலின் செல்வாக்கினால் பெண்கள் அரசியலில் ஈடுபடுவது சவாலான ஒன்றாக உள்ளது. அதேவேளை, பல பெண்கள் அரசியலில் நுழைவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். உதாரணமாக, அவர்கள் அணியும் உடை தொடர்பாகப் பாரிய சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். முகத்தை மூடி ஆடை அணியும் பெண்கள் சில நிறுவனங்களுக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வாறான இடங்களில் மிகக் குறைந்தளவிலான பெண்களே பணிபுரிகின்றனர்; பெரும்பாலும் ஆண்களே உள்ளனர். அரசியலிலும் இதே நிலைதான்;

அங்கும் ஆண்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர். மேலும், முஸ்லிம் பெண்களால் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரிக்கவோ (*Canvassing)* அல்லது ஆண்களுடன் நேரடியாக உரையாடவோ முடிவதில்லை."

முரண்பாடான விதத்தில், விவாகரத்து அல்லது கணவனை இழந்த நிலை (கைம்பெண் நிலை) பெண்களுக்கு தன்னாதிக்கமாக அல்லது சுதந்திரமாக செயற்படுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. மட்டக்களப்பைச் சேர்ந்த பெண் அரசியல்வாதி ஒருவர் தனது அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டார்:

"நான் முதலில் அரசியலில் நுழைந்தபோது என் குடும்பத்தினர் அதனை ஏற்கவில்லை. எனது பெற்றோரைச் சம்மதிக்க வைத்திருக்க முடியும். ஆனால் எனது சகோதரர்கள் அதனை முற்றாக எதிர்த்தனர். அந்த நேரத்தில் எனக்குத் திருமணமாகியிருந்தது. ஆனால் பின்னர் அவர் என்னை ஏமாற்றியதால் நான் விவாகரத்து பெற வேண்டியிருந்தது. அதன் பிறகுதான் என்னால் அரசியலில் உண்மையாகவே ஈடுபட முடிந்தது."

அவர் தொடர்ந்து விவரித்ததாவது: "சமூக நலனுக்காக உழைக்க வேண்டும் என்பதே மதத்தின் அறைகூவல். ஆனால், பெண்கள் இவ்வாறான விவகாரங்களில் ஈடுபடுவதை ஆண்கள் விரும்புவதில்லை. இது மதத்தின் போதனையல்ல. மாறாக, ஆண்கள் மதத்தை அவ்வாறான ஒன்றாக மாற்றியமைத்துள்ளனர். விவாகரத்து பெற்ற பின்னரே, என்னால் எவ்விதத் தடையுமின்றிச் சுதந்திரமாக சமூக பணிகளிலும் அரசியலிலும் முழுமையாக ஈடுபட முடிந்தது."

இந்தச் சூழலில், பெண்களின் அரசியல் செயற்பாட்டுத் திறன் என்பது நிறுவனங்களின் உதவியால் உருவானதல்ல; மாறாக ஆணாதிக்கத் திருமண பந்தம் முறியும்போதே பிறக்கின்றது. தனிச்சுதந்திரத்தை அடைவதற்குப் பெண்களுக்கு இருக்கும் வழிகள் எவ்வளவு முரண்பாடுகள் நிறைந்தவை என்பதை இச்சூழ்நிலை உணர்த்துகின்றது.

### பதுளை: மொழி, கல்வி மற்றும் உருவாகும் தெரிவுநிலை (Visibility)

பதுளையின் பெருந்தோட்டப் பகுதிகளில், பெண்களின் அரசியல் பங்கேற்பானது ஆணாதிக்கக் குடும்பக் கட்டமைப்புகள் மற்றும் மொழி ரீதியான படிநிலைகள் (Linguistic Hierarchies) ஆகிய இரண்டினாலும் தீர்மானிக்கப்படுகின்றது. அரசியல் ஈடுபாடானது பெரும்பாலும் குடும்ப எதிர்பார்ப்புகளைச் சீர்குலைப்பதோடு, குடும்பத்தில் ஒருவித பதற்றமான சூழலையும் (Tension) தோற்றுவிக்கின்றது. பதுளையைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி தனது அனுபவத்தை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

"வேலை நிமித்தம் நான் வெளி இடங்களுக்குச் செல்வதையும், ஆண்கள் நிறைந்த சூழலில் பணியாற்றுவதையும் எனது கணவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில் நாங்கள் பிரிந்தோம்; ஆனால், நான் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு அவர் மீண்டும் என்னிடம் திரும்பி வந்தார்."

அரசியல் வெற்றியானது, ஒரு பெண்ணின் குடும்ப அதிகாரக் கட்டமைப்பை முதலில் சீர்குலைத்தாலும், பின்னர் அவ் வெற்றியே பெண்களின் பொதுச் செயல்பாடுகளுக்கான அங்கீகாரமாக மாறுகிறது. வரலாற்று ரீதியாக, தோட்டப்புறப் பெண்கள் குறைந்த கல்வி மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நடமாடும் சுதந்திரத்துடன் தனிப்பட்ட (வீட்டு) எல்லைக்குள்ளேயே முடக்கப்பட்டிருந்தனர். எனினும், தற்போதைய தலைமுறை மாற்றம் அந்தத் தடைகளைத் தகர்க்கத் தொடங்கியுள்ளது. பதுளையைச் சேர்ந்த ஆண் அரசியல்வாதி ஒருவரின் கூற்றுப்படி:

"எமது தாய்மார்கள் கல்வியறிவு பெற்றிருக்கவில்லை. ஆனால், புதிய தலைமுறையினரிடம் இப்போது ஒரு பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. தோட்டப் புறங்களைச் சேர்ந்த பெண்கள் தற்போது கூடுதல் வெளி உலக அறிவும் கல்வியும் பெற்றவர்களாக இருப்பதால், இத்தகைய விடயங்களை

கையாளும் திறன் அவர்களிடம் உள்ளது. எனினும், இது தற்பொழுது நிகழத் தொடங்கியுள்ள ஒரு புதிய மாற்றமாகும்."

பதுளையில் பெண்கள் அரசியலுக்குள் நுழைவதைத் தீர்மானிக்கும் ஒரு முனைப்பான காரணியாக மொழி விளங்குகின்றது. பிரதான நிர்வாக மொழியான சிங்களத்தில் சரளமாகப் பேசும் திறன், ஒரு தீர்க்கமான கலாசார மூலதனமாக இங்கே தொழிற்படுகின்றது. மலையகத் தமிழ் பெண்களை வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுப்பதற்கு பெரும்பாலும் இதுவே முதன்மைக் காரணமாக அமைகின்றது. பதுளையைச் சேர்ந்த பெண் அரசியல்வாதி ஒருவர் இதனை இவ்வாறு விளக்கினார்:

"எனக்கு சிங்களதில் உரையாட முடியும் என்பதால், உள்ளூராட்சி மன்றங்களில் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முனையும்போது கிராம மக்கள் என்னை நாடுகிறார்கள். இங்கு எமது தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சிங்களம் தெரிந்திருப்பது மிகவும் இன்றியமையாததாகும்."

மற்றொருவர் அதே கருத்தை இவ்வாறு கூறினார்:

"நாங்கள் தோட்டப் பகுதிகளில் வசித்தாலும், எப்போதும் சிங்களம் பேசும் அதிகாரிகளையே சார்ந்துள்ளோம். என்னால் சிங்களத்தில் உரையாட முடியும் என்பதால், கிராம மக்கள் எப்போதும் என்னைத் தங்களோடு வருமாறு கேட்பார்கள். இவ்வாறே மக்கள் மத்தியில் எனக்கு ஒரு அறிமுகம் கிடைத்தது. அதன் பின்னரே என்னைப் தேர்தலில் போட்டியிடுமாறு கோரினர்."

இப் பெண்களின் சிங்கள மொழிப் புலமையானது, மக்களை அரச இயந்திரத்துடன் இணைக்க உதவுவதோடு அவர்கள் வாழும் சமூகங்களுக்குள் அவர்களை ஒரு தவிர்க்க முடியாத இடைத்தரகர்களாக உயர்த்தி நிறுத்துகிறது. எனினும், மொழி சார் இச்சாதக நிலைமை ஓர் ஆழமான சமத்துவமின்மையை வெளிப்படுத்துகின்றது. அதாவது, பெண்களின் அரசியல் பிரவேசமானது, ஒரு முறையான கட்டமைப்பு உள்ளடக்கம் சார்ந்தது என்பதை விட, சிங்கள மொழி ஆதிக்கம் கொண்ட அதிகாரத்துவக் கட்டமைப்புகளுக்கு அவர்கள் எந்தளவுக்குப் பயன்படுவார்கள் என்ற கணக்கீட்டின் அடிப்படையிலேயே பெரும்பாலும் சாத்தியமாகிறது.

### அடையாள ரீதியான உள்ளடக்கம் மற்றும் பெயரளவு பிரதிநிதித்துவம்

மாவட்டங்களுக்கு இடையிலான பொதுவான போக்கைப் பார்க்கும்போது, பெண்களை அரசியலுக்குள் உள்வாங்குதல் என்பது பெரும்பாலும் ஒரு பெயரளவு அடையாளமாகவே உள்ளது. அரசினால் கட்டாயமாக்கப்பட்ட இட ஒதுக்கீடு, பெண் அரசியல்வாதிகளின் எண்ணிக்கையை அதிகரித்த போதிலும், ஆணாதிக்க அதிகாரக் கட்டமைப்புகளில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மட்டக்களப்பைச் சேர்ந்த ஆண் அரசியல்வாதி ஒருவர் இதனை இவ்வாறு ஒப்புக்கொண்டார்:

"பெண்கள் வந்து பணியாற்றுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்ப்பதில்லை; அவர்கள் இட ஒதுக்கீட்டு எண்ணிக்கையைப் பூர்த்தி செய்தால் போதுமானது. அவர்கள் பணியாற்றுவதை விடுத்து, பிள்ளைகளின் பொறுப்புகளிலும் ஏனைய வீட்டு விவகாரங்களிலும் கவனம் செலுத்துவதை உறுதிப்படுத்துவது எமது கடமையாகும்."

இக் கண்ணோட்டம், முறைசார்ந்த உள்வாங்கலில் நிலவும் வெற்றுத் தன்மையை வெளிப்படுத்துகின்றது. பெண்கள் தேர்தல் வேட்பாளர் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டாலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரமானது தொடர்ந்தும் ஆண்களின் அதிகாரத்தின் கீழேயே உள்ளது. இவ்வாறாக 'அதிகாரமளித்தல்' என்ற முகமூடிக்கு பின்னால், பெயரளவுப் பிரதிநிதித்துவமானது பாலினப் படிநிலைகளுக்கு தந்திரமாகப் புத்துயிர் அளித்து வருகின்றது.

### அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல் மற்றும் சரீசமமற்ற இடர்பாடுகள்

பெண் அரசியல்வாதிகள் மிரட்டல்களையும் வன்முறைகளையும் எதிர்கொள்கின்றனர். அவற்றின் தீவிரமும், வடிவமும் பிராந்தியத்திற்கு பிராந்தியம் மாறுபடுகின்றன. மட்டக்களப்பில், தமது அரசியல்

செயல்பாடுகளுக்காக நேரடியான அச்சுறுத்தல்களுக்கு ஆளானதாகப் பல பெண் அரசியல்வாதிகள் தெரிவித்தனர்:

"எனக்கு மிரட்டல் விடுத்து தொலைபேசி அழைப்புகள் வந்தன. அரசியலை விட்டு விலகுமாறு அவர்கள் என்னிடம் கூறினர். என்னுடைய நண்பர்கள், உறவினர்கள் மூலமாகக்கூட எனக்கு மிரட்டல் செய்திகளை அனுப்பி, என்னைப் பயப்பட வைத்து நான் அரசியலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு அவர்கள் முயன்றனர்."

மொனராகலை, யாழ்ப்பாணம் அல்லது பதுளை போன்ற மாவட்டங்களில் இவ்வாறான நிகழ்வுகள் குறைவாகவே இடம்பெற்றன; அங்கு நேரடி வன்முறையை விட சமூக ரீதியான பாலினக் கட்டுப்பாடுகளே பெண்களின் பங்கேற்பை நெறிப்படுத்துகின்றன. ஆனால் கொழும்பில், நகர்ப்புற அரசியலின் தீவிரமான மற்றும் போட்டித்தன்மைமிக்க போக்கானது பெண்களுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு பகைமைச் சூழலைத் தோற்றுவிக்கின்றது. தேர்தல் பிரச்சாரங்கள் இங்கே கடும் பகையுணர்ச்சியுடனேயே முன்னெடுக்கப்படுகின்றன. ஆணாதிக்கம் செறிந்த இந்த அரசியல் களத்தில் நுழையும் பெண்கள் வாய்மொழி ரீதியான துன்புறுத்தல்களை மட்டுமன்றி, உடல் ரீதியான அச்சுறுத்தல்களையும் ஒருசேர எதிர்கொள்ள நேரிடுகின்றது.

கொழும்புப் பெண் அரசியல்வாதி ஒருவர் தேர்தல் பிரச்சாரத்தின்போது தான் சந்தித்த வன்முறைச் சம்பவத்தை பின்வருமாறு விவரித்தார்:

"தேர்தல் நாளன்று, எதிர்த்தரப்பைச் சேர்ந்த ஆண்கள் குழுவொன்று எனது அலுவலகத்திற்கு அருகில் திரண்டிருந்தது. நான் அலுவலகத்தை விட்டு வெளியேறும் போது, அவர்கள் என்னைப் பார்த்து கூச்சலிடவும் மிக மோசமான வார்த்தைகளை கூறவும் தொடங்கினர். நான் அவர்களை எதிர்த்துப் பேச முயன்றபோது, அவர்களில் ஒருவர் என்னை தள்ளிவிட நிலைதடுமாறி கீழே விழுந்தேன். அதனால் ஏற்பட்ட பலத்த காயத்தின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியிருந்தது."

அரசியல் போட்டி, ஆதரவு மற்றும் ஆணாதிக்கம் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட கொழும்பின் அரசியல் தீவிரத்தன்மை, பெண்கள் மீதான வன்முறையாக எவ்வாறு கட்டவிழ்த்து விடப்படுகின்றது என்பதை இவரது அனுபவம் விவரிக்கிறது. மட்டக்களப்பைப் பொறுத்தவரை அச்சுறுத்தல்கள் பெரும்பாலும் ஒழுக்க மற்றும் மத ரீதியான பின்னணியைக் கொண்டுள்ளன. ஆனால் கொழும்பிலோ நகர்ப்புற அரசியல்-பொருளாதார சூழலில் அரசியல் போட்டிகளுக்கும் பகிரங்கமான அதிகாரக் காட்சிப்படுத்தல்களுக்கும் இடையே நிகழும் உடல் ரீதியான வன்முறையாகவே இது வெளிப்படுத்தப்படுகின்றது.

### பொருளாதார ரீதியான சாதகமற்ற நிலை மற்றும் தேர்தல் பிரச்சார நிதி

இலங்கையின் அனைத்துப் பிராந்தியங்களிலும், பெண்கள் தங்கள் வினைத்திறனான அரசியல் பங்கேற்பிற்கு தொடர்ச்சியாக நிதி ரீதியான தடைகள் ஒரு சவாலாக அமைந்துள்ளதாக அடையாளப்படுத்தியுள்ளனர். இலங்கையின் அரசியல் போட்டியானது ஆழமான முறையில் பணமயமாக்கப்பட்டுள்ளது. சுவரொட்டிகள், ஒலிபெருக்கி சாதனங்கள், பொதுக்கூட்டங்கள் மற்றும் வாக்காளர் அணிதிரட்டல் ஆகியவற்றிற்குப் பெரும் நிதி அவசியமாகின்றது. எனினும், உள்ளூராட்சி மன்ற பெண் அரசியல்வாதிகள் பெரும்பாலும் இத்தகைய ஆதரவு வலையமைப்புகளையோ அல்லது சுயாதீன நிதி மூலதனத்தையோ கொண்டிருப்பதில்லை.

பெண் அரசியல்வாதிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றும் சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவரின் கூற்றுப்படி:

"ஆண்கள் தங்களின் தேர்தல் செலவுகளுக்காகக் கடை உரிமையாளர்கள், உள்ளூர் வர்த்தகர்கள் அல்லது தங்களுக்குத் தெரிந்தவர்களிடம் பெரியளவில் கேள்விகள் ஏதுமின்றி கடன் வாங்க முடிகின்றது. ஆனால், பெண்களால் அவ்வாறு செய்ய முடியாது. அவர்கள் அவ்வாறு கடன் வாங்க முற்படும்போது, அது மிக எளிதாக வதந்தியாக மாறுகின்றது. மக்கள் அது குறித்துப் பல கதைகளை உருவாக்குவதோடு, அந்தக் கடனுதவியைச் சம்பந்தப்பட்ட ஆணுடன் அந்தப் பெண் வைத்திருக்கும் ஒரு முறையற்ற உறவுக்கான சான்றாகவே மக்கள் பார்க்க முயல்கின்றனர்."

கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள பெண் அரசியல்வாதிகள், பெரும் செலவீனங்களைத் தவிர்த்து, வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரிக்கும், அதிக உழைப்பு கோரும் மற்றும் குறைந்த செலவிலான முறைகளையே நம்பியிருப்பதாகத் தெரிவித்தனர்.

“எனது கட்சியிடமிருந்து சில தின அட்டைகள் கிடைத்தன. தேர்தல் பிரச்சாரத்தின் போது நானே வீடு வீடாகச் சென்று அவற்றை விநியோகித்தேன். கூட்டங்களை நடத்துவதற்கோ அல்லது பாரிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கோ என்னிடம் பண வசதி இல்லை.”

இன்னுமொருவர் இவ்வாறு குறிப்பிட்டார்:

“என்னிடம் போதிய நிதி வசதி இருந்திருந்தால் என்னால் வெற்றி பெற்றிருக்க முடியும். கட்சி வழங்கிய சில சுவரொட்டிகளை ஒட்டியதுடன், மக்களுடன் உரையாடுவதற்காக வீடு வீடாகச் சென்றேன். வீடுகள் மிகத் தொலைவில் அமைந்திருந்ததால் என்னால் எல்லா வீடுகளுக்கும் செல்ல முடியவில்லை; இருப்பினும் எனது துவிச்சக்கர வண்டியில் பெரும்பாலான வீடுகளுக்குச் சென்றேன். எனக்குப் பெரிய அளவில் செலவுகள் இருக்கவில்லை. எனக்கு உதவியாக இரண்டு பெண்கள் மட்டுமே வந்தனர்.”

இதற்கு நேர்மாறாக, ஆண் அரசியல்வாதிகள் தங்களது தேர்தல் பிரச்சார செலவுகளைப் பற்றி மிகவும் வெளிப்படையாகவும் நம்பிக்கையுடனும் பேசினர்:

“சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் வரை எனக்குச் செலவானது. கூட்டங்களை ஏற்பாடு செய்ய எனக்கு உதவியவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டியிருந்ததுடன், ஒலிபெருக்கி சாதனங்களுக்கான செலவும் மிக அதிகமாகக் காணப்பட்டது. ஒரு கூட்டத்திற்காக ஒலிபெருக்கி சாதனங்களை வாடகைக்கு எடுப்பதற்கு மாத்திரம் *10,000* முதல் *15,000* ரூபாய் வரை செலவாகின்றது.” (மட்டக்களப்பு)

“கடந்த மாகாண சபைத் தேர்தல் முதற்கொண்டே நான் மக்களுக்குப் பெருமளவில் உதவி செய்து வருகின்றேன்... வீதிகளை அமைக்கும் பணிகளிலும் நான் ஈடுபட்டேன். எனவே, இம்முறை மக்கள் எனக்கு வாக்களிப்பது ஒன்றும் கடினமான காரியமாக இருக்கவில்லை. நான் சில சிறியளவிலான தெருமுனைக் கூட்டங்கள் மற்றும் விளையாட்டுக்கழகக் கூட்டங்களையும் நடத்தி அவர்களின் ஆதரவைக் கோரினேன். சுவரொட்டிகளை அச்சிடுவதற்கும் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுப்பதற்கும் எனது கட்சி எனக்கு சிறு தொகை நிதி வழங்கியது. அத்துடன் எனது சொந்தத் தொழில்களிலிருந்தும் ஒரு பகுதி நிதியை இதற்காகச் செலவிட்டேன்.” (யாழ்ப்பாணம்)

பொருளாதார மூலதனமும் பாலின அடிப்படையிலான ஒழுக்க விழுமியங்களும் ஒன்றிணைந்து, ஒருவரது அரசியல் போட்டித்தன்மையை எவ்வாறு தீர்மானிக்கின்றன என்பதை இத் தெளிவான முரண்பாடு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஆண்கள் தங்கள் செல்வத்தை அதிக விளம்பரம் மற்றும் மக்கள் கவனத்தை ஈர்க்கும் சக்தியாக மாற்றிக்கொள்ள முடிகிறது. ஆனால் பெண்களோ வாக்காளர்களுடனான நேரடித் தொடர்பையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இத்தகைய உத்திகள் மிகக் குறைந்த பொருள்சார் பலன்களையே அளிப்பதோடு, அரசியலில் போதுமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைவதில்லை.

இருப்பினும், கொழும்பின் அரசியல் நகர்வுகள் சற்றே மாறுபட்ட ஒரு சூழலை சித்தரிக்கின்றது. அந்நகரத்தின் அதீத போட்டித்தன்மை மற்றும் பணமயமாக்கப்பட்ட அரசியல் கலாசாரத்தைக் கருத்தில் கொள்ளும்போது, ஒரு வேட்பாளராக களத்தில் நிலைத்து நிற்பதற்கு ஆண்களும் பெண்களும் ஒருசேர அதிகளவில் செலவிட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். மொனராகலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு அல்லது பதுளை போன்ற மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது, தேர்தல் செலவினங்களில் நிலவும் பாலின இடைவெளி கொழும்பில் அவ்வளவு வெளிப்படையாகத் தெரிவதில்லை. கொழும்பு பெண் அரசியல்வாதிகள் தங்களின் செலவுகள் குறித்த துல்லியமான தரவுகளை வெளிப்படுத்தாத போதிலும், அவர்களின் பேச்சும் விவரிப்புகளும் அவர்கள் தங்களுக்கு நிகரான ஆண் வேட்பாளர்களுக்கு இணையாகப் பாரிய தொகையைச் செலவிட்டுள்ளதையே உணர்த்தின. அவர்கள் பணத்தைப் பற்றிப் பேசும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்ததோடு,


தங்களின் தேர்தல் பிரச்சாரத்தின் பொருள்சார் அளவை விவரிப்பதை விட, தங்களின் 'கடின உழைப்பு' அல்லது 'அர்ப்பணிப்பு' நோக்கியே உரையாடலைத் திசைதிருப்ப முற்பட்டனர். கொழும்பு போன்ற பகுதிகளில், குறிப்பாகக் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள், கணிசமான நிதி முதலீடு இன்றித் தேர்தலில் போட்டியிடுவது சாத்தியமில்லாத காரியம் என்பதையே இது மெய்ப்பிக்கின்றது.

மேலும், கொழும்பிலுள்ள பெண் அரசியல்வாதிகள் அரசியலில் மிகுந்த ஈடுபாட்டுடனும் சுயமாகச் செயல்படும் ஆற்றலுடனும் செயல்படுவதைக் காண முடிகிறது. அவர்கள் ஏதோ வேட்பாளர் பட்டியலில் தமது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்பதற்காகப் போட்டியிடாமல், தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பின் மூலம் காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்த முனைப்புடன் செயல்படுகின்றனர். அதேவேளை, கொழும்பு மாநகரசபைப் பகுதியில் அரசியலுக்கு வரும் பெண்கள் பெரும்பாலும் ஒப்பீட்டளவில் வசதி வாய்ப்புகள் கொண்ட பின்னணியைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர்; கிராமப்புறங்களில் உள்ள பெண் வேட்பாளர்களைப் போலன்றி, இவர்கள் பெரும்பாலும் தனிப்பட்ட சொத்துக்கள், சொந்தத் தொழில்கள் அல்லது செல்வாக்குமிக்க சமூகத் தொடர்புகளைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பது எமது ஆய்வின் மூலம் புலனாகிறது.

## பிரச்சார நிதி திரட்டப்படும் வழிகள்/மூலங்கள்

### தனிப்பட்ட/சொந்த வளங்கள்

ஆண்கள் பெரும்பாலும் தங்களது தேர்தல் பிரச்சார செலவுகளுக்காகத் தாங்கள் ஈட்டிய தனிப்பட்ட செல்வம், குடும்பச் சொத்துக்கள் அல்லது வணிக முதலீடுகளைப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய வளங்கள் அவர்களுக்கு ஒலிபெருக்கி சாதனங்களை வாடகைக்கு எடுத்தல், பிரம்மாண்டமான பேரணிகளை நடத்துதல் அல்லது தங்களது செல்வாக்கையும் போட்டித்தன்மையையும் கணிசமாக அதிகரிக்கக் கூடிய பிரச்சாரப் பொருட்களை விநியோகித்தல் போன்ற அதிக முதலீடு தேவைப்படும் பணிகளில் ஈடுபடுவதற்கான நெகிழ்வுத்தன்மையை வழங்குகின்றன. இதற்கு நேர்மாறாக, பெண்களுக்கு இத்தகைய சொத்துக்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன. அவர்களின் தேர்தல் செலவுகள் பெரும்பாலும் சிறு வணிகங்கள், தனிப்பட்ட சேமிப்புகள், தங்க நகைகளை அடகு வைத்தல் அல்லது கணவன் மற்றும் இதர ஆண் உறவினர்களின் நிதி உதவியிலிருந்தே கிடைக்கின்றன.




அனைத்துப் பிராந்தியங்களிலும், பெண்கள் தங்கள் தேர்தல் பிரச்சாரத்திற்காக நிதி திரட்டப் பயன்படுத்திய பல்வேறு உத்திகள், சொத்துரிமையில் நிலவும் ஆழமான, பாலின ரீதியான தடைகளை பிரதிபலித்தன. தங்களுக்கு நேரடி உரிமையுள்ள ஒரே சொத்தாக விளங்கும் தங்க நகைகளை அடகு வைப்பதே அவர்கள் பின்பற்றும் பொதுவான வழியாக இருந்தது. பதுளையைச் சேர்ந்த பெண் அரசியல்வாதி ஒருவர் இது குறித்துக் கூறுகையில், "தேர்தல் பிரச்சாரத்திற்காக எனது நகைகளை அடகு வைத்தேன். அவற்றை எப்போது என்னால் மீட்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. அதைத் திரும்ப மீட்பது குறித்து நான் இன்னும் யோசிக்கக் கூட இல்லை" என்றார். அதே மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொரு பெண், தனது தாயின் சிறு தொழிலைப் பயன்படுத்தி ஒரு சிறிய

கடனைப் பெற்றதை இவ்வாறு விவரித்தார்: "நீங்கள் ஒரு வியாபாரம் செய்பவராக இருந்தால் வங்கிகளிடமிருந்து கடன் வாங்கலாம். எனவே எனது பெயரில் அடமானம் வைப்பதற்கு எதுவுமே இல்லாததால், கடன் பெறுவதற்காக எனது தாயின் வியாபாரத்தை பயன்படுத்தினேன்."

மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இதே போன்ற அனுபவங்களே பகிரப்பட்டன. அங்குள்ள பெண் வேட்பாளர்கள் பயணச் செலவுகளுக்காகவும், தேர்தல் பிரச்சார பணிகளின் போது தம்முடன் வருபவர்களின் உணவுச் செலவுகளுக்காகவும் நகைகளை அடகு வைத்துள்ளனர். பெண்களின் அரசியல் வாழ்க்கைக்கான பிரவேசமானது அவர்களிடமுள்ள சிறியளவிலான, தனிப்பட்ட உடமைகளைத் தியாகம் செய்வதன் மூலமே நிகழ்கிறது என்பதை இது உணர்த்துகிறது. ஒரு பெண்ணின் பாதுகாப்பு மற்றும் சமூக கௌரவத்தின் சின்னங்களாகக் கருதப்படும் நகைகள், இக்கட்டான அரசியல் சூழலில் பிழைத்திருப்பதற்கான சாதனங்களாக மாறியுள்ளன.

கொழும்பின் நிலைமையோ இதிலிருந்து சற்றே மாறுபட்டதாகத் தென்பட்டது. அங்குள்ள பெண் அரசியல்வாதிகள் குடும்பத் தொழில்கள், சிறு வணிகங்கள் அல்லது நிரந்தர ஊதியம் பெறும் வேலைகள் மூலம் வருமானம் ஈட்டும் கூடுதல் வாய்ப்புகளைக் கொண்டிருந்தனர். இது நிதி ரீதியான பாதுகாப்பின்மைக்கு எதிராக அவர்களுக்கு ஒரு அரணாக அமைந்தது. இருந்தபோதிலும், இந்த பெண்கள் கூட தாங்கள் செலவிட்ட துல்லியமான தொகையை வெளிப்படுத்தத் தயக்கம் காட்டினர். தேர்தல் செலவுகள் குறித்துப் பேசும்போது அவர்கள் மிகவும் எச்சரிக்கையாகவும் மேலோட்டமாகவுமே கருத்துத் தெரிவித்தனர். அவர்கள் குறிப்பிட்ட புள்ளிவிபரங்களை வழங்காவிட்டாலும், அவர்களின் விவரிப்புகள் பெருமளவிலான செலவீனங்கள் செய்யப்பட்டிருப்பதையே கோடிட்டுக் காட்டின. கொழும்பைச் சேர்ந்த பெண் அரசியல்வாதி ஒருவர் இது குறித்துக் கூறுகையில், "உங்களுக்கே தெரியும், மக்கள் எங்களைக் கவனிக்க வேண்டும் என்றால் நாங்கள் அதிகளவில் செலவு செய்ய வேண்டியுள்ளது. பணம் செலவழிக்காமல் கொழும்பில் அரசியல் செய்வது என்பது இயலாத காரியம்" எனக் குறிப்பிட்டார். இந்த வேட்பாளர்கள் உரையாடிய விதமானது, ஏனையோரை விட இவர்களிடம் போதிய வசதிகள் இருந்த போதிலும், பணத்தைப் பற்றி, குறிப்பாகப் பெரும் தொகையைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவது சமூக ரீதியாக ஒருவித நெருடலையும் அரசியல் ரீதியாக கவனமாக அணுகப்பட வேண்டியிருந்ததையும் உணர்த்தியது.

இந்தச் சூழல்கள் அனைத்திலும், ஆண்கள் முற்றிலும் வேறுபட்டதொரு அனுபவத்தையே வெளிப்படுத்தினர். அவர்களில் எவருமே நகைகளை அடகு வைத்ததாகவோ அல்லது கடன் பெற்றதாகவோ குறிப்பிடவில்லை. மாறாக, தங்கள் வணிகங்கள் மூலமாகவோ அல்லது காலப்போக்கில் தாங்கள் சேர்த்த தனிப்பட்ட செல்வத்திலிருந்தோ நிதி திரட்டியதாகவே விவரித்தனர். பதுளையைச் சேர்ந்த ஆண் அரசியல்வாதி ஒருவர் இது குறித்துக் கூறுகையில், "நான் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் வரை செலவிட்டேன். கூட்டங்களை ஏற்பாடு செய்ய உதவியவர்களுக்கான கூலி, ஒலிபெருக்கி சாதனங்கள் மற்றும் அச்சுச் செலவுகள் என அனைத்திற்கும் எனது சொந்தத் தொழிலில் ஈட்டிய பணத்தையே பயன்படுத்தினேன்," என்றார். ஏனைய வேட்பாளர்கள் 'புகைப்படச் சட்டகம் செய்யும் கடைகள்,' 'வாகனங்களை வாடகைக்கு விடுதல்' 'முச்சக்கர வண்டி ஓட்டுதல்' அல்லது 'மேலதிக வகுப்புக்கள் நடத்துதல்' போன்றவற்றின் மூலம் கிடைத்த வருமானத்தைத் தேர்தலுக்குப் பயன்படுத்தியதாகத் தெரிவித்தனர். ஆண்களுக்கு வணிக மூலதனம் மற்றும் சொத்துக்கள் மீதுள்ள இத்தகைய அதிகாரம், அவர்கள் எவ்விதச் சிரமமுமின்றிப் பாரிய அளவில் தேர்தல் நிதியைத் திரட்டுவதற்கு எவ்வாறெல்லாம் வழிவகுக்கின்றது என்பதை இந்த விவரிப்புகள் தெளிவுபடுத்துகின்றன.

பிராந்திய மகளிர் உரிமை அமைப்பு ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி நேர்காணலில் கலந்துகொண்ட நிபுணர் ஒருவர் பின்வருமாறு தொகுத்துக் கூறினார்: "பெண்கள் தங்கள் சொந்தப் பெயரில் சொத்து வைத்திருப்பது மிக ஆர்வமான ஒன்று. நில உறுதிப் பத்திரங்கள் கூட பெரும்பாலும் கணவன்மாரின் பெயரிலேயே பதிவு செய்யப்படுகின்றன. ஆண்கள் தேர்தல் செலவுக்காக தங்களது நிலத்தையோ மற்ற சொத்துக்களையோ அடகு வைக்க முடிகின்ற அதேவேளை, பெண்களுக்கு அத்தகைய நிதி வசதிகள் காணப்படுவதில்லை. பெரும்பாலான நேரங்களில், பெண்களிடம் இருக்கும் ஒரே சொத்து சிறிது தங்க நகைகள் மட்டுமே. பெரும்பாலும் அவை கூட கணவன்மாரின் நிர்வகிப்பிலோ அல்லது அவர்களின் கட்டுப்பாட்டிலோதான் இருக்கின்றன."

சொத்துரிமையில் நிலவும் இத்தகைய கட்டமைப்பு ரீதியான சமமின்மை, பெண்களின் அரசியல் ஈடுபாட்டில் பாரிய செல்வாக்கைச் செலுத்துகின்றது. பல பெண்களைப் பொறுத்தவரை, தேர்தல் அரசியலில் நுழைவது என்பது கடனாளியாவதற்கோ அல்லது பொருளாதார மற்றும் உணர்வு ரீதியான மதிப்பைக் கொண்டுள்ள தங்களது தனிப்பட்ட சொத்துக்களைப் பணயம் வைப்பதற்கோ சமமானதாகும். அத்துடன், நிதி தேவைக்காகக் கணவன் அல்லது குடும்பத்தாரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை, அவர்களின் தேர்தல் பிரச்சாரங்கள் சுயாதீனமானவையாக அமைவதைத் தடுக்கிறது. ஆண்கள் தங்கள் பணத்தைச் செலவிடுவதில் முழுச் சுதந்திரத்துடன் செயல்படும் அதேநேரம், பெண்கள் பணத்தைப் பெறுவதற்குப் பெரும்பாலும் தங்கள் குடும்பங்களுக்குள்ளேயே பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது. இது அவர்கள் முடிவுகளை எடுப்பதில் காலதாமதத்தையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்துகிறது. நிதி மூலதனம் என்பது எவ்வாறு பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது என்பதையும், அது சொத்துரிமையோடு எவ்வாறு பின்னிப்பிணைந்துள்ளது என்பதையும் இந்தத் தெளிவான வேறுபாடு உறுதிப்படுத்துகின்றது.

### அரசியல் ஆதரவு வலையமைப்புகள்

ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் ஆதரவு வலையமைப்புகள், குறிப்பாக ஆண்களின் தேர்தல் பிரச்சார நிதி திரட்டலில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இலங்கையின் அரசியல் என்பது சலுகைகள், உதவிகள் மற்றும் செல்வாக்கு ஆகியவற்றிற்குப் பதிலாக விசுவாசம், ஆதரவு மற்றும் நிதிப் பங்களிப்புகள் பரிமாறிக்கொள்ளப்படும் ஒரு பரஸ்பரக் கடப்பாட்டு வலையமைப்பில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இத்தகைய அரசியல் செல்வாக்கு என்பது வெறும் பொருளாதார உறவாக மட்டும் அல்லாமல், ஒரு தார்மீக பொருளாதாரமாக (Moral economy), அதாவது நன்றியுணர்வு, அங்கீகாரம் மற்றும் பரஸ்பரக் கைம்மாறு ஆகியவற்றின் தொடர்ச்சியான ஒரு பரிமாற்றமாகவே இயங்குகின்றது. கிராமத்தவர் ஒருவருக்கு மருத்துவமனைச் சேவையை பெற்றுக் கொள்ள உத்தியோகபூர்வ சந்திப்பு நேரம் ஒன்றை பெற்றுக் கொடுத்தல், அரசாங்க நலத்திட்ட உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் அல்லது அரச நிர்வாக விதிமுறைகளுடன் தொடர்புடைய சிக்கல்களை தீர்த்துக் கொடுத்தல் போன்ற அன்றாட இடைத்தரகர் பணிகளைச் செய்வதன் மூலம், தங்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற பிம்பத்தை ஆண்கள் உருவாக்குகின்றனர். இந்த நற்பெயரே இறுதியில் அவர்களுக்கு வாக்குகளாகவும் தேர்தல் பிரச்சாரத்திற்கான நிதியாகவும் மாறுகின்றன.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஓர் ஆண் அரசியல்வாதி, உள்ளூர் வைத்தியசாலையில் தான் ஆற்றிய பணி கிராம மக்களுக்குப் பல்வேறு வழிகளில் உதவ தனக்கு எவ்வாறு வாய்ப்பளித்தது என்பது குறித்து இவ்வாறு குறிப்பிட்டார்:

"நான் கிராமத்து வைத்தியசாலையில் பணிபுரிகின்றேன். எனது தொழில் நிமித்தம் இப்பகுதியிலுள்ள ஏராளமான மக்களுக்கு உதவக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எனக்குத் தெரிந்தவர்கள் எவராவது வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னர் என்னைத் தொடர்புகொண்டால், அவர்களை நான் வரிசையில் நிற்க விடுவதில்லை. மருந்தக (*Clinic*) பட்டியலில் அவர்களின் பெயரைச் சேர்த்துக்கொள்ளவும் நான் உதவுகின்றேன். அத்தோடு, வைத்தியசாலையிலிருந்து எனக்குக் கிடைக்கின்ற இலவச மருந்துகளையும் நான் மக்களுக்கு வழங்குகின்றேன்... அரசியலில் ஈடுபட வேண்டும் என்று நான் சிந்திப்பதற்கு முன்பிருந்தே, இவ்வாறான உதவிகளை மக்களுக்கு நான் தொடர்ந்து செய்து வருகின்றேன்."

இவரது இக் குறிப்பானது, அவர் மக்களுக்கு வழங்கும் அன்றாட உதவி முறைகளை மையமாகக் கொண்டுள்ளது. அதாவது வரிசைகளைத் தவிர்த்து விரைவாகச் சேவைகளைப் பெற உதவுதல், மருந்துகளைப் பெற்றுக்கொடுத்தல் அல்லது பொதுச் சேவைகளுக்கான அணுகலை உறுதி செய்தல் போன்றவற்றை இது குறிக்கிறது. இவை தனிப்பட்ட தாராள மனப்பான்மையுடன் கூடிய செயல்களாக முன்வைக்கப்பட்டாலும், அரச கட்டமைப்பிற்குள் ஒருவருக்கு இருக்கும் தொழில்முறை அதிகாரமானது, மக்களிடையே நீடித்த நன்றிக்கடனையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப எவ்வாறு வழிவகுக்கிறது என்பதை இச்சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. காலப்போக்கில் தொடர்ச்சியாகச் செய்யப்படும் இத்தகைய பணிகள், கடமையையும் கருணையையும் ஒருவித சமூக மூலதனமாக மாற்றுகின்றன; இதுவே பின்நாட்களில் அரசியல் ரீதியான அங்கீகாரத்தைப்

பெறுவதற்கு அடிப்படையாக அமைகின்றது. இவ்வாறான சூழல்களில், பொதுச் சேவைக்கும் அரசியல் செல்வாக்கை வளர்த்தெடுப்பதற்கும் இடையிலான எல்லைக்கோடு மங்கிப்போகின்றது: மக்களுக்கு உதவும் ஆற்றலானது, அமைதியான முறையில் செல்வாக்கைச் சேகரிக்கும் ஒரு வலிமையான கருவியாக உருவெடுக்கின்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த மற்றொரு ஆண் அரசியல்வாதி, உள்ளூர் சந்தையொன்றை மீட்டெடுப்பதற்கும், அதன் மூலம் மக்களுக்கு மலிவு விலையில் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் உதவிய பின்னர், தனது செல்வாக்கு எவ்வாறு வளர்ந்தது என்பதை நினைவுகூர்ந்தார். அவர் விளக்கியது போல, காரியங்களை "சாதித்துக் காட்டும்" அவரது திறன், அவரது அரசியல் செய்தியாகவும், செலவு திரட்டும் கருவியாகவும் மாறியது. இதேபோன்று, பதுளையிலும் ஓர் ஆண் அரசியல்வாதி, உள்ளூர் ஆதரவு வட்டாரங்கள் மற்றும் வணிகத் தொடர்புகள் மூலம் தனது படிப்படியான வளர்ச்சியை இவ்வாறு விவரித்தார்:

“நான் வாழ்வாதாரத்திற்காக வாகனங்களை வாடகைக்கு விடுகிறேன். அத்துடன் புகைப்படங்களுக்குச் சட்டகமிடும் வணிகத்தையும் செய்கிறேன். *2005* ஆம் ஆண்டிலிருந்து நான் அரசியலில் ஈடுபட்டு வருகிறேன். நேரடியாக அரசியலில் இறங்குவதற்கு முன்னரே, நான் மக்களுக்குப் பெரிதும் உதவி வந்தேன்.”

இந்த ஆண்கள் தமது அரசியல் ஈடுபாட்டைத் தங்களது நீண்டகாலச் சமூகப் பாத்திரங்களின் இயல்பான தொடர்ச்சியாகவே கட்டமைத்துள்ளனர். இவர்களது அரசியல் பிரவேசம் என்பது திடீர் இலட்சியம் அல்ல. மாறாக, பரஸ்பரக் கடப்பாடுகளின் அடிப்படையில் தனிப்பட்ட வலையமைப்புகளை வளர்த்தெடுத்த பல வருடகால உழைப்பின் உச்சமாகும். சமூகத் தொண்டு, நன்கொடைகள் மற்றும் தளபாட உதவிகள் போன்ற செயல்களின் மூலம், அவர்கள் தமது சமூகங்களுக்குள் நம்பிக்கைக்குரிய நபர்களாகத் தமக்கான நற்பெயரை கட்டியெழுப்பினர். இந்தச் சமூக நற்பெயர், தமக்குக் கிடைக்கும் உதவிக்கு ஈடாகப் பிரதிபலன் கிடைக்கும் என்று நம்பும் ஆதரவாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்ப்பதன் மூலம் ஒரு வகையான பொருளாதார வளமாக மாறுகிறது. இதன் விளைவாக, சமூக விசுவாசம் மற்றும் தொடர்ச்சியான ஆதரவு அளிக்கும் மறைமுக வாக்குறுதியின் துணையுடன், இந்த ஆண்கள் மிகுந்த தன்னம்பிக்கையுடன் தேர்தல்களில் போட்டியிடுகின்றனர்.

ஆண்களுக்கு நேர்மாறாக, பெண்கள் இத்தகைய ஆழமாக வேரூன்றிய ஆதரவாளர் வட்டாரங்களுக்கு வெளியே, ஓரங்கட்டப்பட்ட நிலையிலேயே உள்ளனர். இவர்களது அரசியல் பிரவேசம் பெரும்பாலும் சமீபத்தியதாகும். இது 25 சதவீத இட ஒதுக்கீடு அல்லது தேர்தலில் போட்டியிட முடியாத ஆண் உறவினர்களுக்குப் மாற்றீடாக அமைவது போன்ற காரணிகளால் சாத்தியமாகியுள்ளது. அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுத்தல், நலன்புரி உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் அல்லது உள்ளூர் அதிகாரிகளை அணுகுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற சமூகப் பணிகளைப் பெண்கள் அடிக்கடிச் செய்தாலும், இந்த முயற்சிகள் அரிதாகவே அரசியல் மூலதனமாகக் கருதப்படுகின்றன. மாறாக, இவை தேர்தல்களின் போது வாக்குகளைப் பெறுவதற்கான ஒரு பரிமாற்றச் செயலாகப் பார்க்கப்படாமல், தார்மீக அடிப்படையிலான சேவையாகவே (Acts of service) பார்க்கப்படுகின்றன.

மொனராகலையைச் சேர்ந்த பெண் அரசியல்வாதி ஒருவர், கிராமத்தவர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், உத்தியோகபூர்வ விடயங்களில் மத்தியஸ்தராகச் செயற்படுவதிலும் தனக்கிருக்கும் ஈடுபாட்டை இவ்வாறு விவரித்தார்:

“அடையாள அட்டைகளைப் பெறுவதற்கும், அஸ்வெசும (Aswesuma) பட்டியலில் பெயர்களைச் சேர்ப்பதற்கும் நான் மக்களுக்குப் பெரிதும் உதவுகிறேன். என்னை போன்றவர்கள் அரசியலில் இருக்க வேண்டும் என்று செயலாளர் கூடக் கூறினார். ஆனால் எனது பெயரை நீக்கி விட்டார்கள்."

பெண்களின் பங்களிப்புகள் சமூக ரீதியாக மதிக்கப்பட்டாலும், அவை பெரும்பாலும் உத்தியோகபூர்வ அரசியல் அங்கீகாரமாக மாறுவதில்லை என்பதை இவரது அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. அவர் மேலும் விளக்குகையில்:

“நான் தேர்தலில் வெற்றி பெற்றேன். ஆனால் அவர்கள் எனக்கு வாய்ப்பளிக்கவில்லை. அதற்குப் பதிலாக, கள்ளு வியாபாரம் செய்யும், நற்பண்புகள் இல்லாத வேறொரு பெண்ணை நியமித்தார்கள். அவரது வலையமைப்புகள் காரணமாகவே என்னை விட அவரைத் தெரிவு செய்தார்கள். அவர்கள் அமைச்சருக்கு மணல் வழங்கியிருந்ததுடன் அவரது அலுவலகத்தைக் கட்டவும் உதவியிருந்தார்கள். அதற்கான வெகுமதி அவர்களுக்குக் கிடைத்தது.”

இவரது கூற்று, பெண்களின் அரசியல் தார்மீக மற்றும் கொடுக்கல்-வாங்கல் எல்லைகளை வெளிப்படுத்துகிறது. சேவை மற்றும் ஒழுக்கத்தின் அடிப்படையில் அவர் ஈட்டிய தார்மீக மூலதனம், பரிமாற்றங்கள், இடைத்தரகர்கள் மற்றும் பொருள் ரீதியான பங்களிப்புகள் மூலம் செல்வாக்குச் செலுத்தப்படும் ஓர் அரசியல் கலாச்சாரத்தில் போதுமானதாக இருக்கவில்லை. ஆண்களுக்கு இணையான ஆதரவாளர் வலைப்பின்னல்கள் இல்லாத நிலையில், பெண்களின் அரசியல் பங்கேற்பு என்பது பெரும்பாலும் ஆண் அதிகாரத் தரகர்களின் அங்கீகாரத்திலேயே தங்கியுள்ளது.

மேலும், நிதியுதவிக்காக வர்த்தகர்களையோ அல்லது அரசியல் ஆதரவாளர்களையோ அணுகுவது தங்களது நற்பெயருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று பெண்கள் அச்சம் தெரிவித்தனர். மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி இதனை இவ்வாறு குறிப்பிட்டார்:

“ஒரு பெண் ஒரு தொழிலதிபரிடம் சென்று பணம் கேட்டால், மக்கள் பேசத் தொடங்கிவிடுவார்கள். அவள் வேறு ஏதோ காரணங்களுக்காக உதவி பெறுகிறாள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். எனவே, எங்களிடம் இருப்பதை வைத்தே நாங்கள் சமாளிக்க முயற்சிக்கிறோம்.”

பதுளையைச் சேர்ந்த மற்றொரு பெண் அரசியல்வாதி பின்வருமாறு விளக்கினார்:

“ஆண்களுக்குப் பணம் கேட்பது எளிது. எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் ஒருவரிடம் சென்று பேசினாலும் கூட, மக்கள் என்ன சொல்வார்கள் என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.” தேர்தல் பிரச்சார செலவுயளிப்பில் பெண்கள் எதிர்கொள்ளும் கட்டமைப்பு ரீதியான தடைகள் குறித்து அவர் தமது மேலதிக கருத்துக்களை வழங்கினார்:

“தொழிலதிபர்களும் பெண்களிடம் முதலீடு செய்யப் பயப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் முதலீடு செய்த பணம் திரும்பக் கிடைக்குமா என்று அவர்களுக்கு உறுதியாகத் தெரியாது. பெண்கள் மிகவும் நேர்மையானவர்கள்; அவர்கள் ஆண்களைப் போல ஊழல் செய்ய மாட்டார்கள்; எனவே அந்தப் பணம் தங்களுக்குத் திரும்ப வராது என்று அவர்கள் கூறுகிறார்கள்.”

இச் சாட்சியங்கள், அரசியல் நிதியுதவிக்கு அடிப்படையாக அமையும் ஆதரவாளர் வட்டாரங்களின் முறைசாராப் பொருளாதாரத்தில் பெண்கள் பங்கேற்பதை, சமுதாய கண்ணியம் மற்றும் ஒழுக்கக் கண்காணிப்பு தொடர்பான பாலினக் கட்டுப்பாடுகள் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதை நிரூபிக்கின்றன. பொருளாதார சமத்துவமின்மைக்கு அப்பால், பெண்களின் சமூகத் தொடர்புகள் மீதான இத்தகைய சமூகக் கண்காணிப்பு, அரசியல் வாழ்வைத் தக்கவைக்கும் பணம், செல்வாக்கு மற்றும் கடப்பாடுகளின் ஓட்டங்களுக்குள் அவர்கள் நுழைவதைக் கட்டுப்படுத்துகிறது. ஆண்களைப் பொறுத்தவரை, ஆதரவாளர் வட்டாரங்கள் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் முதலீடாகும்; ஆனால் பெண்களைப் பொறுத்தவரை, அவர்களைத் ஒழுக்க ரீதியாகத் தூய்மையானவர்களாகக் கருதும் அதே சமூகக் கட்டுப்பாடுகள், அதிகாரத்தின் அதே பொறிமுறைகளுடன் அவர்கள் ஈடுபடுவதைத் தடுக்கின்றன.

### அரசியல் கட்சி ஆதரவு

தேர்தல் பிரச்சாரங்களுக்கு நிதி வழங்குவதில் அரசியல் கட்சிகள் மற்றுமொரு முக்கியமான தளமாக விளங்குகின்றன. எனினும், அவற்றின் தாக்கம் பாலினம் மற்றும் வர்க்க ரீதியாகப் பெருமளவில் வேறுபடுகின்றது. ஆண்களைப் பொறுத்தவரை, கட்சியின் ஆதரவு என்பது பொதுவாக ஒரு துணைப் பங்களிப்பாகவே அமைகின்றது. அவர்கள் பெரும்பாலும் வணிகங்கள், சொத்துக்கள் அல்லது நன்கு வேரூன்றியுள்ள உள்ளூர் வலையமைப்புகள் மூலம் திரட்டப்பட்ட சுயாதீனமான நிதித் திறனைக் கொண்டுள்ளனர். இது அவர்கள்

தன்னிச்சையாகச் செயல்பட வழிவகுக்கின்றது. சுவரொட்டிகளை அச்சிடுதல், வாகனங்களை வாடகைக்கு எடுத்தல் அல்லது விளம்பரப் பணிகள் போன்றவற்றுக்குக் கட்சி வழங்கும் நிதி உதவியானது, அவர்களின் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு வாழ்வாதாரமாக அன்றி, ஓர் அடையாள ரீதியான அங்கீகாரமாகவே அமைகின்றது.

எனினும், பெண்களைப் பொறுத்தவரை, குறிப்பாகக் கிராமப்புற மற்றும் உழைக்கும் வர்க்கப் பின்னணியைக் கொண்டவர்களுக்கு, கட்சி ஆதரவு என்பது பெரும்பாலும் பிரச்சார செலவுக்கான முதன்மையான அல்லது ஒரே ஆதாரமாக அமைகிறது. இத்தகைய நிதியுதவிகள் பொதுவாக மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதுடன், மிக அடிப்படையான பிரச்சாரச் செலவுகளை மட்டுமே ஈடுசெய்கின்றன. இருந்தபோதிலும், கட்சியின் ஆதரவை உறுதிப்படுத்துவதே ஒரு பெரும் பேச்சுவார்த்தை நிகழ்வாக அமைகின்றது. இதில்

பெண்களின் நம்பகத்தன்மை, ஒழுக்கப் பண்பு மற்றும் அவர்களின் நிதி வசதி என அனைத்தும் மிகத் தீவிரமாகப் ஆராயப்படுகின்றன.

ஓர் அரசியல் ஆய்வாளர் தனது அவதானிப்பை இவ்வாறு பகிர்ந்து கொண்டார்:

“அரசியல் கட்சிகள் வெற்றிபெற உண்மையான வாய்ப்புள்ள பெண்களை வேட்பாளர்களாக நிறுத்தத் தயங்குகின்றன; அத்தகைய வேட்பாளர்களைக் கண்டு அவை அஞ்சுகின்றன. இடஒதுக்கீடு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே பெண்கள் பெரும்பாலும் சேர்க்கப்படுகிறார்கள். வணிகங்கள், கடைகள் அல்லது சொத்துக்களைக் கொண்ட ஆண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் அதேவேளையில், பெண்கள் பெரும்பாலும் குறைந்த வளங்களும் செல்வாக்கும் கொண்ட கீழ்மட்ட சமூகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்."

இச் சூழல் ஒரு பரந்த கட்டமைப்பு ரீதியான பாகுபாட்டைப் பிரதிபலிக்கிறது: பிரதிநிதித்துவ ஒதுக்கீடுகளைப் பூர்த்தி செய்யப் பெண்களின் அடையாள ரீதியான மதிப்பை நாடும் கட்சிகள், அவர்களைச் சாத்தியமான அரசியல் ஆளுமைகளாகக் கருதி முதலீடு செய்வது அரிது. இவ்வாறு, கட்சி நியமனங்கள் பாலின படிநிலைகளை சவாலுக்கு உட்படுத்துவதற்குப் பதிலாக அவற்றை மீண்டும் உருவாக்குகின்றன. இது பெண்களை ஊக்குவித்து வலுவாட்டுவதற்குப் பதிலாக அவர்களை பிறரைச் சார்ந்திருக்கும் நிலைக்குத் தள்ளுகின்றன.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு மாற்றுத்திறனாளியான முஸ்லிம் பெண் அரசியல்வாதி, பல்வேறு அரசியல் கட்சிகளால் தான் மீண்டும் மீண்டும் நிராகரிக்கப்பட்டதை இவ்வாறு விவரித்தார்:

“நான் வெவ்வேறு அரசியல் கட்சிகளிடம் சென்று, அவர்களின் கட்சியின் சார்பில் போட்டியிட முடியுமா என்று கேட்டேன். என்னிடம் போதுமான செலவு வசதி இல்லை என்பதை அறிந்த அவர்கள் எனது கோரிக்கையை நிராகரித்தனர். முஸ்லிம் காங்கிரஸ், தேர்தல் பிரச்சாரத்திற்குச் செலவழிக்க என்னிடம் போதிய பணம் இல்லை என்று கூறியது. அதேசமயம் தேசிய மக்கள் சக்தி (*NPP),* அவர்களின் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு எனக்குப் போதுமான கல்வித் தகைமை இல்லை என்று கூறியது. இறுதியில், சஜித் மட்டுமே எனக்கு ஒரு வாய்ப்பளித்தார். அதுவும்கூட... நான் ஒரு மாற்றுத்திறனாளி என்பதால் ஏற்பட்ட அனுதாபத்தின் காரணமாக இருக்கலாம்.”

அவரது அனுபவம், உள்ளூர் அரசியலில் காணப்படும் பன்முகத்தன்மை கொண்ட ஒதுக்கல் முறையைத் தெளிவாகப் பிரதிபலித்துக் காட்டுகிறது. அங்கு பாலினம் மற்றும் நிதித்திறன் ஆகிய இரண்டும் ஒன்றிணைந்து அதிகாரபூர்வ அரசியல் தளங்களுக்குள் பெண்கள் நுழைவதைக் கட்டுப்படுத்துகின்றன. அரசியல் கட்சிகள் ஒரு வேட்பாளரின் “வெற்றி வாய்ப்பை”, சமூக நம்பிக்கை அல்லது அடிமட்டப் பணிகளின் அடிப்படையில் தீர்மானிப்பதில்லை. மாறாக, பணப்புழக்கம் மற்றும் செல்வாக்கு மிக்க தொடர்புகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கின்றன.

மட்டக்களப்பைச் சேர்ந்த மற்றொரு முஸ்லிம் பெண் அரசியல்வாதி, தனது பல வருடகால சமூகப் பணிகள் கட்சி உயர் வர்க்கத்தினரால் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டன என்பதை விவரித்தார்:

“நான் அரசியலில் நுழைவதற்கு முன்பு நிறையச் சமூகப் பணிகளைச் செய்தேன். இது குறித்து

அரசியல்வாதிகளைச் சந்திக்க முயன்றேன். ஆனால் அவர்கள் எனக்கு ஒருபோதும் நேரம் ஒதுக்கவில்லை. ஹிஸ்புல்லாவைச் சந்திப்பது சாத்தியமற்றதாக இருந்தது. அரசியலுக்கு வரும் பெரும்பாலான முஸ்லிம் பெண்கள், செல்வாக்கு மிக்க குடும்பப் பின்னணியைக் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். நான் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் (*RDS)* பொருளாளராகப் பணியாற்றி, பல பெண்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தேன். இப் பகுதியில் உள்ள முஸ்லிம் பெண்களுக்கு நான் செய்த உதவிகளாலேயே எனக்கு நல்ல அறிமுகம் கிடைத்தது. அதுதான் நான் அரசியலுக்குள் நுழையக் காரணமாகவும் அமைந்தது. முன்பெல்லாம் என்னைச் சந்திக்க மறுத்த அதே அரசியல்வாதிகள், இப்போது தங்கள் கட்சிகளுக்கான வாக்குகளைப் பெறுவதற்காக என்னைச் சந்திக்க முயல்கிறார்கள்."

பெண்களின் சமூகப் பணிகள், ஆண்களின் தேர்தல் இலக்குகளுக்குச் சாதகமாக அமையும் போது மட்டுமே அரசியலில் அங்கீகாரம் பெறுகின்றன என்பதை அவரது கதை வெளிப்படுத்துகிறது. பெண்களின் தார்மீக உழைப்பு வாக்குகளைத் திரட்டுவதற்காகக் கருவியாக்கப்படுகிறதே தவிர, அதற்குப் பிரதிபலனாக அவர்களுக்குப் போதுமான அதிகாரமோ அல்லது நிதி ஆதரவோ வழங்கப்படுவதில்லை. மட்டக்களப்பைச் சேர்ந்த மற்றொரு பெண் அரசியல்வாதி இதனைச் சுருக்கமாகக் கூறினார்:

"எந்தவொரு அரசியல் கட்சியிலும் எவரும் பெண்களுக்குச் சமமான மரியாதையை வழங்குவதில்லை. அவர்கள் அனைவரும் பெண்களாகிய எங்களை வாக்குகளைப் பெறுவதற்காக மட்டுமே பயன்படுத்துகிறார்கள்."

எனவே, கட்சிகளுக்குள் பெண்களின் அனுபவங்கள் ஒரு முரண்பாட்டையே விளக்குகின்றன. சமூக நற்பண்புகள் மற்றும் சேவையின் பிரதிநிதிகளாக பொதுவாழ்வில் பங்கேற்க அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆனால் வளங்களும், செல்வாக்கும் பரிமாறப்படும் பரிவர்த்தனை அடிப்படையிலான தளங்களில் .(Transactional spaces) இருந்து அவர்கள் விலக்கப்படுகின்றனர். மொனராகலையைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

*"2018*-இல் நான் அரசியலுக்கு வந்தபோது எனக்கு யாரும் வழிகாட்டவில்லை. பட்டியலில் ஒரு பெண்ணின் பெயர் இருக்க வேண்டும் என்று மட்டுமே அவர்கள் விரும்பினார்கள்."

அவரது ஏமாற்றம், கட்சிகளில் பெண்கள் சேர்க்கப்படுவது ஒரு குறியீட்டு நடவடிக்கையாகவே இருப்பதை வெளிப்படுத்துகிறது.. அங்கு பெண்கள் ஆட்சி அதிகாரத்திற்காக அல்லாமல், பெயரளவிலான பிரதிநிதித்துவத்திற்காக மட்டுமே மதிக்கப்படுகிறார்கள்.

சுருக்கமாகக் கூறின், அரசியல் கட்சிகள், பெண்களின் அரசியல் பயணத்தில் உதவியாளர்களாகவும் அதேவேளை நுழைவைத் தடுக்கும் வாயிற்காவலர்களாகவும் செயற்படுகின்றன. ஆண்களைப் பொறுத்தவரை, கட்சி ஆதரவு என்பது ஏற்கனவே அவர்களிடம் உள்ள செலவு மற்றும் ஆதரவாளர் வட்டாரங்களை வலுப்படுத்துவதுடன், அரசியல் களத்தில் அவர்களின் அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது. பெண்களைப் பொறுத்தவரை, பெரும்பாலான சூழ்நிலைகளில் கட்சித் தொடர்பு என்பது அவர்களுக்கு மக்களிடையேயான ஓர் அறிமுகத்தை வழங்குகிறதே தவிர, சுயாதீனத்தன்மையை அளிப்பதில்லை. செலவு, அங்கீகாரம் மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றுக்கான அவர்களின் அணுகல் என்பது, நிதி, செல்வாக்கு மற்றும் கொடுக்கல்-வாங்கல் பரிமாற்றங்களின் அடிப்படையில் தகுதியை வரையறுக்கும் ஆண்களை மையமாகக் கொண்ட படிநிலைகளின் ஊடாகவே தீர்மானிக்கப்படுகிறது. எனவே, பாலின இடஒதுக்கீடு மற்றும் கட்சிச் சீர்திருத்தங்கள் பெண்களின் பங்கேற்பிற்கான கதவுகளைத் திறந்திருந்தாலும், அதிகாரத்தின் நாணயமாக பண பலம் கொண்ட ஆணாதிக்கத்தை முன்னிலைப்படுத்தும் அடிப்படையான அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பை அவை இன்னும் தகர்க்கவில்லை.

---

1. Prime Minister Dr. Harini Amarasuriya stated that "no country has yet fully achieved gender equality, and the road ahead demands sustained political commitment" (Prime Minister's Office, 2025). https://www.pmoffice.gov.lk/news.php?para=RU5vekFVR2dpQTd2VGRiMkZUNE4wRUowaFNidmJPMHBKdmdqU29aZ25CU0t0MDE2b0tEa0luemErMFkyeG-dzUQ==

## தேர்தல் போட்டியில் தேர்தல் பிரச்சார நிதியின் பங்கு

இலங்கையில் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதில் பிரச்சார செலவு மிக முக்கியமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட பங்கினை வகிக்கிறது. இது கூட்டங்களை ஒழுங்கமைத்தல் அல்லது சுவரொட்டிகளை அச்சிடுதல் போன்ற மேலோட்டமான விடயங்களை விடவும் ஆழமானது. வேட்பாளர்கள் நிதி வளங்களைத் திரட்டும் திறன், மக்களிடையேயான அவர்களின் அறிமுகம் மற்றும் நம்பகத்தன்மையை மட்டுமன்றி, சமூக அங்கீகாரத்தை வாக்குகளாக மாற்றும் திறனையும் நேரடியாகப் பாதிக்கிறது. பொருளாதார அதிகாரமும் அரசியல் அதிகாரமும் எவ்வாறு ஒன்றிணைகின்றன என்பதையும், அது எவ்வாறு ஏற்கனவே இருக்கும் சமூகப் படிநிலைகளை வலுப்படுத்துகிறது என்பதையும் இச் சூழல் சுட்டிக்காட்டுகிறது.

### The Role of Campaign Finance in Electoral Competition

Elections are often decided not by longstanding service and commitment but by visible interventions in the days leading up to the election day.

**Material Intervention** — Male politicians invest in donations or repairs to draw attention to their campaign by leveraging the advantages inherent to them. This eclipses female candidates who invest years into community service

**Unreliability of Elections** — A candidates access and ability to mobilize financial resources impacts their visibility and credibility and their electoral success

**Financial Inequality** — In an environment where women are already constrained by an amalgamation of social and cultural barriers, financial inequality further deepens the divide between male and female candidates

### Why is Campaign Finance Regulation Important?

**Fairness Matters** — Campaign finance regulation emerges as a critical mechanism to counterbalance the structural disadvantages that women face. Regulation allows women more feasible opportunities for participation

கொழும்பைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி விளக்கியது போல, நீண்டகாலமாகச் சமூகப் பணிகளில் ஈடுபட்டிருந்தாலும், கணிசமான நிதி முதலீடு இன்றி வெற்றி பெறுவது கடினமாகும். அவர் கூறியதாவது: "நீங்கள் பத்து வருடங்களாக மக்களுக்கு உதவியிருக்கலாம், ஆனால் பிரச்சார காலத்தில் நீங்கள் செலவு செய்யவில்லை என்றால், மக்கள் உங்களை நினைவில் கொள்ள மாட்டார்கள். வெற்றி என்பது வாக்காளர்கள் கடந்த ஒரு மாதத்தில் என்ன பார்க்கிறார்கள் என்பதில் தான் இருக்கிறது, நீங்கள் இதற்கு முன் என்ன செய்தீர்கள் என்பதில் அல்ல." இலங்கைத் தேர்தல் அரசியலின் கால ரீதியான தர்க்கத்தை இது கோடிட்டுக் காட்டுகிறது: நீண்டகாலச் சேவைகள் மற்றும் அடிமட்ட ஈடுபாடுகள் சமூக ரீதியாக மதிக்கப்பட்டாலும், அவை பிரச்சார காலத்தில் மேற்கொள்ளப்படும் உடனடி மற்றும் கண்கூடான புலப்படும் தலையீடுகளால் நிரப்பப்படாவிட்டால், அவை வாக்குகளாக மாறுவதில்லை. சுருக்கமாகக் கூறினால், தேர்தல் வெற்றி என்பது திரட்டப்பட்ட சமூகப் பங்களிப்புகளால் தீர்மானிக்கப்படுவதை விட, குறுகிய காலத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் ஆதரவுப் பிரகடனங்களை ஒழுங்கமைக்கும் வேட்பாளர்களின் திறனாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

பதுளையில் உள்ள ஒரு பெண் அரசியல்வாதியின் அனுபவம் இந் நிலைமையை மேலும் உறுதிப்படுத்துகிறது. பல வருடங்களாகத் தான் ஆற்றிய சமூகப் பணிகள், தேர்தல் நேரத்தில் ஓர் ஆண் அரசியல்வாதியால் மேற்கொள்ளப்பட்ட உடனடிப் பொருள் ரீதியான தலையீட்டினால் எவ்வாறு மறைக்கப்பட்டன என்பதை அவர் இவ்வாறு விவரித்தார்: "நானும் எனது கணவரும் எப்போதும் மக்களுக்கு உதவி வந்தோம். ஆனால் மற்றொரு ஆண் வேட்பாளர் தேர்தலுக்குச் சற்று முன்னதாக ஒரு தண்ணீர் குழாய் பிரச்சினையைச் சரிசெய்தார். தேர்தல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னரே அது செய்யப்பட்டதால், மக்களின் மனதில் அதுவே ஆழமாகப் பதிந்தது. அதனால் அனைவரும் அவருக்கே வாக்களித்தனர்." இவ் உதாரணம், பிரச்சாரச் செலவினத்தின் சரியான நேரமும் காட்சிப்படுத்தலும் நீண்டகாலச் சமூக ஈடுபாட்டை எவ்வாறு விஞ்சிவிடக்கூடும் என்பதை விளக்குகிறது. ஆண்களை விடப் பெண்கள் இச் சிக்கலை மிகத் தீவிரமாக எதிர்கொள்கின்றனர். ஏனெனில், சராசரியாக அவர்களுக்குத் தனிப்பட்ட சொத்துக்கள், கட்சி செலவுகள் மற்றும் நன்கொடையாளர் வலையமைப்புக்களுக்கான அணுகல் குறைவாகவே உள்ளது. இதன் விளைவாக, பல வருடங்களாகச் சமூகப் பணியாற்றிய போதிலும், தேர்தலுக்கு முன்னதாகப் பெரிய அளவிலான அல்லது கடைசி நிமிடத் தலையீடுகளைச் செய்வதற்கான செலவுத் திறன் அவர்களுக்குக் குறைவாகவே காணப்படுகிறது.

தேர்தல் போட்டியின் பொருள்சார் பரிமாணம், பாலின ரீதியான சமத்துவமின்மையை மேலும் வலுப்படுத்துகிறது. பதுளையில் உள்ள ஒரு பெண் அரசியல்வாதி இதனை இவ்வாறு விளக்கினார்: "பொருட்களையும் பணத்தையும் கொடுத்த வேட்பாளருக்கே மக்கள் வாக்களித்தனர். என்னுடன் போட்டியிட்ட மற்றொரு வேட்பாளர் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அரிசிப் பொதிகளையும் *5,000* ரூபாயையும் கொடுத்தார். அதனால் மக்கள் எனக்கு வாக்களிக்கவில்லை." இதேபோல், மட்டக்களப்பில் வாக்காளர்களின் நிதி சார் எதிர்பார்ப்புகள் மிக வெளிப்படையானதாகவும் உடனடியானதாகவும் காணப்படுகின்றன. ஒரு பெண் அரசியல்வாதி தான் எதிர்கொண்ட நேரடிச் சவாலை விவரித்தார்: "அவர்கள் எமது முகத்திற்கு நேராகவே சொல்கிறார்கள். 'நீங்கள் வெற்றி பெற்றால் உங்கள் பணத்தை நீங்கள் சம்பாதிப்பீர்கள். எனவே உங்களை அதிகாரத்திற்கு கொண்டு வர எங்களுக்கு இப்போதே குறைந்தது பத்தாயிரம் ரூபாயாவது கொடுங்கள்' என்று கூறுகிறார்கள்" யாழ்ப்பாணத்தில், சில பிரச்சார உதவியாளர்கள் தமது ஆதரவிற்காக பணப் பிரதிபலனை எதிர்பார்ப்பதாகவும், பணம் மறுக்கப்படும்போது உதவுவதிலிருந்து விலகிக் கொள்வதாகவும் பெண் அரசியல்வாதிகள் குறிப்பிட்டனர்: "நாங்கள் உதவி கேட்கும்போது, அதற்குப் பதிலாக தங்களுக்கு என்ன கிடைக்கும் என்று அவர்கள் கேட்கிறார்கள். நாங்கள் எதையும் வழங்காவிட்டால், அவர்கள் உதவிக்கு வரமாட்டார்கள்... அதேபோல் அவர்கள் எங்களிடம் ஏதேனும் பிரதிபலனை எதிர்பார்த்தால், நாங்கள் அவர்களிடம் உதவி பெறுவதைத் தவிர்க்கிறோம்."

அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள பெண் அரசியல்வாதிகள், பிரச்சாரங்களின் போது மதுபானம் வழங்கப்படுவது குறித்த எதிர்பார்ப்புகளைப் பற்றிப் பேசியுள்ளனர். மொனராகலையைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி இவ்வாறு விளக்கினார்: "எனது பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்க நான் யாருக்கும் மதுபானம் கொடுக்கவில்லை. ஆனால், உதவிக்கு வந்த தனது நண்பர்கள் சிலருக்கு எனது கணவர் மதுபானம் வழங்கினார்." அதே மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொருவர் குறிப்பிட்டார்: "எதிர்க்கட்சியிலிருந்து ஒரு ஆண் போட்டியிட்டார். அவர் அனைவருக்கும் மதுபானம் கொடுத்தார். உணவு மற்றும் பானங்களுக்காக நிறையச் செலவு செய்தார். இளைஞர்களிடையே, பெண்களுக்கு உதவுவதில் எந்தப் பயனும் இல்லை, ஏனென்றால் தங்களுக்கு குடிப்பதற்கு ஒன்றுமே கிடைக்காது என்ற எண்ணம் நிலவுகிறது."

தேர்தல் பிரச்சார நிதியில் நிலவும் பாலின ரீதியான பாகுபாடுகள், நேரடியாக வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்குவதோடு முடிந்துவிடுவதில்லை. ஆண்கள் பெரும்பாலும் காலப்போக்கில் சமூக ஆதரவை ஒருங்கிணைக்கப் பொருள்சார் தலையீடுகளை மூலோபாய ரீதியாகப் பயன்படுத்துகின்றனர். பதுளையில், ஓர் ஆண் அரசியல்வாதி பாடசாலை விளையாட்டுத்துறைக்கு முதலீடு செய்வதையும், உள்ளூர் இளைஞர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்களை வழங்குவதையும் ஒரு வெற்றிகரமான அணுகுமுறையாக வெளிப்படையாக விவரித்தார். இத்தகைய நடைமுறைகள், மக்களிடையேயான வெளிப்பாடு, ஆதரவாளர் வட்டாரங்கள் மற்றும் பொருள்சார் நன்மைகள் ஆகியவை தேர்தல் வெற்றியுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ள ஒரு பரந்த அரசியல் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்றன. இது நிதி ரீதியாக அதிக வலிமை கொண்ட வேட்பாளர்களுக்குச் சாதகமாகவே முடிகிறது.

இந்தச் சமூகச் செயல்பாடுகளின் ஒட்டுமொத்த விளைவு என்பது, ஏற்கனவே நிலவும் சமத்துவமின்மைகளை மேலும் விரிவுபடுத்துவதாகும். பெண்கள் பன்முகத்தன்மை கொண்ட தடைகளை எதிர்கொள்கின்றனர்: சமூக நெறிமுறைகள் பெரும்பாலும் அவர்களின் நடமாட்டம், பொது ஈடுபாடு மற்றும் முறைசாரா அரசியல் வட்டரங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துகின்றன. அதேவேளையில், நிதி நெருக்கடிகள், ஆண் வேட்பாளர்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் மூலோபாயத் தலையீடுகளைச் செய்வதற்கான பெண்களின் திறனை முடக்குகின்றன. இதன் விளைவாக, பல ஆண்டுகாலச் சமூகப் பணி, சமூக நம்பிக்கை அல்லது தார்மீக நம்பகத்தன்மை ஆகியவற்றைத் தேர்தல் வெற்றிகளாக மாற்றுவதற்குப் பெண்கள் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது.

சுருக்கமாகக் கூறின், இலங்கையில் தேர்தல் பிரச்சார நிதி என்பது ஒருபோதும் ஒரு நடுநிலையான பொறிமுறை அல்ல. இது தேர்தல்களை நடத்தும் முறையை மட்டுமன்றி, அரசியல் பிரதிநிதித்துவத்தின் சமூகக் கட்டமைப்பையும் தீர்மானிக்கும் ஒரு தீர்க்கமான கருவியாகும். வெளிப்பாடுத்தன்மை, அரசியல் ஆதரவு மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றை ஒன்றிணைப்பதன் மூலம், தேர்தல் பிரச்சார நிதியானது ஒரே நேரத்தில் ஒரு வாயில்காப்பாளராகவும் , ஒரு வலுப்படுத்துபவராகவும் (Amplifier) செயல்படுகின்றது. இது ஆண்களுக்கு ஏற்கனவே இருக்கும் அனுகூலங்களை மேலும் வலுப்படுத்துவதுடன், அரசியலில் உத்தியோகபூர்வமாக பணியாற்ற முனையும் பெண்களுக்குப் பாரிய சவால்களைத் தோற்றுவிக்கின்றது.

### தேர்தல் பிரச்சார நிதியினை ஒழுங்குபடுத்துவதன் முக்கியத்துவம் என்ன?

இலங்கையின் தேர்தல் போட்டிகளில் நிலவும் கட்டமைப்பு ரீதியான குறைபாடுகளைச் சமப்படுத்துவதில், தேர்தல் பிரச்சார நிதி சார் ஒழுங்குமுறை ஒரு முக்கியமான பொறிமுறையாக உருவெடுத்துள்ளது. பிரச்சாரச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம், தனிநபர் செல்வம் அல்லது ஆதரவாளர் வலையமைப்புகளைச் சார்ந்திருப்பதை இச் சட்டம் குறைக்கிறது. இது, வேட்பாளர்கள் தமது நிதி வலிமையை விட, திறமை, மக்களிடையேயான வெளிப்பாடு மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் போட்டியிட ஊக்குவிக்கிறது. இத்தகைய விதிமுறைகள், குறிப்பாகப் பெண்களுக்குச் சமமான களத்தை உருவாக்க உதவுகின்றன. ஏனெனில், பெரிய அளவிலான பிரச்சாரச் செலவுகளுக்குத் தேவையான வளங்களை அணுகுவதில் பெண்கள் பெரும்பாலும் கட்டுப்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

பதுளையைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி இது குறித்துக் குறிப்பிட்டதாவது:

“தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தும் அந்த விதிமுறை நல்லது. இச் சட்டம் வருவதற்கு முன்பு, பணத்துடன் முச்சக்கர வண்டியில் கிராமங்களுக்குச் சென்று அனைவருக்கும் பணம் கொடுக்கும் ஒரு நன்கு அறியப்பட்ட வேட்பாளர் இருந்தார். இச் சட்டம் வந்த பிறகு, அப்படி நடப்பதை நாங்கள் பார்க்கவில்லை. ஆனால் இப்போது அவர்கள் அதை மறைமுகமாகச் செய்கிறார்கள்...”

இதேபோல், மொனராகலையைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி இச் சீர்திருத்தத்தின் பல்வகையான விளைவுகளைப் பற்றிப் பிரதிபலித்தார்:

“நோக்கம் நல்லது, ஆனால் அது வெற்றிபெறவில்லை... எனது சொந்தக் கட்சியில் இருந்த ஒரு ஆண் வேட்பாளர் தனது பிரச்சாரத்திற்காக 35 லட்சத்திற்கும் மேல் செலவு செய்தார்.”

அரசியல் ஆய்வாளர்களும் தேர்தல் கண்காணிப்பாளர்களும் இலங்கையின் தற்போதைய தேர்தல் பிரச்சார நிதி கட்டமைப்பின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இதன் முக்கிய விமர்சனமாக இருப்பது, சமர்ப்பிக்கப்படும் செலவு அறிக்கைகளின் உள்ளடக்கத்தைச் சரிபார்க்கவோ அல்லது அவற்றின் துல்லியத்தை மீள்-சரிபார்ப்பு செய்யவோ, தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் மூலம் இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதாகும். தற்போதைய சட்டத்தின் கீழ், ஆணைக்குழு அறிக்கைகளை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். அவற்றைச் சுயாதீனமாக கணக்காய்வு (Audit) செய்யும் அதிகாரம் அதற்கு இல்லை. ஆய்வாளர்கள் மீண்டும் மீண்டும் எழுப்பும் அச்சத்தின்படி, யார் வேண்டுமானாலும் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் போலியான தொகைகளைக் குறிப்பிடலாம், அவை கணக்காய்வுக்குட்படாது என்ற நிலை காணப்படுகிறது.

ஓர் அரசியல் ஆய்வாளர் தனது நிபுணத்துவ நேர்காணலில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

“தேர்தல் ஆணைக்குழுவானது, புதிய சட்டத்தின் கீழ் அறிக்கையிடும் தேவைகளை ஒரு சுமையாகக் கருதுவதாகத் தோன்றுகிறது. மேலதிக பணிச்சுமையை திறம்பட கையாள்வதற்கு போதுமான மனித வளங்கள் இல்லாமையை அவர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டுகின்றனர்.” மூன்றாம் தரப்பு செலவினங்கள் அல்லது ஊடக மற்றும் சமூக ஊடக விளம்பரச் செலவுகள் போன்ற அம்சங்களைச் சட்டம் கட்டுப்படுத்தவில்லை என்றும், இது அறிவிக்கப்படாத செலவினங்கள் மூலம் போட்டியில் சமமற்ற நிலையை உருவாக்க இடமளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்கள் அனைத்தும், தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறையின் சாத்தியக்கூறுகளையும் அதன் எல்லைகளையும் ஒருசேர விளக்குகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் வெளிப்படையான வாக்கு விலைக்கு வாங்குதல் போன்ற செயல்களைக் குறைத்து, பிரச்சாரச் செலவுகளுக்கு முறையான எல்லைகளை வகுத்துள்ளன. இருப்பினும், வளங்கள் மற்றும் வலையமைப்புகளை அணுகுவதில் உள்ள அடிப்படைச் சமத்துவமின்மைகளை அவை முழுமையாகத் தீர்க்கவில்லை. தேர்தல் போட்டியில் நீதியை நிலைநாட்டுவதற்கு மட்டுமன்றி, பெண்கள் சமத்துவமான

அடிப்படையில் பங்கேற்பதற்கும் பிரச்சார நிதி ஒழுங்குமுறை அவசியமானது. ஆயினும், வலுப்படுத்தப்பட்ட சட்ட வலுவுறுத்தல் மற்றும் விரிவான கணக்காய்வு வழிமுறைகள் இல்லாமல், இவ் விதிமுறைகளின் செயல்திறன் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். இது பெண் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் பரந்த கட்டமைப்புத் தடைகளை மாற்றியமைக்கும் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

## தேர்தல் பிரச்சார செலவு ஒழுங்குமுறைக்கு இணங்குதல்

### செலவினங்களில் காணப்படும் பாலின வேறுபாடுகள்




பெண் அரசியல்வாதிகள் பெரும்பாலும் உத்தியோபூர்வ உச்ச செலவு வரம்புகளுக்கு உட்பட்டே செயல்படுகின்றனர். இது அவர்கள் விரும்பித் தேர்ந்தெடுத்த ஒன்றாக இருப்பதில்லை. மாறாக, குறைந்த நிதி வளங்களால் ஏற்படும் ஒரு சூழலாகும். மொனராகலை, மட்டக்களப்பு, பதுளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் உள்ள பெரும்பாலான பெண் அரசியல்வாதிகள், தங்களுக்கு வழங்கப்பட்ட உச்ச செலவுக் கட்டுப்பாட்டு எல்லையை விட மிகக் குறைந்த அளவே செலவு செய்ததாகக் குறிப்பிட்டனர். மொனராகலையைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி இது குறித்துக் கூறியது: "நான் செலவுக் கட்டுப்பாட்டு எல்லைக்கு எங்கேயும் நெருங்கிச் செல்லவில்லை. என்னிடம் அந்தளவு பணம் இல்லை. வீட்டிற்கு வீடு செல்லத் தேவையான பெட்ரோலுக்கு மட்டுமே நான் செலவு செய்தேன்." இதற்கு மாறாக, ஆண்கள் பெரும்பாலும் உச்ச செலவுக் கட்டுப்பாட்டு எல்லைகளைக் கட்டாயக் கட்டுப்பாடுகளாகப் பார்க்காமல், நெகிழ்வான வழிகாட்டல்களாகவே கருதுகின்றனர். அதிகப்படியான செலவுகளை அவர்கள் வெளிப்படையான விதிமீறல்களாகக் கருதாமல், பரிசுகளை வழங்குதல் அல்லது சமூக நிகழ்வுகளை நடத்துதல் போன்ற தாராள மனப்பான்மை கொண்ட செயல்களாகவே சித்தரிக்கின்றனர். ஆண்கள் மத்தியில் செலவுகளை உபாயமார்க்க ரீதியாக மறைத்துக் குறிப்பிடுதல் அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், அவர்கள் இணக்கப்பாட்டுடன் இருப்பது போன்ற தோற்றத்தைப் பேணிக்கொண்டே தமது செல்வாக்கை விரிவுபடுத்துகின்றனர். மட்டக்களப்பைச் சேர்ந்த ஓர் ஆண் அரசியல்வாதி இதனை வெளிப்படையாகக் கூறினார்: "அறிக்கையிடல் என்பது ஒரு சம்பிரதாயம் மட்டுமே. எல்லாச் செலவுகளையும் எழுத வேண்டிய அவசியமில்லை... எப்படியும் பெரும்பாலான செலவுகள் மக்களுக்கு உதவுவதற்காகவே செய்யப்படுகின்றன. மக்கள் அதை எங்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள்." என்றார் அவர்.

இருப்பினும், பெண் அரசியல்வாதிகள் என்ற ஒற்றை வகைப்பாட்டிற்குள்ளும் அனுபவங்கள் மாறுபட்டவை என்பதைக் கவனிப்பது அவசியமாகும். நகர்ப்புற மாவட்டங்களைச் சேர்ந்த அல்லது அரசியல் பின்புலம் கொண்ட குடும்பங்களிலிருந்து வரும் பெண்களுக்கு வளங்கள், தொடர்புகள் மற்றும் கட்சி ஆதரவு ஆகியவற்றுக்கான அணுகல் இலகுவாகக் கிடைத்தன. இது அவர்கள் ஆண்களுக்கு இணையாகப் போட்டியிட வழிவகுத்தது. கொழும்பைச் சேர்ந்த ஒரு பெண்

அரசியல்வாதி தனது பிரச்சாரத்தை விவரிக்கும்போது, தனது தினசரி செலவுகள் 100,000 இலங்கை ரூபாய்க்கும் அதிகமாக இருந்ததாகக் குறிப்பிட்டார். இருப்பினும், அவர் சமர்ப்பித்த செலவு அறிக்கை அவர் உண்மையில் மேற்கொண்ட செலவுகளை பிரதிபலிக்கவில்லை. இத்தகைய விதிவிலக்குகள் இருந்தபோதிலும், பெரும்பாலான பெண்கள் தொடர்ந்து கட்டமைப்பு ரீதியான குறைபாடுகளையே எதிர்கொள்கின்றனர். ஆண்கள் தமது வளங்களை பெரிய அளவிலான நிகழ்வுகள், பொருள் விநியோகம் அல்லது சரியான நேரத்திலான தலையீடுகள் என்பவற்றுக்குப் பயன்படுத்தி தங்களை மக்கள் மத்தியில் வெளிப்படுத்திக் கொள்கின்ற அதேவேளை, பெண்கள் பெரும்பாலும் வீட்டிற்கு வீடு சென்று பிரச்சாரம் செய்தல் அல்லது சிறிய சமூகக் கூட்டங்களை நடத்துதல் போன்ற குறைந்த செலவிலான உத்திகளுக்கே மட்டுப்படுத்தப்படுகின்றனர். மொனராகலையைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி இது குறித்துப் கூறும்போது: "நான் எனது பிரச்சாரத்திற்காக *3,500* ரூபாய் மட்டுமே செலவு செய்தேன். மற்றவர்களுக்குக் கடமைப்பட்டிருப்பதைத் தவிர்க்க வெளி நபர் நன்கொடைகளை நான் தவிர்த்தேன். இது என்னைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதித்தாலும், மிகச் சிலரே எனது பிரச்சாரத்தைக் கவனித்தனர்." என்றார் அவர்.

### சட்டம் சார்ந்த அறிவும் விழிப்புணர்வும்

தேர்தல் பிரச்சார நிதி சார் விதிகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் புரிதலில் தெளிவான பாலினப் பாகுபாடுகள் காணப்படுகின்றன. அனைத்து மாவட்டங்களிலும், ஆண்கள் பொதுவாக இவ்விதிகள் குறித்துப் போதிய அறிவைக் கொண்டிருந்த வேளையில், பல பெண்கள் அடிப்படை அறிவைக் கூடக் கொண்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில், பெண்கள் முழுமையாகத் தங்களது ஆதரவாளர்களையே தங்கியிருந்தனர். இது அவர்களது சட்ட அறிவு மற்றும் விழிப்புணர்வு மிகக் குறைந்த மட்டத்தில் இருக்கக் காரணமாக அமைந்தது. மட்டக்களப்பில் உள்ள பெரும்பாலான பெண் அரசியல்வாதிகள் இத்தகையதொரு சட்டம் இருப்பதை ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை என்று தெரிவித்தனர். அதற்குப் பதிலாக, அனைத்து ஆவணப் பணிகளையும் கையாள்வதற்கு அவர்கள் கட்சி அதிகாரிகள் அல்லது ஆண் ஆதரவாளர்களையே நம்பியிருந்தனர். மட்டக்களப்பைச் சேர்ந்த இரு பெண் அரசியல்வாதிகள்

இதனை இவ்வாறு விளக்கினர்:

"நாங்கள் இருவரும் ஒரு முகவர் நிலையத்தில் *(Agency)* வேலை செய்கிறோம். எங்களது மேலதிகாரி எங்களை தேர்தலில் போட்டியிடுமாறு கூறினார். நாங்கள் எமது பெயர்களையும் கையொப்பங்களையும் மட்டுமே வழங்கினோம். மற்ற அனைத்தையும் அவரே கையாண்டார். எனது பிரச்சாரத்திற்காக எவ்வளவு செலவிடப்பட்டது என்று எனக்குத் தெரியாது. ஏனென்றால் அவரே எல்லாவற்றையும் செய்தார்."

இதேபோல், மொனராகலை மாவட்டத்தில் ஒரு பெண் அரசியல்வாதி குறிப்பிட்டதாவது:

"தேர்தல் செலவுகளை நிரப்புவதற்கான படிவம் ஒன்று எமக்குக் கிடைத்தது. நான் அதில் எனது பெயரை எழுதி கையொப்பமிட்டு அரசியல் கட்சியிடம் கொடுத்துவிட்டேன். அரசியல் கட்சியே விபரங்களை நிரப்பி அனுப்பிவிடும்."

இந்தக் கருத்துக்கள், பெண் வேட்பாளர்களின் தேர்தல் நடைமுறைகள் மீதான ஈடுபாடு வெறும் நிர்வாக ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருப்பதையும், ஆவணப்படுத்துதல் மற்றும் சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயல்படுதல் தொடர்பான முக்கியமான வேலைகள் பெரும்பாலும் கட்சி அதிகாரிகள் அல்லது ஆண் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்படுவதையும் காட்டுகின்றன. இதன் விளைவாக, இச்செயற்பாடுகளில் அவர்களின் பங்கேற்பு என்பது பெரும்பாலும் அடையாளபூர்வமான ஒன்றாகவே இருந்தது. அது சுயாதீனமான புரிதல் அல்லது கட்டுப்பாட்டின் அடிப்படையில் அமையாமல், கட்சி கட்டமைப்புகளின் ஊடாகவே தீர்மானிக்கப்பட்டது.

பதுளை மாவட்டத்தில், வேட்புமனுத் தாக்கல் செய்தபோது பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்களை வாசித்ததன் காரணமாக, ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலரும் தேர்தல்

நிதி ஒழுங்குமுறைச் சட்டங்கள் குறித்து ஓரளவு விழிப்புணர்வுடன் இருந்தனர். இருப்பினும், அங்கும் மொழிசார் தடைகள் தொடர்கின்றன. பிரச்சார நிதி விதிகளை விளக்கும் தகவல் தொகுப்புகள் மூன்று மொழிகளிலும் வழங்கப்பட்டாலும், உத்தியோகபூர்வ செலவு உறுதிப்படுத்தல் படிவங்கள் (Expense declaration forms) சிங்கள மொழியில் மட்டுமே வழங்கப்பட்டன. இதன் விளைவாக, தமிழ் மொழி பேசும் அரசியல்வாதிகள், குறிப்பாகப் பெண்கள், படிவங்களை நிரப்பி சமர்ப்பிக்கத் தங்களின் அரசியல் கட்சிகளைச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. இது நடைமுறை அறிவு என்பது எப்படி நடைமுறை தனித்தியங்குதலுக்கு வழிவகுக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. சில சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு, மொழி மற்றும் நிர்வாக ரீதியான தடைகளுடன் கட்சி அமைப்புகளுக்குள் வேரூன்றியுள்ள பாலினப் படிநிலைகளும் இணைந்து, தேர்தல் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளில் அவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்வதைத் தடுக்கின்றன. இதன் விளைவாக, பெண்களின் அரசியல் ஈடுபாடானது கட்சி வலையமைப்புகள் மூலம் வழிநடத்தப்படும் ஒரு மத்தியஸ்த பங்கேற்பாக (Mediated participation) மட்டுமே எஞ்சியுள்ளது. இது பெண்களை வலுவாட்டுவதற்குப் பதிலாக, நிறுவன மற்றும் மொழி சார்ந்த புறக்கணிப்புகளின் ஊடாக அவர்கள் மற்றவர்களில் தங்கியிருக்கும் நிலையையே தொடர்ந்தும் உறுதிப்படுத்துகின்றன.

பொதுவாக, தேர்தல் பிரச்சார நிதிச் சட்டம் குறித்த விழிப்புணர்வு வேட்பாளர்களின் கல்விப் பின்னணி மற்றும் அவர்கள் வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட விதம் ஆகியவற்றைப் பொறுத்து பெருமளவில் மாறுபட்டிருந்தது. முறையான கல்வி அறிவு குறைவாக உள்ள பெண்களுடன் ஒப்பிடுகையில், உயர்கல்வி கற்ற பெண்கள் இச்சட்டம் குறித்து அதிக விழிப்புணர்வுடன் இருந்தனர். அதேபோல், 25 சதவீத இட ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்வதற்காகப் புதிதாகப் பரிந்துரைக்கப்பட்ட பெண்களை விட, நீண்டகாலமாக அரசியலில் ஈடுபட்ட பெண்கள் இச்சட்டம் குறித்து அதிக விழிப்புணர்வுடன் உள்ளனர். சிவில் சமூக அமைப்புகளினால் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றமையும் சில அரசியல்வாதிகளிடையே விழிப்புணர்வு மட்டம் உயர்வதற்குப் பங்களிப்பு செய்துள்ளது. இருப்பினும், இவை பிரதிநிதித்துவக் கணக்கெடுப்பை (முழுமையான மாதிரி அளவீடு) விட பண்பியல் அவதானிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதால், மாவட்ட வாரியான விழிப்புணர்வு நிலையைத் துல்லியமாகப் பொதுமைப்படுத்தவோ அல்லது வரையறுக்கவோ முடியாது.

## விருந்தோம்பலுக்கும் பிரச்சாரச் செலவுக்கும் இடையிலான ஓர் ஒப்பீடு

இலங்கையின் அரசியல் பிரச்சாரங்கள், விருந்தோம்பல் மற்றும் தாராள மனப்பான்மை போன்ற பரந்த கலாச்சார நடைமுறைகளுடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. அன்றாட வாழ்க்கையில், விருந்தினர்களை உபசரிக்கும்போது தேநீர், உணவு அல்லது சிறிய பரிசுகளை வழங்குவது அவசியமாகக் கருதப்படுகிறது. அத்தகைய உபசரிப்புகளை மறுப்பது அவமரியாதையாகக்கூடப் பார்க்கப்படலாம். இந்தக் கலாச்சார எதிர்பார்ப்பு தடையின்றி அரசியல் களத்திலும் ஊடுருவுகிறது. இதனால் சாதாரண விருந்தோம்பலுக்கும் பிரச்சாரம் தொடர்பான செலவினங்களுக்கும் இடையில் வேறுபாடு காண்பது கடினமாகிறது. மொனராகலையைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி இது குறித்து விளக்குகையில்: “எமது கலாச்சாரத்தில், யாராவது வீட்டிற்கு வரும்போது அவர்களை வெறும் கையுடன் அனுப்ப முடியாது. நீங்கள் தேநீர் கொடுப்பீர்கள். ஏதாவது சாப்பிடக் கொடுப்பீர்கள். ஆனால் தேர்தல் காலத்தில், இதே நடைமுறை ஒரு பிரச்சாரச் செலவாக மாறுகிறது.” என்றார்.

கலாச்சாரம் மற்றும் அரசியலுக்கு இடையிலான இந்த மங்கலான எல்லை என்பது, மத நிகழ்வுகளில் உணவிற்கான அனுசரணை வழங்குதல், விளையாட்டுப் போட்டிகளில் சிற்றுண்டிகளை விநியோகித்தல் அல்லது பிறந்தநாள் கூட்டங்களை ஏற்பாடு செய்தல் போன்ற வழக்கமான தாராள மனப்பான்மை கொண்ட செயல்கள் தேர்தல் உத்திகளாக மாறுகின்றன என்பதாகும். இத்தகைய செயல்கள் பெரும்பாலும் சமூகங்களால் எதிர்பார்க்கப்படுகின்றன. இதனால் அரசியல்வாதிகள் இவற்றைத் தவிர்ப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாகிறது. மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி குறிப்பிட்டதாவது: “ஆண்கள் அரசியல் செலவுகளை மறைப்பதற்குச் புத்திசாலித்தனமான வழிகளை வைத்திருக்கிறார்கள். உதாரணமாக பணத்திற்குப் பதிலாக மதுபானக் கடைக்கான டோக்கன்களை (*Tokens)* வழங்குகிறார்கள். இதைப் பற்றி எங்களுக்குத் தெரியும். ஆனால் நாங்கள் இது குறித்து புகார் அளித்தால், ஏழைகளுக்குக் கிடைக்கும் நன்மைகளைத் தடுத்ததாக மக்கள் எங்களையே குற்றம் சாட்டுவார்கள். இதனால் எங்களிடம் இருக்கும் ஒரு சில வாக்குகளையும் நாங்கள் இழக்க நேரிடும்.” இத்தகைய நடைமுறைகள் பெரும்பாலும் ‘மக்களுக்கு உதவுதல்’ என நியாயப்படுத்தப்படுகின்றன. இது கண்காணிப்புப் பணிகளைக் கடினமாக்குவதுடன், கலாச்சாரக் கடமை, தனிப்பட்ட தாராள மனப்பான்மை மற்றும் பிரச்சாரச் செலவு ஆகியவற்றிற்கு இடையிலான எல்லைகளை மங்கச் செய்கிறது.

இலங்கையின் தேர்தல் பிரச்சார நிதியை பொறுத்தவரை, செலவுகள் எவ்வாறு அறிக்கையிடப்படுகின்றன என்பது மட்டுமல்ல, ஒரு தேர்தல் பிரச்சாரம் உண்மையில் எப்போது தொடங்குகிறது என்பதும் மிகவும் முக்கியமானதும் தீர்க்கப்படாததுமான கேள்வியாகும். விருந்தோம்பல் மற்றும் பரிசுகளை வழங்குதல் ஆகியவை அன்றாட நடைமுறைகளாக இருக்கும் ஒரு கலாச்சாரச் சூழலில், இந்த எல்லையை வகுக்க அரசியல்வாதிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர். ஒரு மத நிகழ்விற்கு அனுசரணை வழங்குதல், பாடசாலை விழாக்களில் சிற்றுண்டி வழங்குதல் அல்லது திருமண நிகழ்வுகளில் பரிசுகளை விநியோகித்தல் போன்றவை தேர்தலுக்கு நெருக்கமான காலத்தில் இடம்பெறுமாயின், அவை பிரச்சாரச் செலவுகளாகக் கருதப்படலாம். இருப்பினும், இத்தகைய செயல்பாடுகள் கலாச்சாரக் கடமைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளதால், வேட்பாளர்கள் தாங்கள் வெறுமனே ”சமூகத்திற்கு உதவுகிறோம்” என்றே வாதிடுகின்றனர். இந்தத் தெளிவற்ற நிலை, ஒழுங்குமுறை மற்றும் அறிக்கையிடல் ஆகிய இரண்டிற்குமான முதல் பாரிய சவாலாக அமைந்துள்ளன.

அதேவேளையில், பிரச்சார நிதி என்பது சுவரொட்டிகள் அல்லது பேரணிகள் போன்ற வெளிப்படையான செலவினங்களுக்கு அப்பால் மிகவும் சிக்கலான ஒன்றாகும். மட்டக்களப்பைச் சேர்ந்த பெண் அரசியல்வாதிகள், அங்கு ஆண்கள் எவ்வாறு மத அதிகாரத்தை உபாயமார்க்க ரீதியாகப் பயன்படுத்துகின்றனர் என்பதை பின்வருமாறு விவரித்தனர்: “அவர்கள் குடும்பத்தின் மூத்த ஆணைப் பள்ளிவாசலுக்கு அழைத்துச் சென்று, அவருக்குச் சிறிது பணம் கொடுத்து, அந்தக் குடும்பத்தின் அனைத்து வாக்குகளும் அந்த அரசியல்வாதிக்கே கிடைப்பதை உறுதிப்படுத்துவதாகப் பள்ளிவாசலுக்குள் சத்தியப்பிரமாணம் வாங்குகிறார்கள்.” இங்கே பணம், குடும்பச் செல்வாக்கு மற்றும் மத நிறுவனத்தின் புனிதத் தன்மை ஆகியவை ஒன்றாகப் பிணைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், இதனை ஒரு தேர்தல் பிரச்சாரச் செலவாகவா, தனிப்பட்ட நன்கொடையாகவா அல்லது ஒரு கலாசார/மத நடைமுறையாகவா கருதுவது? மதவெளிகளும், விசுவாசப் பிரமாணங்களும் நிதிப் பரிமாற்றங்களுடன் மேலெழும்போது, பிரச்சாரம் என்பதற்கான வரைவிலக்கணமே தெளிவற்றதாகின்றது.

அறிக்கையிடல் அவசியமானதாக இருந்தாலும், அது ஒரு தீவிரமான பொறுப்புக்கூறல் பொறிமுறையாகக் கருதப்படாமல், ஒரு குறியீட்டு நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. மொனராகலையைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி, "இச் சட்டத்தின் நோக்கம் நல்லது, ஆனால் அது வெற்றியளிக்கவில்லை" என்று வெளிப்படையாகக் கூறினார். மாவட்டங்கள் முழுவதுமுள்ள பல வேட்பாளர்கள் இதனை "ஏதோ ஒன்றை நிரப்பி அனுப்பிவிடும்" ஒரு விடயமாகவே விவரித்தனர். இந்தச் செயல்முறையின் வெளிப்படைத்தன்மையற்ற தன்மை இத்தகைய அலட்சியப்போக்கை மேலும் வலுப்படுத்துகிறது. ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலாரையும் சார்ந்த அரசியல்வாதிகள், எது ஒரு சட்டபூர்வமான தேர்தல் பிரச்சாரச் செலவு மற்றும் எது ஒரு "கலாச்சார" அல்லது "சமூக" ரீதியான செலவு எனக் கருதப்பட்டு நிராகரிக்கப்படலாம் என்பது குறித்துக் குழப்பத்தை வெளிப்படுத்தினர். முறையான வழிகாட்டல்கள் இல்லாத நிலையில், வழக்கமான சமூகக் கடமைகளுக்கும் தேர்தல் பிரச்சாரச் செலவுகளுக்கும் இடையிலான எல்லை எல்லைக்கோடு மங்கலாகவே நீடிக்கின்றது. இது நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கும், உண்மையான கள யதார்த்தத்திற்கும் இடையிலான இடைவெளியை மேலும் விரிவுபடுத்துகிறது.

நடைமுறைத் தடைகள் இப்பிரச்சினையைப் பெண் வேட்பாளர்களுக்கு இன்னும் மோசமாக்குகின்றன. உதாரணமாக, பதுளையில் அரசியல்வாதிகள் மொழிசார் அணுகல் குறித்த கவலைகளை மீண்டும் மீண்டும் எழுப்பினர். பிரதேச செயலகத்திடம் இருந்து தமிழ் மொழியில் விளக்க ஆவணங்கள் கிடைத்த போதிலும், உண்மையான செலவு அறிக்கையிடல் படிவங்கள் சிங்கள மொழியில் மட்டுமே வழங்கப்பட்டன. இது பிரச்சார நிதிச் சட்டங்களைச் செயற்படுத்துவதில் சமூக உள்ளடங்கலில் உள்ள ஆழமான தோல்வியை விளக்குகிறது. இதன் விளைவாக, பெண்கள் இடைத்தரகர்களை அதாவது பொதுவாக ஆண்களை சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இது அவர்களின் சுயாதீனத்தன்மையை குலைப்பதுடன், ஆண் ஆதரவாளர்கள் அல்லது கட்சி அதிகாரிகள் மீதான தங்கியிருக்கும் நிலையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இலங்கையின் தேர்தல் நிதி விவகாரங்கள் எவ்வகையிலும் நேரடியானவை அல்ல என்பதை இந்த விடயங்கள் நிரூபிக்கின்றன. ஒரு பிரச்சாரம் எப்போது தொடங்குகிறது என்பது குறித்த நிச்சயமற்ற தன்மை, கலாசாரம், மதம் மற்றும் அரசியல் ஆகியவற்றின் கலப்பு, மற்றும் அறிக்கையிடலை வெறும் சடங்காகப் பார்க்கும் போக்கு ஆகிய அனைத்தும் இணைந்து, ஒழுங்குமுறை நோக்கத்தையே வலுவிழக்கச் செய்கின்றன. குறைந்த வளங்களையும், குறைந்த நிறுவன ஆதரவையும் கொண்ட பெண் அரசியல்வாதிகளுக்கு, இச் சிக்கல்கள் விகிதராசரமற்ற முறையில் மேலதிகச் சுமைகளை ஏற்படுத்துகின்றன.

# முடிவுரை

பெண் அரசியல்வாதிகளின் தேர்தல் பிரச்சார செலவின யதார்த்தங்கள் பெரும்பாலும் அவர்களின் சொந்த விருப்பங்களால் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக, அவர்கள் அரசியலுக்குள் கொண்டு வரப்படும் சூழல்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. 25 சதவீத இட ஒதுக்கீடு என்பது பெண்களுக்கு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், நடைமுறையில் பெரும்பாலான அரசியல் கட்சிகள் இதனை பெண்களைத் தகுதியுள்ள வேட்பாளர்களாக முன்னிறுத்துவதை விட, சட்ட ரீதியான தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு வழியாகவே பயன்படுத்துகின்றன. இதற்கு நேர்மாறாக, ஆண்கள் பொதுவாக நிதி ரீதியாகவோ அல்லது சமூக ரீதியாகவோ பலமான பின்னணியில் இருந்து தெரிவு செய்யப்படுவதுடன், பிரதானமாக வாக்குகளைச் சேகரிப்பவர்களாகவும் நிலைநிறுத்தப்படுகின்றனர். ஆனால், பல பெண் வேட்பாளர்கள் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்ற மிகக் குறைந்தளவிலான எதிர்பார்ப்புடனேயே வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுகின்றனர். இதன் விளைவாக, பெண்களின் பிரச்சாரச் செலவுகள் பொதுவாகக் குறைவாகவே காணப்படுகின்றன. ஏனெனில் அவர்களின் வேட்புமனுக்கள் அரிதாகவே தீவிரமான தேர்தல் போட்டிகளாகக் கருதப்படுகின்றன. மேலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வளங்களும் மிகக் குறைவானவை. இவ் ஆய்வானது முதன்மையாக நிதிப் பலவீனம், இனம் அல்லது கட்டுப்படுத்தும் கலாச்சார நெறிமுறைகளால் பின்தங்கியுள்ள விளிம்புநிலை பெண்களையே மையமாகக் கொண்டுள்ளது என்பதைக் கவனிப்பது அவசியமாகும். எனவே, அரசியல் கலாசார ரீதியாக ஏற்கனவே சாதகமான நிலையில் உள்ள அல்லது காலப்போக்கில் வெற்றிகரமான அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்தி கொண்டுள்ள பெண்களுக்கு இவ் ஆய்வின் முடிவுகள் முழுமையாகப் பொருந்தாமல் போகலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண் வேட்பாளர்களுக்குச் சமமானதொரு போட்டி வெளியை உருவாக்குவதற்கு, தேர்தல் போட்டியின் கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியான தடைகளைத் தகர்ப்பது அவசியமாகும். இதில் மூன்று முக்கிய படிகள் முன்னிற்கின்றன. முதலாவதாக, தேர்தல் நிதிச் சட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படல் வேண்டும். செலவு வரம்புகளை மீறும் வேட்பாளர்கள் காத்திரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதை இது உறுதிப்படுத்தும். தற்போது, இத்தகைய விதிமுறைகள் பலவீனமாகச் செயற்படுத்தப்படுவதாலும், சரியாகப் புரிந்துகொள்ளப்படாததாலும் பயனற்றவையாகவே உள்ளன. இந்த பலவீனமான அமுலாக்கம் பெண்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஏனெனில், சமமான களத்தை உருவாக்க வேண்டிய சட்டங்கள் செயலிழக்கும் போது, பெண்களின் மட்டுப்படுத்தப்பட்ட நிதிச் சுதந்திரம், வளங்களுக்கான போதிய அணுகல் இன்மை மற்றும் ஆண் இடைத்தரகர்களில் தங்கியிருக்கும் நிலை ஆகியவை அவர்களை மேலும் மிக மோசமாகப் பாதிக்கப்படக் கூடியவர்களாக மாற்றுகின்றன. இரண்டாவதாக, அரசியல் கட்சிகள் பெண்களை வெறும் அடையாளப் பூர்வமான இட ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்பவர்களாக (Symbolic placeholders) நடத்துவதை விடுத்து, வெற்றிக்கான உண்மையான வாய்ப்புகளைக் கொண்ட வேட்பாளர்களாக அவர்களை ஆதரிக்க வேண்டும். இத்தகைய நிறுவன ஆதரவு இன்றி, பெண்கள் உத்தியோகபூர்வமாகத் தேர்தலில் போட்டியிட்டாலும், ஆண்களுடன் சமமாகப் போட்டியிட முடியாத கட்டமைப்பு ரீதியான அனுகூலமின்மைகளையே எதிர்கொள்கின்றனர். மூன்றாவதாக, தேர்தல் செலவுகள் அதிகமாக இருக்க வேண்டும் என்ற சமூக எதிர்பார்ப்புகளை மாற்றுவதற்கு, அரசியல் கலாசாரத்துடன் நீண்டகால ஈடுபாடு அவசியமாகும். நம்பிக்கையூட்டும் விதமாக, சில அரசியல் கட்சிகள் பெண்களின் அரசியல் பங்கேற்பின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கியுள்ளன. அண்மைக்கால தேசிய மட்டத்திலான கலந்துரையாடல்கள், மாற்றம் கடினமானது என்றாலும் அது சாத்தியமற்றது அல்ல என்பதை உணர்த்துகின்றன[1].

சட்ட சீர்திருத்தங்கள் மிக முக்கியமானவை என்றாலும், அவை தனித்துச் செயல்படுவதன் மூலம் வெற்றியைத் தந்துவிட முடியாது. வலுவான சட்ட அமுலாக்கம், கலாசார மாற்றம் மற்றும் அரசியல் கட்சிகளின் பொறுப்புணர்வு ஆகியவற்றை ஒன்றிணைப்பதன் மூலமே, பெண்கள் வெறும் இட ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்பவர்களாக அன்றி, சமமான அடிப்படையில் போட்டியிடக்கூடிய ஓர் அரசியல் அமைப்பை நோக்கி இலங்கை நகர முடியும். இறுதியில், தேர்தல் நிதியில் நிலவும் பாலினப் பாகுபாடுகள் மற்றும் பெண்களைப் புறக்கணிக்கும் பரந்த சமூக நெறிமுறைகள் ஆகிய இரண்டையும் கையாளும் சீர்திருத்தங்கள் இல்லாவிட்டால், தேர்தல் போட்டியானது தொடர்ந்தும் சமத்துவமின்மையையே உருவாக்கும். பெண்களின் தன்னாதிக்கம் மற்றும் சட்டபூர்வ அங்கீகாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளுடன் இணைந்த வலுவான தேர்தல் நிதி

1. "எந்தவொரு நாடும் இதுவரை பாலினச் சமத்துவத்தை முழுமையாக அடையவில்லை. முன்நோக்கிய பயணத்திற்குத் தொடர்ச்சியான அரசியல் அர்ப்பணிப்பு அவசியமாகும்" என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார் (பிரதமர் அலுவலகம், 2025). https://www.pmoffice.gov.lk/news.php?para=RU5vekFVR2dpQTd2VGRiMkZUNE4wRUowaFNidmJPMHBKdmdqU29aZ25CU0t0MDE2b0tEa0luemErMFkyeG-dzUQ==

ஒழுங்குமுறைகள், புதிய அரசியல் போக்குகளை உருவாக்க சமூகமும் கட்சிகளும் காட்டும் ஈடுபாடு ஆகிய அனைத்தும் இணைந்து, பெண்களின் பங்கேற்பை வெறும் பெயரளவிலான பிரதிநிதித்துவத்திலிருந்து ஆக்கபூர்வமான அரசியல் ஈடுபாடாக மாற்றும் வல்லமை கொண்டவை. அத்துடன் இது தேர்தல் பிரச்சார நிதிச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் உண்மையான நோக்கங்களையும் நிறைவேற்ற வழிவகுக்கும்.

## பரிந்துரைகள்

பெண்களின் அரசியல் பங்கேற்பு, பிரச்சார நிதிக்கான அணுகல் மற்றும் தேர்தல் பிரச்சார செலவினச் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பின்பற்றுதல் ஆகியவற்றில் அதிக செல்வாக்கு செலுத்துபவர்களாக இவ் ஆய்வில் இனங்காணப்பட்ட நான்கு முக்கிய பங்குதாரர் குழுக்களை மையமாகக் கொண்டு பின்வரும் பரிந்துரைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன: வாக்காளர்கள், பெண் அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சிகள். ஒவ்வொரு பரிந்துரையும் இவ் ஆய்வின் அனுபவபூர்வமான கண்டுபிடிப்புகள் மற்றும் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் அமைந்திருப்பதுடன், பல்வேறு பிராந்தியங்கள் மற்றும் அரசியல் சூழல்களில் பெண்கள் எதிர்கொள்ளும் யதார்த்தங்களைப் பிரதிபலிக்கின்றன. இப் பரிந்துரைகள் கொள்கை வகுப்பு, பரப்புரையாற்றுதல் (Advocacy) மற்றும் நிறுவனச் சீர்திருத்த முயற்சிகளுக்கு வழிகாட்டும் நோக்கம் கொண்டவை. மேலும், இலங்கையில் பெண்களின் அரசியல் பங்கேற்பு, தேர்தல்கள் மற்றும் பிரச்சார நிதி தொடர்பாகப் பணியாற்றும் பயிற்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் நிபுணர்களுடனான கலந்தாலோசனைகள் மூலம் இவை மேலும் மெருகூட்டப்படலாம்.

## 1.0 வாக்காளர்களுடனான ஈடுபாடு

ஜனநாயகப் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கும், அரசியலில் பணத்தின் ஆதிக்கத்தைக் குறைப்பதற்கும் வாக்காளர் கல்வி இன்றியமையாததாகும். பெண்களைத் தேர்ந்தெடுப்பதன் முக்கியத்துவத்தை மட்டுமல்லாமல், தேர்தல் பிரச்சாரச் செலவுகளின் பரந்த தாக்கங்களையும் வாக்காளர்கள் புரிந்துகொள்ள விழிப்புணர்வு திட்டங்கள் உதவ வேண்டும். மிதமிஞ்சிய தேர்தல் செலவினங்கள் என்பது பெரும்பாலும் வேட்பாளர்கள் செல்வாக்குமிக்கவர்களின் ஆதரவில் தங்கியிருப்பதையும், அவர்கள் அதிகாரத்திற்கு வந்தவுடன் தமது தேர்தல் செலவுகளை ஈடுகட்ட முறைகேடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளையும் அடையாளப்படுத்துகின்றன. எனவே, விழிப்புணர்வு பெற்ற வாக்காளர்கள், வாக்குக்காகப் பணம் பெறுதல் மற்றும் நிதி சார்ந்த வாடிக்கையாளர் அரசியல் (Financial clientelism) ஆகியவற்றிலிருந்து அரசியல் கலாசாரத்தைப் படிப்படியாக மாற்றுவதற்கான தகவலறிந்த தெளிவான தெரிவுகளை மேற்கொள்ள தயாராக இருப்பார்கள்.

செயலாக்கக்கூடிய பரிந்துரைகள்

உடனடி நடவடிக்கைகள் (0-6 மாதங்கள்)

### 1.1 வாக்காளர் கருத்துக்கள் குறித்த சான்றுகளை உருவாக்குதல்

☐ பிரச்சாரச் செலவுகள், வாக்கு வாங்குதல் மற்றும் தேர்தல் பொறுப்புக்கூறல் ஆகியவை குறித்த பொதுமக்களின் மனப்பாங்குகளை மதிப்பிடுவதற்கு நாடு தழுவிய ரீதியில் வாக்காளர் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்துதல். இதில் பெண்களின் அரசியல் பங்கேற்பு மற்றும் பெண் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் தடைகள் குறித்த பாலின அடிப்படையிலான கருத்துக்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குறுங்கால நடவடிக்கைகள் (6-24 மாதங்கள்)

### 1.2 ஒருங்கிணைந்த தேசிய வாக்காளர் கல்விப் பிரச்சாரங்களை நடைமுறைப்படுத்துதல்

- வாக்காளர் கருத்துக்கணிப்பின் மூலம் பெறப்பட்ட கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, மிதமிஞ்சிய பிரச்சாரச் செலவுகளால் ஏற்படும் அபாயங்கள் மற்றும் விளைவுகளைத் தெளிவாக விளக்கும் ஒருங்கிணைந்த தேசிய வாக்காளர் கல்விப் பிரச்சாரங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்துதல்.

- இந்த விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் நாடு தழுவிய ரீதியிலும் உள்ளூர் மட்டத்திலும் சீரான தன்மையுடனும், நம்பகத்தன்மையுடனும், பரந்த அளவிலும் சென்றடைவதை உறுதி செய்வதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழு சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து முன்னின்று செயல்பட வேண்டும்.

### 1.3 இலக்கு வைக்கப்பட்ட பன்மொழி ஊடக உள்ளடக்கங்களை உருவாக்குதல்

- தேர்தல்கள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தொலைக்காட்சி நாடகங்கள், குறும்படங்கள், பொதுச் சேவை விளம்பரங்கள் மற்றும் ஆவணப்படக் கூறுகளை தயாரிக்க வேண்டும். இந்த ஆவணங்கள் பணமயமாகும் தேர்தல்களால் ஏற்படும் நீண்டகால சமூகப் பாதிப்புகள் மற்றும் நேர்மைக்கும் பொதுச் சேவைக்கும் முன்னுரிமை அளிக்கும் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதன் ஜனநாயக பெறுமதி ஆகியவற்றை வலியுறுத்த வேண்டும்.

- ஊடக உள்ளடக்கங்கள் பின்வருவனவற்றைத் தெளிவாக விளக்க வேண்டும்:

- வாக்கு வாங்குதல் மற்றும் மிதமிஞ்சிய பிரச்சாரச் செலவுகள் எவ்வாறு பொதுச் சேவை வழங்கலையும் நிர்வாக பலன்களையும் சீர்குலைக்கின்றன என்பது பற்றி.

- வாக்குக்கு பணம் பெறுவது உடனடித் தனிப்பட்ட ஆதாயமாகக் கருதப்பட்டாலும், இறுதியில் பொதுமக்கள் எவ்வாறு தேர்தல்களின் சுமையைச் சுமக்கிறார்கள் என்பது பற்றி.

- தரே்தல் அரசியலில் பெண் வேட்பாளர்கள் ஏன் சமமற்ற நிதித் தடைகளையும், கட்டமைப்பு ரீதியான குறைபாடுகளையும் எதிர்கொள்கிறார்கள் என்பது பற்றி.

- இந்த ஊடக ஆவணங்கள் தேர்தலுக்கு குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னரே வெளியிடப்பட வேண்டும். மேலும், தொலைக்காட்சி, வானொலி மற்றும் டிஜிட்டல் தளங்களில் அதிகமான மக்கள் பார்க்கும் நேரங்களில் இவை மீண்டும் மீண்டும் ஒளிபரப்பப்பட வேண்டும்.

### 1.4 பாடசாலைக் கல்வித்திட்டத்திற்குள் பிரச்சார நிதிக் கல்வியை நிறுவனமயமாக்கல்

- தேசிய கல்வி நிறுவனத்தினால் (NIE) முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய பாடத்திட்ட சீர்திருத்தங்களின் பின்னணியில், பிரச்சார நிதி மற்றும் ஜனநாயகப் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை பாடத்திட்டங்களில் ஒருங்கிணைப்பது குறித்து கருத்துக்களைப் பெறுவதற்காக தேசிய கல்வி நிறுவனம், தொடர்புடைய அமைச்சுக்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் துறைசார் வல்லுநர்களுக்கு இடையே கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல் தொடர்களை ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய கருப்பொருள் பகுதிகள் பின்வருமாறு:

- வாக்காளர் பொறுப்பு மற்றும் ஜனநாயகப் பொறுப்புக்கூறல்.

- பெண்களின் அரசியல் பங்கேற்பு.

- பிரச்சார செலவின ஒழுங்குமுறை மற்றும் நெறிமுறை சார்ந்த தேர்தல் நடைமுறைகள்.

- அனைத்து மாகாணங்களிலும் சீரான மற்றும் பயனுள்ள முறையில் இதனை கற்பிப்பதை உறுதி செய்வதற்காக, தரப்படுத்தப்பட்ட பயிற்சி கையேடுகள் மற்றும் மதிப்பீட்டு ஆவணங்களின் உதவியுடன், குடியியல் கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் (ToT) திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

### 1.5 பல்கலைக்கழகங்களுக்குள் வாக்காளர் கல்வி முன்னெடுப்புகளை விரிவாக்குதல்

- பல்கலைக்கழகங்களுக்குள் வாக்காளர் கல்வித் திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை எளிதாக்குதல்.

- பல்கலைக்கழக மாணவர்களை இலக்காகக் கொண்டு, ஜனநாயகப் பொறுப்புக்கூறல், நெறிமுறை சார்ந்த பிரச்சாரங்கள், பிரச்சார நிதி மற்றும் பெண்களின் அரசியல் பங்கேற்பு போன்ற பகுதிகளில் கவனம் செலுத்தும் விசேட பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்.

- பணமயமான தேர்தல்களால் ஏற்படும் சமூக மற்றும் அரசியல் பாதிப்புகள் குறித்து பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களை ஏற்பாடு செய்தல். இதன் போது, பல்வேறு பிராந்தியங்களில் உள்ள பல்கலைக்கழகங்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் பல்வேறுபட்ட சமூக-பொருளாதார மற்றும் விளிம்புநிலை மக்களின் கருத்துக்களை உள்வாங்குதல்.

- தேர்தல் பிரச்சார செலவு மற்றும் நேர்மையான தேர்தல் தொடர்பான விடயங்கள், ஏனைய இளைஞர்களைச் சென்றடையும் வகையிலான இலகுவான பொது ஊடக உள்ளடக்கங்களாக மாற்றியமைக்கும் மாணவர் தலைமையிலான ஆய்வுகள் மற்றும் சமூக ஊடக முன்னெடுப்புகளை ஊக்குவித்தல்.

### 1.6 சமூக அடிப்படையிலான வாக்காளர் கல்வித் திட்டங்களை வலுப்படுத்துதல்

- வாக்காளர் கருத்துக்கணிப்பின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, கிராம அபிவிருத்திச் சங்கங்கள், இளைஞர் அமைப்புக்கள் மற்றும் மகளிர் அமைப்புக்கள் போன்ற சமூக அடிப்படை அமைப்புகள் ஊடாக உள்ளூர் மட்டத்திலான வாக்காளர் கல்வித் திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்துதல். இவ் அமைப்புகளைத் தொடர்ச்சியான வாக்காளர் ஈடுபாட்டிற்கான உள்ளூர் மையங்களாகப் பயன்படுத்துதல்.

- வாக்கு வாங்குதல் மற்றும் சலுகைகளுக்காக விசுவாசத்தை வெளிப்படுத்தும் (Clientelistic) கொடுக்கல்-வாங்கல் முறைகள் ஆகிய நடைமுறைகள் இயல்பானதாக மாற்றப்படுவதை சவாலுக்கு உட்படுத்தும் வகையில், கிராம மட்டத்திலான முறையான கலந்துரையாடல்கள் மற்றும் பங்கேற்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குச் சமூக ஒருங்கிணைப்பாளர்களுக்கு (Community facilitators) பயிற்சியளித்தல்.

- தனிப்பட்ட சலுகைகளுக்காக வாக்குகளைப் பரிமாறிக்கொள்வதை வெளிப்படையாக ஊக்கப்படுத்துவதைத் தவிர்க்கும் வகையில் திட்ட உள்ளடக்கங்களை வடிவமைத்தல். இத்தகைய நடைமுறைகளை கிராம அபிவிருத்தி, பொதுச் சேவை வழங்கல் மற்றும் சமூக நீதி ஆகியவற்றில் ஏற்படும் நீண்டகால விளைவுகளுடன் இணைத்து விளக்குதல்.

- பொதுவான அபிவிருத்தி முன்னுரிமைகள் குறித்துக் கூட்டுச் சிந்தனையை ஊக்குவித்தல். குறுகிய காலத் தனிப்பட்ட ஆதாயங்களை விட, சமூகத்தின் ஒட்டுமொத்த நன்மைகளின் அடிப்படையில் தேர்தல் முடிவுகளை எடுக்க வாக்காளர்களை ஊக்குவித்தல்.

- பெண்களின் அரசியல் விழிப்புணர்வு, உள்ளூர் தலைமைத்துவம் மற்றும் சமூக மட்டத்திலான பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்கு மகளிர் சங்கங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம் பெண்கள் மற்றும் விளிம்புநிலை குழுக்களின் பங்கேற்பிற்கு முன்னுரிமை அளித்தல்.

## 2.0 பெண் அரசியல்வாதிகளுடன் ஈடுபாடு கொள்ளுதல்

தேர்தல் நிதிச் சட்டம் குறித்த பெண் வேட்பாளர்களின் விழிப்புணர்வு மட்டத்தில், குறிப்பாகப் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மற்றும் கிராமப்புறப் பெண்களிடையே கணிசமான வேறுபாடுகள் இருப்பதை இவ் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. பல பெண் அரசியல்வாதிகள் தமது செலவின அறிக்கைகளை நிறைவு செய்வதற்கு கட்சி அதிகாரிகள் அல்லது ஆதரவாளர்களையே சார்ந்திருந்தனர். இது பெண்களின் சுயாதீனத் தன்மையை சீர்குலைப்பதுடன், அவர்களைச் சட்ட ரீதியான இடர்பாடுகளுக்கும் உள்ளாக்குகின்றது. இவ் இடைவெளிகளைக் களைவதற்கு, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட, நடைமுறைச் சாத்தியமான மற்றும் வலுவாட்டலை மையமாகக் கொண்ட தலையீடுகள் அவசியமாகும்.

செயலாக்கக்கூடிய நடைமுறைகள்:

குறுங்கால நடவடிக்கைகள் (6-24 மாதங்கள்)

2.1 பெண் வேட்பாளர்களுக்கான தேர்தல் முன்தயார்ப்படுத்தல் பயிற்சிகளை நிறுவுதல்

☐ உள்ளூராட்சி மற்றும் தேசியத் தேர்தல்களில் போட்டியிடும் பெண் வேட்பாளர்களுக்காக, மாவட்ட ரீதியிலான தேர்தல் முன்தயார்ப்படுத்தல் பயிற்சிப் பட்டறைகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்ய வேண்டும்.

☐ அனைத்து பெண் வேட்பாளர்களுக்கும் இத்தகைய பயிற்சிகள் குறித்த தகவல்கள் வழங்கப்படுவதையும், அவற்றில் பங்கேற்பதற்கான வாய்ப்பு அளிக்கப்படுவதையும் உறுதி செய்வது மிக முக்கியமானது. ஏனெனில், சில பெண்கள் அடிக்கடி பல முன்னெடுப்புகளுக்கு அழைக்கப்படும் அதேவேளை, மற்றவர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படும் நிலை காணப்படுகிறது.

2.2 சட்ட அறிவை அரசியல் அதிகாரமளித்தலுடன் இணைத்தல்

☐ பயிற்சி நெறிமுறைகள், தேர்தல் பிரச்சார செலவினம் சார்ந்த அறிவினை பின்வரும் இலக்குகளுக்கான ஒரு கருவியாகத் தெளிவாக முன்வைக்க வேண்டும்:

☐ அரசியல் ஆதரவாளர்கள் மற்றும் கட்சித் தரகர்கள் மீதான தங்கியிருக்கும் நிலையைக் குறைத்தல்.

☐ வாக்காளர்கள் மத்தியில் மதிப்பையும், நம்பிக்கையையும் அதிகரித்தல்.

☐ அரசியல் கட்சிகளுக்குள் பெண்களின் அதிகாரத்தை வலுப்படுத்துதல் மற்றும் சமமான அடிப்படையில் போட்டியிடுவதற்கான அவர்களின் திறனை மேம்படுத்துதல்.

☐ மிதமிஞ்சிய பிரச்சாரச் செலவுகளை எவ்வாறு தவிர்க்கலாம் என்பதை வெளிப்படையாக விளக்கும் தடுப்பு உத்திகளை பெண் வேட்பாளர்களுக்கு இத்திட்டங்கள் அறிமுகப்படுத்த வேண்டும். இதில் திட்டமிட்ட நேர முகாமைத்துவம், தொடர்ச்சியான சமூக ஈடுபாடு மற்றும் தன்னார்வலர் அடிப்படையிலான அணுகுமுறைகள் போன்ற ஆக்கபூர்வமான, குறைந்த செலவிலான மற்றும் சட்டத்திற்கு உட்பட்ட தேர்தல் பிரச்சார முறைகளை முன்னிறுத்த வேண்டும். இதன் மூலம், சட்டவிரோதமான அல்லது அதிகப்படியான செலவுகள் இன்றி, அரசியல் அங்கீகாரம், வாக்காளர் ஈடுபாடு மற்றும் தேர்தல் நம்பகத்தன்மை ஆகியவற்றை அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

## 3.0 அதிகாரசபைகளுடன்/அதிகாரிகளுடன் ஈடுபாடு கொள்ளுதல்

பிரச்சார நிதி ஒழுங்குமுறையின் செயல்திறனுக்குப் பலவீனமான அமுலாக்கம் ஒரு முக்கிய தடையாகத் தொடர்கிறது. செலவினங்களைக் குறைவாக அறிக்கையிடுதல், சீரற்ற கண்காணிப்பு மற்றும் மொழித் தடைகள் ஆகியன சட்டத்தைப் பின்பற்றுவதைக் குலைக்கும் கட்டமைப்பு ரீதியான சிக்கல்கள் என இவ் ஆய்வு அடையாளப்படுத்துகிறது.

செயலாக்கக்கூடிய பரிந்துரைகள்:

உடனடி நடவடிக்கைகள் (0-6 மாதங்கள்)

### 3.1 வலுவுறுத்தல் அதிகாரம் மற்றும் நடைமுறைகளை வலுப்படுத்துதல்

- தேர்தல்கள் ஆணைக்குழு பின்வருவனவற்றை உள்ளடக்கிய தெளிவான, பொதுமக்கள் அணுகக்கூடிய அமுலாக்க வழிகாட்டுதல்களை வெளியிட வேண்டும்:
    - கண்காணிப்பு நடைமுறைகள்
    - கணக்காய்வு அளவுகோல்கள்
    - விதிகளைப் பின்பற்றாததற்கான தடைகள்/தண்டனைகள்
- மிதமிஞ்சிய செலவினங்கள் மற்றும் குறைத்து அறிக்கையிடல் ஆகியவற்றை விசாரிப்பதற்காக ஆணைக்குழுவிற்குள் ஒரு விசேட பிரிவை நிறுவ வேண்டும்.
- பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் காலங்களில் சுயாதீனமான செலவினக் கணக்காய்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

## 3.2 வெளிப்படைத்தன்மை மற்றும் மொழி அணுகல்தன்மையை மேம்படுத்தல்

- முழுமையான அணுகல்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில், அனைத்து அறிக்கையிடல் மாதிரிகள் (Templates), வழிகாட்டுதல் குறிப்புகள் மற்றும் சட்ட விளக்கங்கள் ஆகியவை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கிடைக்கக்கூடியதாக மாற்றப்படல் வேண்டும்.

குறுங்கால நடவடிக்கைகள் (6-24 மாதங்கள்)

### 3.3 தொடர்ச்சியான சட்ட அறிவு மற்றும் ஆலோசனைப் பொறிமுறைகளை உருவாக்குதல்

- வேட்பாளர்களுக்கு, குறிப்பாகப் பெண் வேட்பாளர்களுக்கு, நிகழ்நேர வழிகாட்டல்களை (Real-time guidance) வழங்குவதற்காகப் தேர்தல் பிரச்சார செலவினம் தொடர்பான பிரத்யேக உதவி மையம் (Hebdesk) அல்லது துரித அழைப்பு இலக்கத்தை (Hotline) நிறுவுதல்.
- பிரச்சார நிதி மற்றும் தேர்தல் செயல்முறைகள் தொடர்பான விதிமீறல்கள், அச்சுறுத்தல்கள் அல்லது முறைகேடுகளை வேட்பாளர்கள் புகாரளிப்பதற்கு வசதியாக, அணுகக்கூடிய வகையிலான இணையவழிப் புகார் பொறிமுறையை (உ-ம்: Android Application) அறிமுகப்படுத்துதல். இதில் அநாமதேயமாகப் (Anonymously) புகாரளிக்கும் வசதியும் உள்ளடக்கப்படல் வேண்டும்.
- இந்தச் செயல்முறைகளின் நம்பகத்தன்மை மற்றும் நம்பிக்கையைப் பேணுவதற்காக, அரசியல் கட்சிகளுடன் எத்தொடர்பும் இல்லாத சுயாதீனமான, பயிற்சி பெற்ற அதிகாரிகள் அல்லது சட்ட ஆலோசகர்களைக் கொண்டு இச் சேவை மையங்கள் இயங்குவதை உறுதி செய்தல்.

நீண்டகால நடவடிக்கைகள் (2-5 years)

#### 3.4 நிறுவன ரீதியான திறனை வலுப்படுத்த முதலீடு செய்தல்

- தேர்தல்கள் ஆணைக்குழுவின் கண்காணிப்பு மற்றும் புலனாய்வுத் திறனை வலுப்படுத்துவதற்காக அரசாங்கம் பிரத்யேக நிதி ஒதுக்கீடுகளை வழங்க வேண்டும். இதில் போதுமான மனித வளங்களை உறுதிப்படுத்துவதற்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

## 4.0 அரசியல் கட்சிகளுடன் ஈடுபாடு கொள்ளுதல்

கட்டாயமான 25% ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்யவே பல அரசியல் கட்சிகள் பெண் அரசியல்வாதிகளைச் சேர்த்துக் கொள்கின்றனவே தவிர, ஆண்களுக்கு வழங்கப்படும் அதே அளவிலான ஆதரவு, வளங்கள் அல்லது அங்கீகாரத்தை அவர்களுக்கு வழங்குவதில்லை என்பதை இவ் ஆய்வு கண்டறிந்துள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பெண்கள் வெற்றிபெறக்கூடிய பலமான போட்டியாளர்களாகக் கருதப்படாமல், ஒரு அடையாளப் பிரதிநிதித்துவமாகவே பார்க்கப்படுகின்றனர். இச் சமநிலையின்மையைக் களைவதற்கு, அரசியல் கட்சிகள் வெறும் பெயரளவுப் பிரதிநிதித்துவத்திற்கு அப்பால் சென்று, பெண்களின் அரசியல் பங்கேற்பை ஒரு பரந்த ஜனநாயகச் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகக் கருதி அவர்களைச் செயற்திறனுடன் ஆதரிக்க வேண்டும்.

செயலாக்கக்கூடிய பரிந்துரைகள்:

உடனடி நடவடிக்கைகள்(0-6 மாதங்கள்)

#### 4.1 மாறிவரும் அரசியல் கலாசாரம் குறித்து அரசியல் கட்சிகளுடன் ஈடுபாடு கொள்ளுதல்

- ஆதரவாளர் சார்ந்த மற்றும் ஆண்களை மையமாகக் கொண்ட நடைமுறைகளிலிருந்து விலகி, வெளிப்படையான மற்றும் உள்ளடக்கிய அரசியல் கலாச்சாரத்தை நோக்கி நகர்வதை ஊக்குவிப்பதற்காகக் கட்சித் தலைமைகளுடன் கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்தல்.

- 2022 ஆம் ஆண்டின் 'அரகலய'(Aragalaya) போராட்டத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு, பெண் அரசியல்வாதிகளுக்குச் சமமான ஆதரவை வழங்குவதும், பொறுப்புக்கூற வேண்டிய பிரச்சார நிதி நடைமுறைகளும் எவ்வாறு கட்சியின் நம்பகத்தன்மையை அதிகரித்து, சீர்திருத்தத்தை விரும்பும் வாக்காளர்களைக் கவர முடியும் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்துதல்.

குறுங்கால நடவடிக்கைள் (6-24 மாதங்கள்)

### 4.2 வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டங்களை நிறுவுதல்

- பெண் வேட்பாளர்களின் அரசியல் தன்னம்பிக்கை, நிதி திரட்டும் திறன் மற்றும் மக்கள் மத்தியில் அறியப்படும் தன்மை (Public visibility) ஆகியவற்றை வலுப்படுத்துவதற்காக, அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளையும் பெண் வேட்பாளர்களையும் இணைக்கும் உத்தியோபூர்வ வழிகாட்டல் வலையமைப்புகளை (Mentorship networks) உருவாக்குதல்.

- பெண்களின் மூலோபாய, நிறுவன மற்றும் பிரச்சாரத் திறன்களைக் கட்டியெழுப்புவதற்காக அரசியல் கட்சிகளுக்குள் இலக்கு வைக்கப்பட்ட தலைமைத்துவப் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

### 4.3 பெண்களின் அரசியல் அதிகாரமளித்தலை நோக்கி மகளிர் அணிகளை மீள்நோக்குநிலைப்படுத்துவதற்கான பயிற்சிகள்

- அரசியல் கட்சிகளுக்குள் இருக்கும் மகளிர் அணிகள் வெறும் அடையாளப் பாத்திரங்களை வகிப்பதற்குப் பதிலாக, பெண் அரசியல்வாதிகளை ஆதரிக்கவும், அவர்களுக்கு வளங்களை வழங்கவும் மற்றும் அவர்களை முன்னிலைக்குக் கொண்டுவரவும் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகள் என்பதைத் தெளிவுபடுத்துவதற்கான இலக்கு வைக்கப்பட்ட பயிற்சி மற்றும் வசதிப்படுத்தல் திட்டங்களை முன்னெடுத்தல்.

- மகளிர் அணிகளுக்குள் உள்ளகப் பொறுப்புக்கூறல் மற்றும் நிதி நிர்வாகப் பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்குத் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல். இதன் மூலம், அவர்கள் திரட்டும் நிதியானது பொதுவான கட்சி நிதியினாலோ அல்லது முறைசாரா ஆதரவாளர் வட்டாரங்களினாலோ உள்வாங்கப்படாமல், பெண் வேட்பாளர்களின் பிரச்சாரங்களுக்கு வெளிப்படையாகவும் மூலோபாய ரீதியாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

- தேர்தல் போட்டியில் பெண் வேட்பாளர்கள் எதிர்கொள்ளும் கட்டமைப்பு ரீதியான பின்னடைவுகளைக் குறைப்பதற்காக, பிரச்சார வளங்கள், பிரச்சாரத் திட்டமிடல், வழிகாட்டல் மற்றும் மூலோபாய வழிகாட்டல் ஆகியவற்றின் ஊடாகச் சமமான ஒரு களத்தை உருவாக்குவதற்கான பொறிமுறைகளாக மகளிர் அணிகள் செயல்படுவதை உறுதி செய்யும் திறன் மேம்பாடு மற்றும் மனப்பாங்கு மாற்ற முன்னெடுப்புகளை வழங்குதல்.

நீண்ட கால நடவடிக்கைகள் (2-5 ஆண்டுகள்)

### 4.4 சமத்துவத்திற்கான கட்சிக்குள்ளான உள்ளக வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல்

- பெண் வேட்பாளர்களுக்கு நிதி, தளபாட/ஏற்பாட்டு ரீதியான ஆதரவு மற்றும் ஊடக அணுகல் உள்ளிட்ட பிரச்சார வளங்களை நியாயமான முறையில் ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்வதற்காக, கட்சிக்குள்ளான உள்வாரி கொள்கைகளை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

- பெண் அரசியல்வாதிகள் ஆண்களுடன் சமமான அடிப்படையில் போட்டியிடுவதை உறுதி செய்யும் பொருட்டு, இவ் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுவதைக் கண்காணித்து மதிப்பீடு செய்ய வேண்டும்.

# REFERENCES

Agrawal, K. (2021). Reforming political finance for more diversity in political office. International IDEA.

Athukorala, S., Ramanathan, S., Applegate, M., & Bibler, S. (2021, September). Women's political representation in Sri Lanka: Electoral system analysis and recommendations. International Foundation for Electoral Systems (IFES). https://www.ifes.org/publications/womens-political-representation-sri-lanka-electoral-system-analysis-and

Bandarage, A. (2010). Women, Armed Conflict and Peacemaking in Sri Lanka: Towards a political economy perspective. Asian Politics & Policy, 2(4), 653–667.

Bari, F. (2010). Women's political participation: Issues and challenges in Pakistan. United Nations Division for the Advancement of Women.

Bjarnegård, E., Håkansson, S., & Zetterberg, P. (2022). Gender and violence against political candidates: Lessons from Sri Lanka. Politics & Gender, 18(1), 33–61.

Bjarnegård, E., & Zetterberg, P. (2020). Gender and violence against political candidates. Routledge.

Campaign for Free and Fair Elections. (2017). Regulation of campaign finances and the electoral process in Sri Lanka.

Crenshaw, K. (1989). Demarginalizing the intersection of race and sex: A Black feminist critique of antidiscrimination doctrine, feminist theory and antiracist politics. University of Chicago Legal Forum, 1989(1), 139–167.

de Alwis, M. (1995). Gender, politics and the "respectable lady." In P. Jeganathan & Q. Ismail (Eds.), Unmaking the Nation: The Politics of Identity and History in Modern Sri Lanka (pp. 137–157). Colombo: Social Scientists' Association.

de Mel, N. (2001). Women and the Nation's Narrative: Gender and Nationalism in Twentieth Century Sri Lanka. Rowman & Littlefield.

de Mel, N., Peiris, P., & Gomez, S. (2013). Broadening gender: Why masculinities matter—Attitudes, practices and gender-based violence in four districts in Sri Lanka. CARE International Sri Lanka.

Department of Census and Statistics. (2023). Sri Lanka Labour Force Survey: Annual Report 2022. Department of Census and Statistics.

Department of Elections, Sri Lanka. (2024). Parliamentary election 2024 results.

Gunatilaka, R. (2013). To work or not to work? Factors holding women back from market work in Sri Lanka (ILO Working Paper No. 994838403402676). International Labour Organization.

Hattotuwa, S. (2024, August 23). Sri Lanka's official election spending cap is a mockery of the law. LinkedIn.

International Foundation for Electoral Systems. (2022). Women's political representation in Sri Lanka: Electoral system analysis and recommendations [PDF]. https://www.ifes.org/sites/default/files/migrate/ifes_womens_political_representation_in_sri_lanka.pdf

Jalalzai, F. (2013). Shattered, cracked, or firmly intact? Women and the executive glass ceiling worldwide. Oxford University Press.

Jayawardena, K. (1986). Feminism and Nationalism in the Third World. Zed Books.

Jayawardena, K. (2017). Labour, Feminism & Ethnicity in Sri Lanka: Selected Essays. Colombo: Sailfish.

Kodikara, C. (2010, October 18). Why women in politics always matters: A conversation with Chulani Kodikara. Groundviews.

Kodikara, C. (2011, March). Sri Lanka: Where are the women in local government? OpenDemocracy.

Kottegoda, S. (2023). Unpaid care work is work. Polity, 11(1), 85–87.

Krook, M. L. (2010). Why are fewer women than men elected? Gender and the dynamics of candidate selection. Political Research Quarterly, 63(2), 366–380.

Krook, M. L., & Mackay, F. (Eds.). (2011). Gender, politics and institutions: Towards a feminist institutionalism. Palgrave Macmillan.

Liyanage, K. (2018). Women and political parties in Sri Lanka. In A. Shastri & J. Uyangoda (Eds.), Political parties in Sri Lanka: Change and continuity. New Delhi: Oxford University Press.

Muragala Foundation. (2024, February). An assessment of women's political representation through the 25 percent quota in Sri Lanka: Impact and lessons learnt (S. A. Prabha M. Manuratne, H. B. Dassanayake, R. Gamage, & K. Abeygunawardena, Authors). Muragala Foundation.

Nazneen, S. (2018). Binary framings, Islam and struggle for women's empowerment in Bangladesh. Feminist Dissent, 3, 194–230.

Nazneen, S., & Mahmud, S. (2012). Gendered politics of securing inclusive development. BRAC Development Institute.

Paik, S. (2018). 'New' Dalit women and their 'improper' politics. Economic and Political Weekly, 53(24), 16–18.

Peiris, P., & Lecamwasam, H. (2021). Necessary yet insufficient: Women's quota for wider political representation in Sri Lanka. Women and Media Collective.

Peiris, P. (2023). Sri Lanka's bipolarized multiparty system: Democratizing the selection of rulers, not their rule. In S. Iwanaga & G. Sardesai (Eds.), Rethinking parties in democratizing Asia (pp. 195–217). Routledge.

Perera, M. (2024, December 22). Campaign finance law: Concerns over EC's limited powers. The Morning.

Siriwardhana, I. W. (2022). Women's political representation in Sri Lanka: Does finance matter? (Asian Schools Working Paper No. 6). Bandaranaike Centre for International Studies.

Skanthakumar, B. (2024, November 22). Sri Lanka’s people have kicked out the old political class. Jacobin.

Sritharan, N. (2024). Unveiling the margins: Women, caste, class, and post-war development in Sri Lanka’s North and East. In K. N. Ruwanpura & A. M. Saleem (Eds.), Routledge Handbook of Contemporary Sri Lanka (pp. 194–206). Routledge.

Transparency International Sri Lanka (TISL). (2016). Annual report 2015: Electoral integrity and governance in Sri Lanka.

Transparency International Sri Lanka (TISL). (2023). Recommendations on the Election Campaign Finance Bill.

Transparency International Sri Lanka (TISL). (2023). Review of the Regulation of Election Expenditure Act No. 3 of 2023 as per standards for integrity in political finance.

United Nations Population Fund Sri Lanka. (2025, August 22). Barriers to Women’s Political Participation in Sri Lanka: A literature review.

Uyangoda, J. (2012). Minority rights, political inclusion and state reform: The case of Up-Country Tamil community in Sri Lanka. In Social Scientists' Association (Ed.), Reframing democracy: Perspectives on the culture of inclusion and exclusion in contemporary Sri Lanka (pp. 129–162). Colombo: Social Scientists' Association.

Venugopal, R. (2011). The politics of market reform at a time of civil war: Military fiscalism in Sri Lanka. Economic and Political Weekly, 46(49), 67–75.

Welikala, A. (Ed.). (2012). The Sri Lankan Republic at 40: Reflections on constitutional history, theory and practice (Vols. I–II). Centre for Policy Alternatives.

Wickramasinghe, M., & Kodikara, C. (2012). Representation in politics: Women and gender in the Sri Lankan Republic. In The Sri Lankan Republic at 40: Reflections on constitutional history, theory and practice (Vol. 2, Chapter 20). Centre for Policy Alternatives.

Woodward, C. A. (1969). The Growth of a Party System in Ceylon. Brown University Press.

WEDO (Women’s Environment and Development Organization). (2007). Women candidates and campaign finance: Research and policy recommendations.

Transparency International Sri Lanka
366, Nawala Road, Nawala,
Rajagiriya,
Sri Lanka.

Phone: +94 11 4 369 781
Fax: +94 11 2 865 777
Email: tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

twitter.com/tisrilanka
lk.linkedin.com/company/tisrilanka
facebook.com/tisrilanka
instagram.com/transparency_sri_lanka
youtube.com/user/tisrilankatube